# வைகறை வெளிச்சம்

விலை ரூ. 20/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 12 Issue - 03

மார்ச் 2019 - ஜமாத்துல் ஆகிர் - ரஜப் 1440


## நாட்டின் பாதுகாப்பை கோட்டை விட்ட மோடி அரசு



புல்வாமா தாக்குதல்

## நடந்தது என்ன?

## மோடியின் பொய்கள்






## நான் ஏன் பா.ஜ.க வில் இருந்து வெளியேறினேன்?

- விவேகானந்தர் அமெரிக்கா செல்ல உதவிய முஸ்லிம்கள்!
- கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தை அரங்கேற்றியது மோடியே

## பெருமாள் கோயிலில் குஞ்சாலி மரைக்காயர்

بسم الله الرحمن الرحيم

# காஷ்மீர் புல்வாமா தாக்குதலில் நடந்தது என்ன?

கவர் ஸ்டோரி - 17 பக்கம்


04 மோடியின் பொய்கள்

28 பெருமாள் கோயிலில் குஞ்சாலி மரைக்காயர்

30 நான் ஏன் பா.ஜ.க. வில் இருந்து வெளியேறினேன்?

34 சிலுவைப் போர் 2.0

39 எது முதலில்?

42 விவேகானந்தர் அமெரிக்கா செல்ல உதவிய முஸ்லிம்கள்!

46 கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தை அரங்கேற்றியது மோடியே

51 முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி(ரஹ்)

60 இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?


அவர்கள், தங்களிடம் ஞானம் (வேதம்) வந்த பின்னர், தங்களுக்கிடையேயுள்ள பொறாமையின் காரணமாகவேயன்றி அவர்கள் பிரிந்து போகவில்லை; (அவர்கள் பற்றிய தீர்ப்பு) ஒரு குறிப்பிட்ட தவணையில் என்று உம்முடைய இறைவனின் வாக்கு முன்னரே ஏற்பட்டிருக்காவிடில், அவர்களிடையே (இதற்குள்) நிச்சயமாக தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும்; அன்றியும், அவர்களுக்கு பின்னர் யார் வேதத்திற்கு வாரிசாக்கப்பட்டார்களோ நிச்சயமாக அவர்களும் இதில் பெரும் சந்தேகத்தில் இருக்கின்றனர்.(42:14)


# வைகறை வெளிச்சம்

மார்ச் 2019 - ஜமாத்துல் ஆகிர் - ரஜப் 1440

ஆசிரியர்

மு.குலாம் முஹம்மது,M.A., Journalism & Communication

துணை ஆசிரியர்

கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,


All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only


http:/www.facebook.com/vaigaraivelicham

தனி இதழ்: ரூ.20.

ஆண்டுச் சந்தா

உள் நாடு: ரூ.240.

வெளி நாடு: ரூ.3000.

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் **DARUL ISLAM FOUNDATION TRUST** என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

VAIGARAI VELICHAM

52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.

+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darulislam.in



# மோடியின் பொய்கள்

மோடி முதலமைச்சராக இருந்த “போதே குஜராத் மாடல்” எனும் மாய பிம்ப வளர்ச்சியை காட்டி ஊடகங்களை விலைக்கு வாங்கி இந்தியா முழுவதும் ஏமாற்றி வளர்ச்சி,வளர்ச்சி என்று கூறி பிரதமரானார். இந்தியா இதுவரை பார்த்திராத அளவுக்கு, இனியும் இப்படியொரு பிரதமரை பார்த்திட முடியாத அளவிலும் செல்லும் இடமெல்லாம் வாய்க்கு வந்ததை உளறி அதிக பொய்கள் பேசும் பிரதமர் லிஸ்டில் முதல் ஆளாக நிற்கிறார்.

மேடை, மேடையாக மோடியும் அவரது சகாக்களும் அடித்து விட்ட பொய்களையும், அவரது ஆட்சியில் இந்தியா சிதைந்ததையும் ஒவ்வொன்றாக பார்க்கலாம்.

“மோடி தன்னை குஜராத்திலிருந்து வந்த முதலாவது பிரதமர் என்று பொய் கூறி குஜராத் மக்களின் அனுதாபத்தை பெற முயற்சிக்கிறார்”

மோடியும், அவரது சகாக்களின் பொய்களும்...

**2014 - மோடியின் திருமண விவகாரம்**

நரேந்திர மோடி முதலமைச்சராக இருந்த காலக் கட்டத்தில் 2002-2012 வரை நடந்த தேர்தல்களில் தான் திருமணமானவரா, இல்லை திருமணம் ஆகாதவரா என குறிப்பிடவே இல்லை. தேர்தலில் விண்ணப்பிக்க வேண்டிய ஆவணங்களில் கூட எதையும் குறிப்பிடாமல் மறைத்து வந்திருந்தார். ஆனால் 2014 ம் ஆண்டு மக்களவை தேர்தலுக்கு போட்டியிடும் போது தான் தனக்கு திருமணம் ஆனதாகவும், யசோதா பென் என்பவர் தனது மனைவி எனவும் தன் மனுவில்

குறிப்பிட்டிருந்தார். இது சர்ச்சையை உண்டாக்கிய பிறகே மோடிக்கு யசோதா பென் என்பவருடன் திருமணம் ஆனதும், 35 ஆண்டுகள் அவரை விட்டு தனியாக மோடி இருப்பதும் தெரிய வந்தது.

10 ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்தவர் தேர்தல் பிரமாணப்பத்திரத்தில் கூட இதை சொல்லாமல் மறைத்து விட்டார். 35 ஆண்டு காலம் ஒரு பெண்ணை ஒதுக்கி வைத்து விட்டு விவாகரத்தும் வழங்காமல் தன் வீட்டுக்குள்ளேயே ஒரு பெண்ணின் வாழ்வையே கேலிக்குள்ளாக்கியிருக்கிறார். இவர் மேடைகளில் பெண்களின் உரிமை பற்றியும், பெண்ணின் பாதுகாப்பை பற்றியும் பேசுவது மோடியின் "ஜும்லா" வித்தைகளில் ஒன்று. (தி இந்து 14/04/14)

**எளிய ஆடை உடுத்துபவன் - மோடி**

நாடாளுமன்றதேர்தல் பிரச்சாரத்தின் போது ராகுல் காந்தியை, "அவர் செல்வச் செழிப்பில் பிறந்தவர். நான் ரயில் நிலைய மேடைகளில் டீ விற்று வளர்ந்தவன். அவர் பகட்டான ஆடைகளை உடுத்தி வளர்ந்தவர். ஆனால் நான் அப்படி இல்லை." என்று தன்னைப் பற்றி பெருமையாக பேசினார். ஆனால், மோடி பிரதமரானதும் ரூ.10 லட்சம் செலவில் கோட் போட்டுக் கொண்டு ஊர் சுற்றினார். ( தி இந்து 05/09/15)

**கருப்பு பணம் - மோடியின் பொய்**

மோடி பதவியேற்பதற்கு சில காலங்களிலேயே கருப்பு பணத்தை மீட்டுக் கொண்டு வந்து ஒவ்வொரு இந்திய குடிமகனின் வங்கி கணக்கிலும் பதினைந்து லட்சம் தருவதாக கூறினார். ஆனால் நடந்தது என்ன?.. பண முதலைகளுக்கு பாதுகாப்பு கொடுத்து பிளைட் வரை ஏற்றி விட்டு, பல்லாயிரம் கோடி மோசடியில் ஈடுபட்டவர்களான லலித் மோடி, மல்லையா, நீரவ் மோடி போன்றவர்கள் நாட்டை விட்டு ஜாலியாக பறந்து செல்ல உதவினார். ஆனால் விவசாயக்கடன் வாங்கிய விவசாயிகள் அடித்து கொல்லப்பட்டனர்.

**இந்திய வரலாறு, அடிமைத்தனம்: மோடியின் பொய்**

மோடி தனது மக்களவை உரையில், "நம்முடைய 1200 ஆண்டுகளின்அடிமை மன நிலையால், இன்று உயர்ந்த நபர்களை சந்திக்கும் போது கூட எளிமையாக நம்மால் பேசிட முடிவதில்லை" என்றார். இது இந்தியாவின் வரலாற்று ஆய்வாளர்களுக்கு பெரும் குழப்பமாய் இருந்தது. இதுவரை இந்தியாவை பொறுத்தவரை ஆங்கிலேயர் ஆட்சி செய்த 200 ஆண்டு காலம் தான் இந்தியா அடிமைப்பட்ட காலம் என்று அனைத்து வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள். மோடி சொல்லும் 1200 ஆண்டுகளுக்கு விளக்கம் என்னவாக இருக்கும்?

**JNU** பல்கலை கழகத்தின் வரலாற்றாசிரியர் கூறும் போது, இந்துத்துவா அமைப்புகள் இந்தியாவின் அடிமைக் காலம் என்று சொல்லும் போது அதில் முஸ்லிம் மன்னர்களின் ஆட்சியையும் இணைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அது உண்மையில்லை. இருப்பினும் கூட முஸ்லிம்கள் இந்தியாவில் ஆட்சி செய்தது 12ம் நூற்றாண்டிலிருந்து 18ம் நூற்றாண்டு வரையும் மொத்தம் 600 ஆண்டு காலம் தான். 600+200=800. மீதியுள்ள 400 ஆண்டு காலம் நாம் யாருக்கு அடிமையாக இருந்தோம்? அதை மோடி தான் சொல்ல வேண்டும் என்று மோடியின் முகத்திரையை கிழிக்கிறார்.

எப்படியோ இரண்டில் ஒன்று உண்மை. ஒன்று மோடி கணக்கில் படுமோசமாக இருக்க வேண்டும். இல்லையா, பொய் பேசுவதில் வல்லவராக இருக்க வேண்டும். **(Outlook 07/07/2014)**

**ஜம்மு ரயில்வே - மோடியின் பொய்**

இந்தியாவை ஜம்மு &காஷ்மீர் மாநிலத்துடன் முதன் முதலாக ரயில்வே பாதையின் மூலம் இணைத்தது வாஜ்பாய் அரசு என்று மோடி பேசினார். ஆனால் உண்மை?

இந்தியா சுதந்திரம் அடைந்த உடனேயே நேரு முதற்கட்டமாக ஜம்முவை இந்தியாவோடு இணைப்பதற்கு ரயில்வே பாதை அமைக்கும் வேலையை தொடங்கினார். இந்த வேலை நவம்பர் 1949ல் தொடங்கி இந்த பாதையின் ரயில் சேவை 7, ஏப்ரல் 1952 நடைமுறைக்கு வந்தது.

**அறிவியல் - மோடி!**

ஒரு நாட்டின் மக்களை எப்படியெல்லாம் வழி நடத்த வேண்டும் என்று பல தலைவர்களின் பட்டியலை கொடுக்கலாம். ஆனால் எப்படி வழி நடத்தக் கூடாது என்று கேட்டால் தயங்காமல் மோடியின் பெயரை பரிந்துரைக்கலாம்.

நாட்டின் அறிவியலாளர்கள், மருத்துவர்கள் அடங்கிய சபையில் மோடி பேசியது, "மகாபாரதத்தில் கர்ணன் தாயின் வயிற்றிலிருந்து பிறக்கவில்லை. இதற்கு காரணம், அன்றைய காலக்கட்டத்திலேயே மரபணு அறிவியல் இருந்ததால் தான் இது நடந்திருக்கிறது. விநாயகரின் தலையை பாருங்கள், யானையின் தலை பொருத்தப்பட்டிருக்கிறது. அன்றே பிளாஸ்டிக் சர்ஜரி இருந்ததால் தான் இது நடந்திருக்கிறது" என்றார்.

அறிவியல் பாதையில் உலகம் விண்வெளியில் வீடு அமைக்கும் அளவுக்கு முன்னேறிக் கொண்டிருக்கும் காலத்தில் மதநம்பிக்கைகளை உட்புகுத்தி கிஞ்சிற்றும் அறிவுக்கு உட்படாத




நிகழ்வுகளை அறிவாளர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வில் பேசுகிறார். தன் அரசியலுக்கு கர்ணனையும், விநாயகரையும் கூட விட்டு வைக்கவில்லை மோடி. **(The Guardian 28/10/14)**

### 2016 - ஒரே தரம் ஒரே ஓய்வூதியம் இராணுவத்தில் - மோடியின் ஏமாற்று வேலை

இராணுவத்தில் பணிபுரிபவர்களுக்கு ஓய்வூதியத்தில் மாற்றம் கொண்டு வரப்பட்டது. அதற்கு எதிர்ப்பு வலுத்த நிலையில் ஒரே ஓய்வூதியம் கொண்டு வருவதாக மோடி அரசு சொல்லியது. ஒரு கட்டத்தில் இந்த திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு விட்டது. நடைமுறையில் இருக்கிறது என மோடி அறிவித்தார். ஆனால், உண்மை என்ன?

2014க்கு முன் பணிக்கு சேர்ந்தவர்களுக்கு கொடுக்கப்படும் ஓய்வூதியத்தை விட அதற்கு பிறகு சேர்பவர்களுக்கு கொடுக்கப்படும் ஓய்வூதியம் குறைவு. ஆனால் மோடி அரசு இதனை மாற்றி விட்டதாக கூறுகிறது. ஆனால், 2014க்கு பிறகு பணியில் இறக்கும் போது மரணம் அடைந்த வீரர்களின் குடும்பத்திற்கு முன்னால் கொடுக்கப்பட்ட ஓய்வூதிய தொகையை விட குறைவான தொகைதான் கொடுக்கப் பட்டுவருகிறது.

இந்த நிலையில் இதுவரை எவ்வளவு பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது என தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கேட்ட போது நிர்வாகம், இது வரை தர வரிசையில், வேலையின் கால அளவு உட்பட எதையும் முறைப்படுத்தவில்லை என்று பதில் வந்தது. இது எதையும் செய்யாமல் மோடி இது நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு பயனடைந்து வருகிறார்கள் என பேசி வருகிறார். இதில் நாட்டின் இராணுவத்திற்கு மரியாதை தர வேண்டும் என்று மட்டும் மேடைகளில் பேசி விட்டு அவர்களின் நலன் சார்ந்த விடயங்களில் எதையும் செய்யாமல் பொய் பேசிவருகிறார். **(The wire, 04//11/16)**

### 2017 - 1.25 லட்சம் கருப்புபணம் - பறிமுதல்: மோடியின் பொய்

பணமதிப்பிழப்பு நடவடிக்கை மூலம் கிட்டத்தட்ட 1.25 லட்சம் கோடி பணம் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது என்று மோடி தனது பிரச்சார பேரணியில் பேசினார். ஆனால் உண்மை?

1.35 லட்சம் கோடி கணக்கில் கொண்டுவரப்படாத பணம் கண்டு பிடிக்கப்பட்டது உண்மை. ஆனால் அந்த பணம் மாநில அரசுக்கு வரவேயில்லை. பறிமுதல் செய்யப்படவுமில்லை. அதிகபட்சமாக கண்டுபிடிக்கப்பட்ட பணத்திற்கு உரிய வரியும், அபராதம் மட்டுமே பெறப்பட்டது. இதன் மூலம் எந்தவொரு பணமுதலைகளும் பாதிக்கப்பட வில்லை. **(scroll 15/08/17)**

### கடல் விமானம் முதல்பயணி - மோடியின் பொய்

பிரதமர் மோடியின் அதிகாரப் பூர்வ இணைய தள பக்கம், இந்தியாவின் முதல் கடல் விமானத்தில் முதல் ஆளாக பயணம் செய்து பெருமை சேர்த்திருக்கிறார் மோடி என்று செய்தி வெளியிட்டது. ஆனால் உண்மை?

இந்தியாவிற்கு கடல் விமானம் புதியதும் அல்ல. அதே போல் மோடி முதல் பயணியும் அல்ல. 2010ம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் இருக்கும்










போதே உள்நாட்டு விமான போக்குவரத்து துறை அமைச்சராக இருந்த ப்ராபூல் பட்டேல், முதல் கடல் விமானத்தை துவக்கி வைத்து பயணமும் செய்தார். அதன் பிறகு பல பிரபலங்கள் கூட கடல் விமானத்தில் பயணித்து படங்களை பகிர்ந்து கொண்டனர். இந்த நிலையில் கூட மோடியின் இணையதளம் பொய்யான செய்தியை ஆராயாமல் வெளியிட்டிருக்கிறது. இந்த தகவல் எல்லாம் ஊடகங்களில் வெளிவந்த பிறகு கடல் விமானத்தில் பயணம் செய்த பிரதமர் என்று தலைப்பை மாற்றி கொண்டார்கள். (Scroll 12/12/17)

**வரி ஏய்ப்பு செய்த நிறுவனங்களின் உரிமை ரத்து - மோடியின் பொய்**

மோடி தனது பிரச்சார உரையில், இதுவரை அரசால் கண்டுபிடிக்கப்பட்ட வரி ஏய்ப்பு செய்த 1,62,618 நிறுவனங்களின் உரிமைகள் ரத்து செய்திருப்பதாக கூறினார். ஆனால் உண்மை நிலவரம்?

வரி அமலாக்கத்துறை கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தமாகவே வெறும் 1155 நிறுவனங்கள் மட்டும் தான் வரி ஏய்ப்பு செய்வதை கண்டு பிடித்திருப்பதாக அறிக்கை தருகிறது. ஆனால் மோடி தன் கீழுள்ள அமைச்சகத்துக்கு மாற்றாக ஒரு எண்ணிக்கையை சொல்லி ரத்து செய்யப்பட்டதாக பொய் சொல்கிறார். (scroll 15/08/17)

**பெண்கள் பாஸ்போர்ட் பெயர் மாற்றுதல் - மோடியின் பொய்**

திருமணத்திற்கு பிறகு இனி பெண்கள் தங்கள் பெயரை பாஸ்போர்ட்களில் மாற்றத் தேவையில்லை என்று ஏதோ புதிய சட்ட திருத்தத்தை கொண்டு வந்து விட்டது போலவும், பெண்களை அடிமை முறையிலிருந்து மீட்டுவதற்கு ஒரு சட்டம் கொண்டு வந்திட்டது போலவும் பெருமையாக பேசினார். ஆனால் உண்மை?

பெண்கள் திருமணத்திற்கு பிறகு பாஸ்போர்ட்டில் கணவர் பெயர் சேர்க்கும் முறை காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்தே நடைமுறையில் இல்லை. ஏற்கனவே செயல் பாட்டில் இருந்த ஒரு சட்டத்தை தான் அறிமுகப் படுத்தியது போல பொய் பேசுகிறார் மோடி.

**ரம்ஜான் VS தீபாவளி - மோடி அரசியல்**

உத்திர பிரதேச மாநில சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்தில் பங்குகொண்ட மோடி: மாநில அரசு "ரம்ஜானுக்கு என்றால் அதிக மின்சாரத்தை வழங்குகிறது. ஆனால் அதுவே தீபாவளி என்றால் மின்சாரத்தை குறைத்து கொள்கிறது. முஸ்லிம்கள் என்றால் ஒன்று, இந்துக்கள் என்றால் ஒன்றா?" என்று மதங்களுக்குள் கலவரத்தை மேற்கோள்ள பொய் பேசி சென்று விட்டார். ஆனால் உண்மை நிலை வேறு.



ஜூலை 6ம் தேதி கொண்டாடப்பட்ட ரம்ஜானுக்கு உ.பி அரசாங்கம் வழங்கிய மின்சாரம் 13,500 மெகாவாட். அதுவே தீபாவளி 28 அக்டோபரிலிருந்து 1 நவம்பர் வரை கொண்டாடப்பட்டது. 28 அக் தொடங்கி 5 நாட்களிலும், ஒவ்வொரு நாளிலும் 15400 மெகாவாட் மின்சாரம் வழங்கப்பட்டது. ரம்ஜான் தினத்தை விட 2000 மெகாவாட் அதிகமாக மட்டுமல்ல 5 நாட்களுக்கு வழங்கப்பட்டது.

ஆனால் பிரதமர் மோடி, இப்படியான “பொய்களை” கொண்டு மக்களை உணர்ச்சி பெறச் செய்து உ.பி.யிலும் வெற்றி பெற்றார். இப்போது அங்கு யோகி ஆதித்யநாத் தலைமையில் அடாவடி ஆட்சி நடந்து வருகிறது.

**உ.பி. வன்முறையில் முதலிடம் - மோடியின் பொய்**

பிப்ரவரி 5ம் தேதி உபியில் நடந்த தேர்தல் பிரச்சாரத்தில் மோடி: அகிலேஷ் யாதவ் ஆட்சி செய்யும் உ.பி அரசு தான் நாட்டின் வன்முறை நடக்கும் இடங்களில் முதலாவதாக இருக்கிறது. பாஜக ஆளும் மாநிலங்களை பாருங்கள் என பெருமையாக பேசினார்.

ஆனால் உண்மை என்ன? உ.பி மாநிலத்தை விட இந்தியாவின் 27 மாநிலங்களில் வன்முறை விகிதம் அதிகமாக இருக்கிறது என்றே புள்ளிவிவரம் சொல்கிறது. உத்திர பிரதேசத்தை விட மிக அதிகமாக வன்முறை நிகழும் மாநிலங்களாக பாஜக ஆட்சி செய்யும் மாநிலங்கள் இருக்கின்றன.

மோடி சொன்னது - உத்தர பிரதேசத்தில் 24 கற்பழிப்புகள்,21 கற்பழிப்புக்கான முயற்சிகள்,13 கொலைகள், 19 கலவரங்கள்,136 திருட்டுகள் ஒவ்வொரு நாளும் நடக்கிறது. இந்தியாவில் வன்முறையில் முதலிடத்தில் உ.பி இருக்கிறது. இதுதான் அகிலேஷ் யாதவ் அரசின் சாதனை.


உண்மை நிலை-மோடி சொன்ன புள்ளி விவரமே தவறானது. இந்த எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்கே உ.பி.யில் நடக்கிறது. உ.பி. இந்த வன்முறை சம்பவங்களில் முதல் மாநிலமாக இல்லை, உ.பி.யை விட இந்தியாவின் 27 மாநிலங்களில் அதிகமான வன்முறைகள் நடக்கிறது என்பதே NCRB (National Crime Buereu) சொல்லக் கூடிய புள்ளி விவரம். (Scroll 17/02/17)


உ.பி.யில் பாஜகவின் தேசியத் தலைவர் அமித்ஷா பேசியது: உத்திரபிரதேசத்தை விட பா.ஜ.க. ஆட்சி செய்யும் 14 மாநிலங்களில் சட்ட ஒழுங்கு சீராக இருக்கிறது.

உண்மை என்ன? பா.ஜ.க. ஆட்சி செய்யும் 13 மாநிலங்களில் 2015 புள்ளி விவரப்படி, வன்முறையில் 6 மாநிலங்கள் அதிக விகிதத்திலும், கற்பழிப்புகளில் 12 மாநிலங்கள் அதிக விகிதத்திலும், 9 மாநிலங்கள் கடத்தல், 5 மாநிலங்கள் கலவரம், எட்டு மாநிலங்கள் திருட்டிலும் உ.பி.யை விட அதிகமாக இருக்கின்றது. இந்த நிலையில் மோடியும் அவரது சகாக்களும் கவலை கொள்ளாமல் பொய் பேசுகிறார்கள்.(scroll 14/02/17)

**கான்பூர் ரயில் விபத்து: காரணம் தீவிரவாதிகள் - மோடியின் பொய்**

கான்பூரில் ரயில் விபத்துக்குள்ளாகி 150 மக்கள் இறந்தனர். ஆனால் மோடி உபியில் தேர்தல் பிரச்சாரத்தின் போது, ‘இது திட்டமிட்ட தீவிரவாத தாக்குதல். இதனை தீவிரவாதிகள் தான் செய்தனர். இப்படியான சம்பவங்கள் நடக்காமல் இருக்க



பா.ஜ.க.வுக்கு வாக்கு செலுத்துங்கள் என பேசினார்.'

ஆனால் ரயில்வே நிர்வாகமும், விசாரணை அறிக்கைகளும் இது ஒரு விபத்துதானே ஒழிய வேறு இல்லை என்று தெளிவுபடுத்தியது. இருப்பினும் மோடி ஒரு மதப்பிரிவினையை ஏற்படுத்தி இந்தியாவை பிளந்து தன் அதிகாரத்தை பிடிக்க கேவலமான பொய்களை பேசிவருகிறார். **(The Hindu 01/03/17)**

**உ.பி.யின் ஆசிரியர் காலி பணியிடங்கள் - மோடி பொய்**

உ.பி.யில் உள்ள பள்ளிகளில் 50% ஆசிரியர்களின் காலி பணியிடங்கள் நிரப்பப் படாமல் உள்ளது. எங்கே சென்று ஏழை மாணவர்கள் படிப்பார்கள் என்று மோடி தேர்தல் பிரச்சாரத்தில் பேசினார். ஆனால், மோடி பேசியதில் பகுதி உண்மைதான். உ.பி.யில் தொடக்க நிலை பள்ளிகளில் 23% காலி பணிடங்களும், இடைநிலை பள்ளிகளில் 50% இடமும் நிரப்பப்படாமல் உள்ளது.

ஆனால், உ.பி.யை விட பா.ஜ.க. ஆளும் ஜார்கண்ட் மாநிலம் பின்தங்கி 71.7% பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கும் போது தயக்கமே இல்லாமல் உ.பி. அரசை குற்றம் சொல்கிறார் மோடி. தான் ஆட்சி செய்யும் மாநிலத்தில் உள்ள குறைகளை களையாமல் ஊரெல்லாம் சுற்றி அடுத்தவர்களை பற்றி பொய் பேசி சுற்றுகிறார்

**தலித் தாக்குதல் உ.பி. - மோடியின் பொய்**

இந்தியாவிலேயே உத்திர பிரதேசத்தில் தான் தலித்களுக்கெதிரான தாக்குதல் அதிகமாக இருக்கிறது. இதனை பா.ஜ.க. வால் மட்டும் தான் சரி செய்ய முடியும் என்று மோடி உத்திரபிரதேச தேர்தல் பிரச்சாரத்தின் போது பேசினார்.

ஆனால் உண்மை அதுவல்ல, குஜராத் மாடல் என்று பெருமையாக பா.ஜ.க. முன்னிலைப் படுத்திய குஜராத் மாநிலத்தை விட உத்திரபிரதேசத்தில் தலித்களுக்கெதிரான கொடுமைகள் குறைவு என்று புள்ளி விவரம் சொல்கிறது. பா.ஜ.க. ஆளும் மற்ற மாநிலங்களான கோவா, மத்திய பிரதேசத்தை விட உ.பி.யில் தலித்களுக்கெதிரான தாக்குதல் குறைவு தான்

**DBT திட்டம் - மோடியின் பொய்**


மோடி தனது பேரணி உரையில் தனது அரசு நேரடி பயன் பரிமாற்றம் **(Direct Benefit Transfer)** திட்டத்தை கொண்டு வந்ததாகவும் அதன் மூலம் இந்தியாவுக்கு பெரும் பலன் கிடைத்திருப்பதாகவும் பேசினார். தனது சமூக வலைத்தளங்களிலும் இதனை பகிர்ந்திருந்தார். ஆனால், மோடி சொல்வதை போல் இந்த திட்டம் பா.ஜ.க. அரசால் ஆரம்பிக்கப்பட்டதல்ல. முன்னாலிருந்த காங்கிரஸ் அரசுதான் இதனை கொண்டு வந்தது.


2013ம்ஆண்டு பட்ஜெட்டிலேயே இந்த திட்டம் அறிவிக்கப்பட்டு விட்டது. எப்போதும் பொய்யே பேசி பழக்கப்பட்ட பிரதமர் இதிலும் வாய்க்கு வந்ததை அடித்து விட்டார்.

**மெட்ரோ ரயில் - மோடியின் பொய்**


டெல்லியில் ஒரு விழாவில் பேசிய பிரதமர் மோடி இந்தியாவின் முதல் மெட்ரோ பா.ஜ.க. அரசால் தொடங்கப் பட்டது. இதனை தொடங்கியவர் வாஜ்பாய் அவர்கள் என்றார்.

பிரமரின் பேச்சு என்பது எவ்வளவு முக்கியத்துவமானது என்று யாவரும் அறிந்தது.







ஆனால், வரலாற்று நிகழ்வுகளை மோடியை போல் எவரும் தப்பும், தவறுமாக பேசியதில்லை. அந்தளவு வரலாற்று நிகழ்வுகளை தவறாக பேசியிருக்கிறார்.

மெட்ரோ ரயில் திட்டம் இந்தியாவில் முதன் முதலாக 1972ம் ஆண்டு பிரதமராக இருந்த இந்திராகாந்தி அவர்களால் கொல்கத்தா மாநகரத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு தொடங்கப்பட்டது. அதன் பிறகே 2002ம் ஆண்டு வாஜ்பாய் அவர்களால் இந்தியாவின் இரண்டாவது மெட்ரோ ரயில் சேவை டெல்லியில் தொடங்கப் பட்டது. அதுமட்டுமல்ல டெல்லியில் தொடங்கப்பட்ட மெட்ரோ ரயிலுக்கான ஒப்பந்தம் கூட 1995ம் ஆண்டே காங்கிரஸ் அரசால் போடப்பட்டது.

பொய் பேசனும்னு முடிவு பண்ணியதால் அதன் பின்விளைவுகளை பற்றி மோடி கண்டு கொள்வதே இல்லை. பாவம் நாம் தான்.

**அவுரங்கசிப்: காங்கிரஸ் - மோடியின் பொய்கள்**

காங்கிரஸ் தலைவர் மணிசங்கர் ஐயர் ஒரு நிகழ்ச்சியில் பேசிய வீடியோவை கத்தரித்து பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டு பிரதமர் மோடி உட்பட பா.ஜ.க.வின் பல மத்திய அமைச்சர்கள் காங்கிரஸ் தலைவர்களே இது அவுரங்கசீப் ஆட்சி, முகலாயர்களின் ஆட்சி என உடன் படுகிறார்கள் என்று சொல்லாத ஒன்றை பரப்ப ஆரம்பித்தார்கள்.

மணிசங்கர் ஐயர், அவுரங்கசீப், ஷாஜகான் ஆட்சி போல் இப்போது இல்லை ஆட்சியாளர்கள் தேர்தல் முறையிலேயே தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று பேசியிருந்தார். ஆனால் பிரதமர் மோடி, பாருங்கள் அவர்களே தங்களை முகலாயர்கள் ஆட்சி என்று கூறி கொள்கிறார்கள், அவுரங்கசீப் ஆட்சி தங்களுடையது என்கிறார்கள் என தன் கூட்டத்தில் பொய் பேசி மதச்சாயத்தை உருவாக்க முனைந்தார். இப்படி பொய்களை கூறித்தான் பல கலவரங்களையும், கொலைகளையும் முதலமைச்சராக இருந்த போது அரங்கேற்றினார் மோடி.

**பெங்களூரு குப்பை மாநகரம் - மோடியின் பொய்**

கர்நாடகத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட மோடி, அழகான பூங்கா நகரமாக இருந்த பெங்களூரு தற்போது எங்கும் இல்லாத அளவுக்கு குப்பை நகரமாக மாறியிருக்கிறது என்றார். ஆனால் உண்மை? பெங்களூர் வடமாநிலங்களை விட மோசமான நிலையில் இல்லை என்பதே அறிக்கை சொல்லும் தகவல். அது மட்டுமல்ல மோடியின் சொந்த தொகுதியான வாரணாசிதான் உலகத்திலேயே WHO வால் மாசுபட்ட 20 நகரங்களின் பட்டியல்களில் ஒன்றாக இருக்கிறது. உலக அளவில் மாசுபட்ட குப்பை கிடங்கை தனது தொகுதியாக கொண்டிருக்கிற ஒருவர் மற்ற பகுதிகளை குறை கூறி அலைகிறார்.

**இந்தியா பாஸ்போர்ட்: இந்தியா பெருமிதம் - மோடியின் பொய்**

வெளிநாட்டுக்கு செல்லும் இந்தியர்கள் தனது ஆட்சிக்கு கீழ் பாஸ்போர்ட்களை வைத்து பயணம் செய்யும் போது எல்லோராலும் மதிக்கப் படுபவர்களாக மாறியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். ஆனால் உண்மை?..

உலகளவில் பாஸ்போர்ட் தரத்திற்கான தர மதிப்பீடுகளை பொறுத்தே ஒரு நாட்டின் பாஸ்போர்ட்களுக்கான மரியாதையை கணக்கிட முடியும். அதன் படி பார்க்கும் போது மோடி ஆட்சியின் கீழ் தான் இந்த மதிப்பீடு குறைவாக இருக்கிறது.

**600 கோடி ஓட்டு: மோடி**

உலக பொருளாதார மன்றத்தில் உரையாற்றிய மோடி, கடந்த 30 ஆண்டுகளில் முதன் முறையாக 600 கோடி மக்கள் ஓட்டு போட்டு என்னை பிரதமராக தேர்வு செய்திருக்கிறார்கள் என்றார்.

இந்தியாவின் மக்கள் தொகையே 120 கோடி

மட்டும் தான். அதிலும் ஓட்டு போடும் மக்கள் 80 கோடிபேர்தான். இந்த 80 கோடி பேரில் 600 கோடி ஓட்டு பெற்று பிரதமர் ஆனதாக மோடி குறிப்பிடுகிறார். இப்படியொரு அறிவாளி பிரதமரை இந்தியா கொண்டிருப்பதற்கு என்ன தவம் செய்ததோ!

**குஜராத்திலிருந்து முதல் பிரதமர்: மோடியின் பொய்**

குஜராத்திலிருந்து பிரதமராகும் முதல் நபர் தான் மட்டுமே என மோடி தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது கூறினார். ஆனால் உண்மை? இந்தியாவின் வரலாற்றில் நான்காவது பிரதமரான மொரார்ஜி தேசாய் குஜராத்திலிருந்து வந்தவர் தான். ஆனால் மோடி தன்னை குஜராத்திலிருந்து வந்த முதலாவது பிரதமர் என்று பொய் கூறி குஜராத் மக்களின் அனுதாபத்தை பெற முயற்சிக்கிறார்.

**காங்கிரஸ் தலித் பாரபட்சம் - மோடி பொய்**

மோடி தனது கர்நாடக பிரச்சாரத்தின் போது, காங்கிரஸ் கட்சி, ஒரு தலித் குடியரசு தலைவராக வந்து விட்ட காரணத்தாலேயே ஒரு வாழ்த்து கூட சொல்லவில்லை, அப்படிப்பட்ட தலித் விரோத கட்சி காங்கிரஸ் என பேசினார். ஆனால் உண்மை?.

குடியரசு தலைவராக ராம்நாத் கோவிந்த் பதவியேற்ற நாளிலேயே காங்கிரஸ் தலைவர்கள் சோனியா, ராகுல், மன்மோகன் என அனைவருமே வாழ்த்து கூறினர்.

நாட்டில் எந்த கட்சி பிரதமர் பதவி ஏற்றுக் கொண்டாலும் எதிர்க் கட்சி சார்பாக வாழ்த்துக்கள் சொல்வது காலங்காலமாக நடந்து வரும் இயல்பு. இந்த நடை முறையை கூட காங்கிரஸ் பின் பற்றவில்லை. நான் பதவியேற்ற போது வாழ்த்து கூட சொல்லவில்லை என்று மோடி தேர்தல் பேரணியில் புலம்பினார். ஆனால், உண்மையில் மோடி பதவியேற்ற போதே காங்கிரஸ் கட்சியினர் மோடிக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

எப்படியோ உருண்டு பிரண்டு பொய் சொல்லி கர்நாடாகவில் வெற்றி பெற வேண்டும் என வேலை செய்தாலும் இறுதியில் பா.ஜ.க. தோல்வியை தான் சந்தித்தது.

**நேரு, ஜெனரல் திமாயாவை அவமானப்படுத்தினார்- மோடியின் பொய்**

மோடி தனது தேர்தல் பிரச்சாரத்தில் 1948ல் நடந்த பாகிஸ்தான் போரில் வெற்றிக்கு காரணமாக இருந்த ஜெனரல். திமாயா அவர்களை நேருவும், அப்போதைய பாதுகாப்பு துறை அமைச்சராக இருந்த கிருஷ்ணமேனன் அவர்களும் அவமானப்படுத்தினார்கள் என்றார். ஆனால், உண்மை?

மோடிக்கு மிக பிடித்தமான பெயர்களில் முதன்மையானது பாகிஸ்தான். இந்த பெயரை உச்சரிக்காமல் மோடி இருப்பதே இல்லை. தான் தேர்தலில் தோற்றால் அதற்கு பாகிஸ்தான் காரணம். தனது திட்டம் தோற்றால் அதற்கும் பாகிஸ்தான் காரணம் என அந்த பெயரின் மீது மோடிக்கு தீராத காதல் உண்டு. அதனால் அந்த பெயரை சொல்லி மக்களை தூண்டி விடுவதில் அவர் குறை வைப்பதே இல்லை.

சரி மோடி சொன்னது உண்மையா இல்லையா?, 1948 போரின் போது பாகிஸ்தான் போரை வென்று கொடுத்த ஜெனரல். திமாயா, ஜெனரலாக பதவி ஏற்றுக் கொண்டதே மே 1957ம் ஆண்டு தான். ஆம், 1957ல் ஜெனரலாக பதவி ஏற்றுக் கொண்டவரைத் தான் 1948 போரின் வெற்றிக்கு காரணம் என்று மோடி குறிப்பிட்டார். அதே போல் பாதுகாப்பு அமைச்சரான கிருஷ்ணமேனன் பதவிக்காலம் 1957-1962. இருவருக்குமே 1948ல் நடந்த பாகிஸ்தான் உடனான போருக்கும் சம்பந்தம் இல்லை.

அதனால் என்ன? மோடிக்கு பொய் சொல்ல கற்று கொடுக்கவா வேண்டும்?...

**பட்டேல் பிரதமராக இருந்தால் முழு காஷ்மீரகமும் நமது - மோடியின் பொய்**

நேருவுக்கு பதிலாக பட்டேல் பிரதமராக இருந்திருந்தால் முழு காஷ்மீரும் இந்தியாவுடன் தான் இருந்திருக்கும் என்று மோடி தனது தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பேசினார் மோடி. ஆனால், வரலாற்றாசிரியர்கள் அப்போது பட்டேலுடைய நிலைப்பாட்டை கூறி மோடியின் பொய்ப் பிரச்சாரத்தை முறியடித்தனர்.







ஸ்ரீரிநாத் ராகவன், முன்னாள் இராணுவ அதிகாரி மற்றும் வரலாற்று நிபுணர். அவர் சொல்லும் போது பட்டேல் காஷ்மீரை விட்டுக்கொடுத்து ஜுனாகத் மற்றும் ஹைதராபாத் பகுதியை இந்தியாவுடன் இணைப்பதையே விரும்பினார் என்று சொல்கிறார்.

பட்டேல் மற்றும் பாகிஸ்தானின் முதல் பிரதமர் லியாகத் அலி கான் இடையே நடைபெற்ற உரையாடலில் பட்டேல், காஷ்மீரகத்தை பாகிஸ்தானுக்கு கொடுப்பதற்கு தயாராக இருந்தது தெரிய வருகிறது.

வரலாற்றாசிரியர் ராகவன், இத்தோடு நிற்காமல் இன்னொரு தகவலையும் சொல்கிறார். இரு நாடு என்ற பிரிவினை கொள்கையை ஜின்னாவிற்கு 16 ஆண்டுகளுக்கு முன்பே ஆர்.எஸ்.எஸ் தலைவர் சவார்க்கர் எழுப்ப தொடங்கினார். ஆனால் மோடி பிரிவினை மீதான பழியை காங்கிரஸ் மீது போட்டு வெறுப்பு பிரச்சாரத்தை கட்டமைக்கிறார். **(The Quint 08.02.18)**

**காங்கிரஸ் தலைவர்கள் பகத்சிங்கை சந்திக்கவில்லை - மோடியின்பொய்**

விடுதலை போராட்ட வீரர் பகத்சிங் ஆங்கில


Bhagat Singh, Mr. Batukeshwar Dutt, Mr. Jatindranath Das[2] and all the other accused in the Lahore Conspiracy Case, who are on hunger strike. Attempts have been made for many days past to feed forcibly all these hunger-strikers. In the case of some of them, the results of this forcible method were so injurious that, all forcible feeding had to be given up in the face of a greater danger.

Some of the accused are just maintaining a measure of strength on account of forcible feeding which is given twice a day. Others are in a bad way. Those who cannot be forcibly fed, lest they should die under the force used, cannot obviously survive long now if present conditions continue. They are dying slowly from day to day and the final act in the tragedy cannot be long delayed.

The condition of Mr. Jatindranath Das is specially critical. He is very weak and cannot easily move. He speaks in whispers. He is in considerable pain and looks for release in death. Others whose condition is serious are L. Shiv Varma,[3] Mr. Ajoy Kumar Ghosh,[4] and L. Jaidev.[5]

It was very painful for me to meet these extraordinarily brave young men and to see their manifest suffering. I gathered from them that they would adhere to their resolve, whatever the consequences to their individual selves might be. Indeed, they did not care very much for their own selves. They could not undergo such tremendous suffering for a little personal comfort in future. They feel strongly, however, that the lot of political prisoners in India is bad and must be improved

indianhistorypics
@IndiaHistorypic

August 1929 :: Jawaharlal Nehru On His Meeting With Bhagat Singh , Jatindranath Das and Batukeshwar Dutt In Borstal Jail , Lahore

( Photo - Selected Works Of Jawaharlal Nehru Volume 4 /Page 13 )

12:31 PM - May 10, 2018

491  324 people are talking about this

அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் போது காங்கிரஸ் தலைவர்கள் ஒருவர் கூட பகத்சிங்கை நேரில் சந்திக்கவில்லை. விடுதலை வீரர்களுக்கான மரியாதையையும் காங்கிரஸ் செலுத்தவில்லை என்றும் மோடி தேர்தல் பிரச்சாரத்தில் பேசினார்.

காங்கிரஸ் தலைவர்கள் பகத்சிங்கை சந்தித்தார்களா? இல்லையா? என்று தெரிந்து கொள்வதற்கு முன்பு விடுதலை போராட்ட வீரர்கள் பற்றி கவலைப்பட மோடியின் அரசுக்கு என்ன தகுதி இருக்கிறது. இந்திய விடுதலையின் போது இந்திய சுதந்திர போராட்ட வீரர்களுக்கு எதிராக நின்று போராடியவர்கள் சுதந்திர வீரர்களை பற்றி பேசலாமா? இதற்கு மோடி வெட்கப்பட வேண்டும். அதிலும் பொய் பேசிவருகிறார்.

பிரதமர் நேருவும் முக்கியமான காங்கிரஸ் தலைவர்களும் இணைந்து சென்று பகத்சிங்கை நேரில் சிறையில் சந்திக்கிறார்கள். அதுமட்டுமல்ல நேரு பகத்சிங்கிற்கு கடிதங்கள் மூலமும் தொடர்பு கொள்கிறார். பகத்சிங் உடன் நடந்த உரையாடலை கூட தனது புத்தகத்தில் பதிவு செய்திருக்கிறார். ஆக மோடி கூறிய அப்பட்டமான பொய்களில் இதுவும் ஒன்று.

**கடந்த நான்கு ஆண்டுகளில் 35 ஏர்போர்ட்கள் - மோடியின் பொய்**

மோடி தனது தேர்தல் பிரச்சாரத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் தனது ஆட்சியின் கீழ் மொத்தம் 35 ஏர்போர்ட்கள் கட்டப்பட்டிருப்பதாகவும், வருடத்திற்கு 9 ஏர்போர்ட்கள் என கட்டும் பணி விரைவாக நடைபெற்றதாக கூறினார். ஆனால் உண்மை?

மோடியின் ஆட்சியின் கீழ் மொத்தம் வருடத்திற்கு இரண்டு ஏர்போர்ட்கள் என மொத்தம் 7 ஏர்போர்ட்கள் தான் கட்டும் பணி நடந்து வருகிறது. எப்போதும் போல எண்ணிக்கையில் பஞ்சம் பார்க்காமல் தனக்கு பிடித்த நம்பரை சொல்லி விட்டார் மோடி, அவ்வளவு தான்.

**யோகி ஆதித்யநாத் விவசாயக்கடன் - பொய்**

கடந்த 10 மாதங்களில் (2018) மட்டும் ரூபாய்.80000 கோடி விவசாயக் கடன் அளித்திருப்பதாக ஊடகங்களுக்கு பேட்டியளித்தார் உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத். 10 மாதங்களில் 80000 கோடியா என ஆச்சர்யப்பட்ட அனைவருக்கும் யோகியின் மோடி வித்தை பின்னர் தான் தெரிந்தது.

2017-18ம் ஆண்டு காலக்கட்டத்தில் உ.பி. அரசின் சார்பாக மொத்தமே 14,450 கோடி ரூபாய்



தான் கடன் கொடுக்கப்பட்டிருப்பதாக அறிக்கை சொல்கிறது. ஆனால் யோகி பல மடங்கு உயர்த்தி ஊடகங்களில் மோடியை போல் கூச்சமின்றி பொய் பேசியிருக்கிறார்.

**பா.ஜ.க. ஆட்சியின் கீழ்கலவரங்கள் இல்லை: அமித்ஷா**

அமித்ஷா, ஜீ செய்தி ஊடகத்திற்கு பேட்டி கொடுக்கும் போது, இதுவரை பா.ஜ.க. ஆட்சி செய்த மாநிலங்களில் கலவரங்கள் இல்லாத நிலை உருவாகியிருக்கிறது, குஜராத்தில் 27 வருட ஆட்சியில் இருந்திருக்கிறோம், மத்திய பிரதேசத்தில் 15 வருட ஆட்சி, சத்திஸ்கரில் 15 வருட ஆட்சி இந்த மூன்று மாநிலங்களில் நாங்கள் பதவிக்கு வந்த பிறகு ஒரு கலவரம் கூட உருவாகவில்லை என்று கூறினார். ஆனால் உண்மை?

குஜராத் சொல்ல வேண்டிய அவசியமில்லை. 2002 குஜராத் கலவரம் பல்லாயிரம் முஸ்லிம்களை கொன்று குவித்ததில் அரசே முன்னிலையில் நின்றது. தேசிய குற்றங்கள் பதிவு ஆணையத்தின் அறிக்கையின் படி, மத்தியபிரதேசத்தில் மட்டும் 2003-2016 கால கட்டத்தில் 32,050 கலவரங்கள் நடந்திருக்கிறது. சத்திஸ்கர் மாநிலத்தில் 2003 - 2016 காலகட்டத்தில் 12,265 கலவரங்கள் பதிவாகியிருக்கிறது.

இந்தநிலையில் அமித்ஷா பா.ஜ.க. ஆட்சிக்குள்ளான பகுதியில் ஒரு கலவரம் கூட உருவானதில்லை என்று பொய் பேசுகிறார்.

**ஒரு கலவரம் கூட கிடையாது - யோகியின் பொய்**

தான் உத்திரபிரதேசத்தின் முதல்வராக பதவியேற்ற பிறகு தனது மாநிலத்தில் ஒரு கலவரம் கூட நடக்கவில்லை என்று மேடைகளில் பேசுகிறார் யோகி. ஆனால் உண்மை என்ன? உத்திரபிரதேச மாநிலத்தின் உள்துறை அமைச்சகம் 2017ம் ஆண்டில் மட்டும் 195 கலவரங்கள் பதிவாகியுள்ளதாக அறிக்கை தாக்கல் செய்திருக்கிறது.

மாநில அமைச்சகத்தின் ஆவணம் ஒரு தகவலை சொல்லும், ஆனால் யோகி, மோடி, பாஜகவினர் தனக்கு தோன்றுவதை மக்களிடம் பேசி உண்மையை மறைத்து விடுகின்றனர்.

**2500 ஆண்டுக்கு முன் ஜனநாயகம் - மோடியின் பொய்**

இந்தியாவில் 2500 ஆண்டுகளுக்கு முன்னதாகவே வடக்கு பகுதியில் உள்ள பீகாரை ஆட்சி செய்த லிச்சவி என்ற அரசர் ஜனநாயக முறையை கொண்டு வந்து விட்டார். அதனை சுதந்திரத்திற்கு பிறகு காங்கிரஸ் கெடுத்து நாட்டை நாசமாக்கியது என்று மோடி தனது பிரச்சார மேடையில் பேசினார். உண்மை என்ன?

மோடி மற்றும் சங்பரிவார அமைப்புகள் விரும்புவது எல்லாம் லிச்சவி அரசரால் கொண்டுவரப்பட்ட ஜனநாயக முறைதான். அதனையே மீண்டும் கொண்டு வந்தாக வேண்டும் என்று வேலை செய்கிறார்கள். அப்படி என்ன ஜனநாயகம் லிச்சவி மன்னரால் கொண்டு வரப்பட்டது?

லிச்சவி மன்னர் எல்லா மன்னர்களையும் போல வாரிசு முறையிலோ அல்லது தகுதியின் அடிப்படையிலோ ஆட்சியில் அமர்வதை விரும்பவில்லை. அதனால் மக்கள் தேர்ந்தெடுக்கும் முறையை அறிமுகப்படுத்தினார். அவரை பொறுத்த மட்டில் தன் அரசவையில் இருக்கும் உயர் சாதிக்காரர்கள் மட்டுமே மக்கள்.

அதனால் அவர்கள் மட்டும் முடிவு செய்து அரசரை தேர்ந்தெடுக்கும் பழக்கம் உருவாக்கப்பட்டது. அதாவது, எளிய மக்களுக்கு எதிராகவே சிந்தித்த, அடிமைப்படுத்திய மனிதர்கள் இணைந்து அரசரை தேர்ந்தெடுப்பது. இதனையே மோடி ஜனநாயகமுறை என்கிறார்.

இப்படியொரு ஜனநாயக முறையில் தேர்தல் நடந்தால் மீண்டும் சாதிய வட்டத்திற்குள் இந்தியா புகுந்து 3% மட்டும் உள்ள உயர் சாதியினருக்கு ஒட்டுமொத்தமாக மற்றவர்கள் அடிமையாக இருக்க வேண்டியது தான். இந்த முறையை கொண்டு வராமல் நாட்டை சீரழித்து விட்டது

காங்கிரஸ் என்கிறார் மோடி. (scroll 09/02/18)

**விவசாயத்துறையில் மத்திய பிரதேசம் - மோடியின் பொய்**

இந்தியாவிலேயே விவசாயத் துறைகளில் பா.ஜ.க. ஆட்சி செய்த மாநிலமான மத்திய பிரதேசம் தான் முன்னணியில் இருக்கிறது என மோடி பெருமையாக பேசினார். ஆனால் உண்மை?

மத்திய பிரதேசத்தில் உள்ள விவசாயிகள் எல்லாம் மோடி சொல்வதை போல் அவ்வளவு மகிழ்ச்சியாகவா இருக்கிறார்கள்? ஆனால் தேசிய குற்றவியல் அறிக்கை வேற விதமான தகவல்களை தருகிறது. கடந்த 9 ஆண்டுகளில் மட்டும் (2018 முன்பு) 11000 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். 2013ல் 1090பேர், 2014ல் 1198 பேர், 2015ல் 1290பேர், 2016ல் 1321பேர். இப்படி வருடம் வருடம் தற்கொலை எண்ணிக்கையில் 100 பேர் அதிகமாகிக் கொண்டே வரும் அளவுக்கு பா.ஜ.க. அரசின் கீழான ஆட்சி விவசாயத் துறையை முன்னனியில் வைத்திருக்கிறது. (TOI 12/06/17)

**கர்நாடக அரசு: விவசாயிகள் - மோடியின் பொய்கள்**

கர்நாடக அரசு 800 விவசாயிகளுக்கு மட்டுமே கடன் கொடுத்திருக்கிறது என்று கர்நாடக அரசை பற்றி தான் கலந்த கொண்ட விழாவில் பிரதமர் மோடி பேசினார். ஆனால் உண்மை வேறு. கிட்டத் தட்ட 70,000 பேருக்கு 348 கோடி ரூபாய் கடனாக கொடுக்கப்பட்டிருக்கிறது. (The Hindu 28/12/18)




**ஆர்.எஸ்.எஸ்: சவார்க்கர்: மோடி சூழ்ச்சி**

மோடியும் அவரது சகாக்களும் சவார்கர் இறந்த தினத்தில் சவார்க்கரை பற்றி மிகவும் பெருமையாகவும், மிகப்பெரும் விடுதலை வீரர் எனவும் வரலாற்றையே மாற்றி எழுதுவதற்கான வேலையை செய்தனர்.

சவார்க்கர் ஆர்.எஸ்.எஸ் அமைப்பினுடைய நிறுவனர்களில் ஒருவர் அந்த ஆர்.எஸ்.எஸ் இயக்கமும், சவார்க்கரும் இந்தியாவின் சுதந்திரத்திற்காக என்ன தியாகம் செய்தார்கள்? எதற்காக மோடி வகையறாக்கள் மூலம் பெரும் தியாகியை போல் சித்தரிக்கப்படுகிறார்கள்.

1900களில் இந்துமகாசபையின் முதல்தலைவராக இருந்த மூஞ்சே ஜெர்மனி மற்றும் இத்தாலியில் கொடூரமாக சர்வாதிகாரத்தின் மூலம் கூட்டுப் படுகொலை நிகழ்த்தி வந்த முசோலினியை நேரில் சந்திக்கிறார். முசோலியின் பாசிச படையின் உருவாக்கம் மூஞ்சேவை வெகுவாக கவர்கிறது. அதனால் இந்தியாவிலும் இப்படியொரு கொடூரமான படையை உருவாக்கி இந்து நாடாக இந்தியாவை மாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்தியாவில் இருக்கும் இந்து மகா சபா தலைவர்களுக்கு கடிதம் எழுதுகிறார்.

முசோலினியை பார்த்து விட்டு வரும் போது அவரது கொலைக்கார லட்சியத்திற்கு வாழ்த்து தெரிவித்து விட்டு விடைபெற்றார். இந்தியா திரும்பியதும் ஹெட்கேவர் போன்ற இந்து மகாசபா தலைவர்களை அழைத்து முசோலியின் ஆலோசனையுடன் 1930ம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ் என்ற அமைப்பை உருவாக்குகிறார்கள்.

பின்னர், இந்தியாவின் பிரச்சனைகளில் முக்கியமானவை, முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், கம்யூனிஸ்ட்கள் மட்டுமே. இவர்கள் இல்லாத இந்தியாவை உருவாக்குவதே நமது மிக முக்கியமான பணி. அதனால் இந்தியாவிற்கான சுதந்திரத்தில் நாம் தலையிட வேண்டாம் என முடிவு செய்கிறார்கள். அதன் காரணமாக ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு இயக்கத்திலும் பங்கேற்காமல் விலகி நின்றார்கள்.

1929ம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் இந்தியாவின் மூவர்ண கொடியை ஏற்றி இந்தியாவின் சுதந்திரத்திற்கான முழக்கத்தோடு இந்தியா முழுக்க சுதந்திர உணர்வை பதிவு செய்தது. ஆனால் அடுத்த ஆண்டே ஆர்.எஸ்.எஸ் அமைப்பு மூவர்ண கொடிக்கு பதிலாக காவிக் கொடியை ஏற்றி சுதந்திர வீரர்களுக்கு எதிராக நடந்து கொண்டது.

ஆர்.எஸ்.எஸ் அமைப்பினுடைய தேசபக்தி இப்படியானது என்றால், இன்று பாஜகவால் வீர்சவார்க்கர் என்று அழைக்கப்படுபவரின் தேசபக்தி ஒரு படி மேலதிகம். ஆங்கிலேய அரசால் சிறை பிடிக்கப்பட்ட சவார்க்கர் தன்னை வெளியே விடும் படி ஆங்கிலேய அரசுக்கு பல தடவை மன்னிப்பு கடிதம் எழுதி கொடுத்து இறுதியில் ஆங்கிலேய அரசு தன்னை வெளியில் விட்டால் ஆங்கிலேய அரசுக்கு சாதகமாக இருப்பேன் என்று எழுதி கொடுத்து வெளியில் வந்தவர். இவரை

தியாகி போன்று சித்தரிக்கும் வேலையை பாஜக இன்று செய்து வருகிறது. **(Indian Express 31/03/18)**




### 2019 - பெண்களின் பாதுகாப்பு - மோடியின் பொய்

குஜராத்தில் மாணவர்களுடன் உரையாற்றிய மோடி, "தான் ஆட்சிக்கு வந்ததில் இருந்து கற்பழிப்பு போன்ற சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு ஒரு மாதத்திற்குள் கடுமையான தண்டனை வழங்கப்படுகிறது. முன்பெல்லாம் இப்படியான சம்பவங்கள் நடக்கும் போது நாம் தலை குனிய வேண்டியது இருந்தது. ஆனால், நான் ஆட்சிக்கு வந்தவுடன் குற்றவாளிகளுக்கு மூன்று நாள், ஏழு நாள், 11 நாட்கள், ஒரு மாதத்திற்க்குள் மரண தண்டனை வழங்கப்படுகிறது" என்றார்.

இந்தியாவை விட்டு வேறு வேறு நாடுகளுக்கெல்லாம் விசிட் அடித்து கொண்டிருப்பதால் இந்தியாவின் நிலை பற்றி தெரியாமல் பேசுகிறார் என்று எடுத்து கொள்வதா? இல்லை எப்போதும் போல "கப்சா" அடிப்பதில் இது ஒன்று என ஏற்றுக் கொள்வதா என்றே நமக்கு குழப்பம். சரி, உண்மையிலேயே இந்தியாவில் அபப்டியொரு நிலை இருக்கிறதா?.

கடந்த 2004க்கு பிறகு கற்பழிப்பு குற்றத்தில் நிருபிக்கப்பட்ட எவருக்கும் தண்டனை வழங்கப்படவில்லை. 2016ல் தேசிய குற்ற ஆவணப் பணியகம்(NCRB) வெளியிட்டஅறிக்கையில், 55071 கற்பழிப்பு வழக்குகளில் 16,000வழக்குகள் விசாரிக்கப்படாமல் நிலுவையில் இருக்கிறது.

2013ம் ஆண்டு ராஜஸ்தான் காவல்துறை ஒரு வாரத்திற்குள் ஒரு கற்பழிப்பு வழக்கின் குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்தது. இது தான் இந்தியாவில் விரைந்து தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கையாக பெருமையாக பேசப் பட்டது. ஒரு குற்றப்பத்திரிக்கை ஒரு வாரத்திற்குள் தாக்கல் செய்ததே பெரும் நடவடிக்கையாக இருக்கும் நிலையில் ஒரு வருடத்திற்குள் மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது என்று மோடி மாய வித்தை காட்டுகிறார்.

காஷ்மீர் மாநிலத்தில் ஒரு 8 வயது சிறுமி கொடூரமாக கற்பழிக்கப்பட்டு கொல்லப்பட்டது நாடு முழுக்க பரபரப்பை கிளப்பிய நிலையில் பாஜக அமைச்சர்கள் காஷ்மீரில் குற்றவாளிகளுக்கு ஆதரவாக போராடியது மோடியின் ஆட்சியின் கீழ் இந்தியாவை உலகளவில் தலை குனியச் செய்ததே ஒழிய எந்த வகையிலும் தலை நிமிர செய்யவில்லை.

### மோடியின் "நமோ" செயலி: பொய்களின் தொகுப்பு

மோடியின் சாகசங்களை பிரச்சாரப் படுத்துவதற்காக பா.ஜ.க.வால் ஒரு தொழில் நுட்ப செயலி "நமோ" என மோடி பெயரிலேயே உருவாக்கப்பட்டது. இது அரசின் அதிகாரப்பூர்வ செயலி என்றும் மோடி அரசால் அறிவிக்கப்



பட்டது. ஆனால், இந்த செயலியில் பொய்ச் செய்திகளை வெளியிடும் பத்திரிக்கைகளுக்கான விளம்பரங்களும், அதில் வெளியான பொய்ச் செய்திகளும் செயலியில் வெளிவரத் தொடங்கியது.

மோடியின் அதிகாரப்பூர்வமான செயலி "பொய் செய்திகளை" வெளியிடும் நிறுவனத்தை பிரபலப்படுத்துவதற்கும், அந்த பொய்யை பரப்பவும் பயன்படுத்தப் பட்டது.

"The Indian Eye" என்ற வலைத்தள பக்கம் மிக அதிகமாக 63 ஆயிரம் மக்கள் பின் தொடரக் கூடியதாக இருக்கிறது. இந்த பக்கத்தில் நடக்காத செய்திகளை நடந்ததாக பொய் செய்திகள் வெளியிட்டு மக்களுக்குள் பிரிவினையை உண்டாக்கும் வேலையை செய்து வருகிறது. உதாரணமாக, டெல்லி முதல்வர் அரவிந் கெஜ்ரிவால் கலந்து கொண்ட கூட்டத்தில் தனக்கு இந்தியாவை விட பாகிஸ்தானோடு தான் நெருக்கம் அதிகம் இருக்கிறது என்றுகூறியதாக "பொய்" செய்தியை பரப்பியது. இந்த செய்தியை நமோ செயலியும் பகிர்ந்திருந்தது. ஆனால், கெஜ்ரிவால் அந்த கூட்டத்தில் அப்படியொரு கருத்தை பேசவே இல்லை.

இந்த வலைத்தளம், சில்வர்டச் என்ற தொழில் நுட்ப நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது. இதன் இயக்குனர் ஹிமான் சுஜெய்ன், இவர் தனது டிவிட்டர் பக்கத்திலும் இப்படி பல பொய் செய்திகளை பரப்பி வருகிறார். இவரை நம் பிரதமர் மோடி ட்விட்டரில் பின் தொடர்கிறார்.

இந்த சில்வர்ட்ச் நிறுவனம் தான் பா.ஜ.க.வுக்கு பல தொழில் நுட்ப உதவிகளை செய்து வந்திருக்கிறது. "நமோ" செயலியை உருவாக்கியதும் இதே நிறுவனம் தான். தெளிவாக சொல்ல வேண்டுமென்றால், பா.ஜ.க.வுக்கு பொய் செய்திகளை உருவாக்கித் தரும் தொழில்நுட்ப தொழிற்சாலை இந்நிறுவனம். அதனால் இதற்கான அங்கீகாரத்தை பா.ஜ.க. அளித்துவருகிறது.

**கேள்வி கேட்கும் அதிகாரம் - மோடி**

மோடி தனது பிரச்சார மேடையில் ஒரு அரசை கேள்வி கேட்கும் தைரியம் மக்களுக்கு இருக்க வேண்டும். அப்படி மக்களின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாத போது அவர்கள் எதையும் சாதிக்கவில்லை என்று அர்த்தம். நான் மக்களுக்கு பதில் சொல்பவனாக இருப்பேன் என்றும் சொன்னார். ஆனால் புதுச்சேரியில் அவர்கள் கட்சிக்குள்ளேயே நடந்த சந்திப்பில் கருத்து வேறுபாடு கொண்ட ஒரு பாஜக தலைவர் மோடியிடம் தன் கேள்வியை கேட்கும் போது பதில் சொல்லாமல் "புடுச்சேரிக்கு வண்க்கம்" என்று ஓடிவிட்டார்.

**கலவரம் இல்லா உ.பி. - யோகி ஆதித்யநாத் பொய்**

தற்போது மோடிக்கு அடுத்ததாக பா.ஜ.க.வில் பேசப்படும் நபர் யோகி ஆதித்யநாத். இதற்கு காரணமில்லாமல் இல்லை. மோடியை போல் பொய் பேசுவதில் வல்லவர், தன் மாநிலங்களில் கலவரங்களை நிகழ்த்துவதில் வல்லவர். இப்படி பல மோடியின் தகுதிகளை கொண்டிருப்பதால் அடுத்த மோடி என்று கூட ஊடகங்கள் இவரை பிரச்சாரப்படுத்துகின்றன.

இவர் உத்திரபிரதேசத்தின் முதலமைச்சரான பிறகு ஊடகத்திற்கு அளித்த பேட்டியில், தனது ஆட்சிக்காலத்தில் உத்திர பிரதேசத்தில் ஒரு கலவரம் கூட நடக்கவில்லை என்று கூறினார். ஆனால் உண்மை என்ன?

உள் துறை அமைச்சகத்தின் அறிக்கை, 2017ம் ஆண்டு இந்தியாவில் 822 வகுப்பு வாத கலவரங்கள் நடந்ததாகவும், அதில் 195 சம்பவங்கள் உத்திர பிரதேசத்தில் மட்டுமே நடந்திருக்கிறது என்று கூறுகிறது. இந்த கலவரங்களில் 44 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். 543 பேர் காயமடைந்திருக்கிறார்கள் என்று சொல்கிறது.

ஆனால், இந்த எண்ணிக்கை அரசின் அறிக்கையை விட கூடுதலாகவே இருக்கும். அது மட்டுமல்ல, தலித்களுக்கெதிரான தாக்குதல், பசுவின் பெயரில் கலவரம் என உத்திரபிரதேசத்தில் நாட்டையே அதிர செய்த கலவரங்கள் யோகியின் ஆட்சி காலத்தில் நடந்திருக்கிறது.

மோடியின் பொய்களை பட்டியலிடுவதாக இருந்தால் பெரிய புத்தகம் எழுத வேண்டியதிருக்கும். பக்கங்கள் போதாது. மோடியின் பொய்ப் பிரச்சாரங்களின் ஒரு பகுதியே நாம் வெளியிட்டிருக்கும் இந்த பொய்களின் பட்டியல். மோடி பேசும் ஒவ்வொரு மேடையிலுமே வரலாற்று தகவல்கள், அறிவியல், அரசியல் என எல்லாவற்றிலும் பொய் பேசிவருகிறார். மோடியின் பொய்களும் தொடர்ந்து கொண்டே தான் இருக்க போகிறது. நாம் விழித்து கொள்வோம்.

**வைகறை வெளிச்சம் பத்திரிகையில் வரும் கட்டுரைகள் குறித்த தங்களது கருத்துகளை +91 9092723753 என்ற கைபேசிக்கு வாட்ஸ்ஆப்-இல் பகிரவும்**

# காஷ்மீர் புல்வாமா தாக்குதலில் நடந்தது என்ன?

## நாட்டின் பாதுகாப்பை கோட்டை விட்ட நரேந்திர மோடி!



பாகிஸ்தானோடு (சீனாவோடு அல்ல) ஒரு போரை நடத்தி தனது அரசியல் வெற்றியை உறுதி செய்திடுவதே மோடியின் திட்டம். இதனை, "வைகறை வெளிச்சம்" செப்டம்பர் 2018 இதழிலேயே விரிவாகக் குறிப்பிட்டிருந்தோம்.

இதில் இப்போது சிலபல காய்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றார் குஜராத் இனப்படுகொலை புகழ் மோடி. இதனால் தான் புல்வாமா(காஷ்மீர்) தாக்குதலில் மக்கள் ஐயங்களை எழுப்பி உள்ளனர். மோடியின் இந்த "டம்பாங்" கூத்துக்கள் உண்மை நிலவரத்திற்கு எதிரானவை.

மோடி ரஃபேல் ஊழலில் தானே நேரடியாக ஈடுபட்டார். தனது பினாமி அனில் அம்பானிக்கு மக்கள் பணம் 31,000 கோடியை தாரை வார்த்துத் தந்தார்.

மோடியும் அனில் அம்பானியும் அடித்தக் கொள்ளைக்கு தேசிய சாயம் பூசினார்கள். ரஃபேல் விமானங்களை உடனேயே வாங்கியாக வேண்டும், இல்லையேல் நாட்டின் பாதுகாப்பிற்கே ஆபத்து என்றார். இதே சொற்களை ரஃபேல் வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றத்தையும் சொல்ல வைத்தார்.

ஆனால் இவர் தனது தேர்தல் அறிக்கையைப் போல் தாக்கல் செய்த (பட்ஜெட்டில்) நிதி நிலை அறிக்கையில் நமது இராணுவத்தை பல வகையிலும் புறக்கணித்தார். நாட்டில் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பது பற்றியே கவலைப் பட்டார். நாட்டின் பாதுகாப்பை கோட்டை விட்டார்.

இராணுவத்தை பொருத்தவரை மோடியினுடைய பட்ஜெட் 2019-2020 இராணுவத்தைக் காலை வாரி விட்டுவிட்டது என்பதே இராணுவ அதிகாரிகளின் கணிப்பு.


இராணுவத்திற்கு வழக்கமாக ஒதுக்கிட வேண்டிய பணத்தைக் கூட இவர் ஒதுக்கிடவில்லை.

இராணுவத்தின் திறமையை**(CAPABILITY ENHANCEMENT)** அதிகரிக்கும் செலவீனங்களில் செலவிட பணமில்லை. பணம் ஒதுக்கப் படவில்லை. அதேபோல் இராணுவத்தை நவீன படுத்திடவும்

பணம் ஒதுக்கவில்லை.

இராணுவ வட்டாரங்கள் அதிகாரிகள் மிகுந்த வருத்தத்தில் இருக்கின்றார்கள் என அவர்கள் சார்பில் கூறப்படுகின்றது.

இந்தத் துரோகங்கள் எல்லாம் எந்தக் காலக்கட்டத்தில் நடக்கின்றன என்றால் எல்லைப் புறத்திலுள்ள நாடுகள் வேகமாக வளர்ந்துக் கொண்டிருக்கும் போது நடக்கின்றன. குறிப்பாக சீனாவின் இராணுவ வளர்ச்சி மிகவும் அதிகமாக இருக்கும் போது நமது இராணுவ பலம் பின்னோக்கித் தள்ளப்படுகின்றது. (ஆதாரம்: **DINAKER PERI - in THE HINDU - ENG - FEB 11, 2019**)




### ஆகாயப்படை & கடற்படை

இந்த இரண்டு படைகளுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் பணம், அவர்கள் ஏற்கனவே கொள்முதல் செய்ய ஒப்பந்தம் போட்ட பொருள்களுக்கே கொடுத்திட போதுமானதாக இல்லை. **(DOES NOT EVEN MEET COMMITTED LIABILITIES)**

ஏற்கனவே ஒப்பந்தம் போட்டவற்றிற்கே கொடுத்திட போதுமானதாக இல்லை. நமது தரைப்படை இராணுவ வீரர்களுக்கு சம்பளம் அல்லாத இதர செலவினங்களுக்கு போதிய பணம் ஒதுக்கப்படவில்லை என்ற கவலையில் உள்ளது.

பாதுகாப்பு அதிகாரிகள் இதனை பாதுகாப்பு அமைச்சகத்திடம் புகாராக கூறியுள்ளனர்.

### நிதிநிலை

விமானப்படைக்கு வேண்டிய விமானங்களையும் உதிரி பாகங்களையும் வாங்கிட ஏற்கனவே போட்ட ஒப்பந்தகளுக்கு ரூபாய் 47,400 கோடி தேவை. ஆனால் ஒதுக்கப்பட்டுள்ளதோ ரூபாய் 39,300 கோடிதான். அதேபோல் கடற்படை இதுவரை போட்ட ஒப்பந்தங்களுக்கு தேவையான தொகை 25,461 கோடி. ஆனால் ஒதுக்கப் பட்டுள்ளத் தொகை ரூபாய் 22,227 கோடிகள் தாம்.

ஏற்கனவே ஒப்பந்ததாரர்களுக்கு தர வேண்டிய தொகைக்கே பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு இல்லை. இந்நிலையில் ரூ.74,895 கோடி எதிர் வரும் ஆண்டுக்குத் தேவை.

காலாட்படைக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையும் 12,000 கோடி குறைவாகவே ஒதுக்கப்பட்டுள்ளது. இதை வைத்துக் கொண்டு இராணுவத்தை எப்படி நடத்துவது? என்பதைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் இராணுவத்தளபதிகள்.

பட்ஜெட் 2019/2020இல் ஒதுக்கப்படும் நிதியை கொண்டு பல புதிய உத்திகளை இராணுவத்தைக் கட்டமைப்பதில் செலவிட வேண்டும் என சில புதிய திட்டங்களைத் தீட்டி வைத்திருந்தார்கள், இராணுவ அதிகாரிகள். இப்போது அவற்றை நிறைவேற்றிட முடியாமல் திகைத்து நிற்கின்றார்கள்.

### உதிரி பாகங்கள்

விமானப்படை, கடற்படை, காலாட்படை ஆகியவற்றிற்கு தேவைப்படும் உதிரி பாகங்களை உடனடியாக வாங்கிட முழு சுதந்திரமும் உடையவர்கள் நமது இராணுவ தளபதிகள்.

ஆனால் ஓர் அளவுக்குத்தான் நேரடியாக பணத்தைச் செலவு செய்திடும் அதிகாரம் உண்டு. தாங்கள் செலவு செய்திட அனுமதிக்கப்பட்ட பணத்தின் உச்ச வரம்பை உயர்த்திக் கேட்டார்கள் இராணுவ அதிகாரிகள். உயர்த்திக் கொடுத்தது மோடி அரசு. ஆனால் பணத்தைக் கொடுக்கவில்லை. கைபிசைந்து நிற்கின்றார்கள் இராணுவ அதிகாரிகள்.(ஆதாரம்: **THE HINDU FEBRUARY 2019)**

இப்படி இராணுவத்தைப் பலவகையிலும் பலவீனப்படுத்தும் அளவில்தான் பட்ஜெட் 2019/2020 அமைந்துள்ளது.

இந்த பணமெல்லாம் என்ன ஆனது? சில ஆயிரம் ரூபாய்களை விவசாயிகளுக்குத் தந்து ஓட்டு வாங்கிடப் பயன்படுத்தியுள்ளார்கள்.

### வாசகர்கள் கவனிக்க:

மோடி வகையறாக்கள் பாகிஸ்தானைத் தான் பகை நாடாகக் காட்டி கட்சி வளர்க்கின்றார்கள். அரசியல் நடத்துகின்றார்கள். ஆனால் ஒரு மிருக பலத்துடன் வளர்ந்துக் கொண்டிருக்கும் சீனாவை நாம் கண்டு கொள்வதே இல்லை.

எல்லைப் புறத்தில் சீனாவின் அச்சுறுத்தல்கள் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றன.

"டோக்ளான்" பகுதியில் அவர்கள் நமது பகுதிகளில் (ரோடு) சாலை போட்டுக் கொண்டிருக்கின்றார்கள், என்ற தகவல்கள் முற்றாகப் புறக்கணிக்கப்படுகின்றன. அல்லது மக்கள் மன்றத்திலிருந்து மறைக்கப்படுகின்றது. அதே போல் மோடி சீனாவுக்கு உல்லாசப் பயணம் மேற்கொண்ட போது சீன இராணுவம் நமது எல்லையிலுள்ள பல பகுதிகளை தன்னுடைய பகுதியாக அடையாளப்படுத்தி வரைபடங்களை வெளியிட்டது. ஐம்பத்தாறு இன்ஜ் மோடி கண்டு கொள்ளவில்லை, பின்னர் அந்த வரைபடங்கள் திருத்தப்பட்டதே இல்லை.

மோடி அரசு பாகிஸ்தானை வைத்து பூச்சாண்டி காட்டி அரசியல் நடத்தினாலும் நமது இராணுவ தளபதிகள் சீனா, எல்லையோரத்தில் காட்டும் சண்டித்தனங்களையும், சீன இராணுவத்தின் வளர்ச்சியையும் கண்டுகொள்ளத் தவறவில்லை. அதைப்பற்றித்தான் நாம் மேலே சுட்டிக்காட்டியுள்ள இந்து பத்திரிகையின் செய்தியாளர் செய்தியைத் தந்துள்ளார். அதை நாமும் அப்படியே குறிப்பிட்டுள்ளோம்.

மோடி அரசை அப்புறப்படுத்தி நாட்டின் பாதுகாப்பை உறுதிபடுத்துவோம்.

### குறிப்பு

இராணுவத்திலிருக்கும் மன உளச்சல்களைக் கருத்தில் கொண்டு பார்த்தால் பாகிஸ்தானோடு ஒரு போருக்கு நமது இராணுவ தளபதிகள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என்பது திண்ணம் ஆனால் அவர்கள் மீது அரசியல் காரணங்களுக்காகத் திணிக்கப்பட்டால் வேறு வழி இருக்காது.

### முந்தைய தாக்குதல்கள்

பிப்ரவரி 11இல் இராணுவ அதிகாரிகள் இப்படி மனம் புழுங்கிக் கொண்டிருக்கும் போது தான் பிப்ரவரி 14, 3.15 மணிக்கு இராணுவ வண்டிகள் மீது ஒரு தாக்குதல் நடந்தது. 40 இராணுவ வீரர்கள் - CRPF சார்ந்தவர்கள் உயிரிழந்தார்கள். எமது ஆழ்ந்த அனுதாபங்கள். இன்னும் பலர் மருத்துவமனைகளில் சிகிட்சைப் பெற்று வருகின்றார்கள். தாக்குதலை நடத்தியவர்கள் தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும் என்பதில் இரண்டு கருத்துகளுக்கு இடமில்லை, ஆனால் உண்மையான குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படுவார்களா?

அப்படி கண்டுபிடித்தாலும் தண்டிக்கப்படுவார்களா? என்பவையெல்லாம் நம் நாட்டை பொறுத்தவரை நடக்காதவை. காரணம் நாடாளுமன்ற தாக்குதலை நடத்தியவர்களின் பக்கத்தில் கூட நாம் போகவில்லை.

மனித உரிமைப் போராளிகள் நீதியின் பால் அக்கறைக் கொண்டவர்கள் நமது நாடாளுமன்றமே தாக்கப்படும் அளவில் நாடு பாதுகாப்பற்று கிடந்திடக் கூடாது என அக்கறைப்பட்ட குடிமக்கள் எல்லோரும் நீதிக்காகப் போராடியும் எந்த பயனுமில்லாமல் போய்விட்டது.

நாடாளுமன்ற தாக்குதலில் ஈடுபட்டவர்கள் கடைசி வரை கைது செய்யப்படவோ தண்டிக்கப்படவோ இல்லை, மாறாக ஓர் அப்பாவி அப்சல் குரு இரகசியமாக தூக்கிலே போடப்பட்டு மொத்த விவகாரத்தையும் இழுத்து மூடினார்கள்.

ஆனால் "PUDR" என்ற அமைப்பு நீண்டதொரு ஆய்வை மேற்கொண்டு காஷ்மீரின் STF என்ற SPECIAL TASK FORCE - வும் டெல்லி போலிசின் ரோபிர் சிங்கும் தான் நாடாளுமன்ற தாக்குதலை நடத்தின. என ஒரு பெரும் ஆய்வை வெளியிட்டது. நீதிமன்றங்களின் பார்வைக்கு கொண்டு சென்றது.

ஆனால் செவிமடுப்பார் யாருமில்லை, விரிவான தகவல்களுக்கு DEC.13, TERROR OVER DEMOCRASY BY PUDR அறிக்கை. - தமிழில்: நாடாளுமன்ற தாக்குதல், வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள், வேர்கள் வெளியீட்டகம்.

அப்சல் குருவை நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட போதும் தீர்ப்புகள் வந்த போதும் நடந்தது என்ன? நமது உச்ச நீதிமன்றம் அப்சல் குருவுக்கு எதிராக எந்த சாட்சியும் இல்லை, இருந்தாலும் நாட்டு மக்களின் மனசாட்சியை திருப்திப்படுத்திட அவரை தூக்கிலே போடுகின்றது.

இந்த நாட்டில் மனித உரிமைக்காகப் போராடிய பெரும், பெரும் ஆளுமைகளெல்லாம் எடுத்த முயற்சிகள், வைத்த ஆதாரங்கள் நிருபனங்கள் இவற்றையெல்லாம் நீதிமன்றங்கள் புறக்கணித்தன.

இன்றளவும் எந்த சட்டத்திலும் இல்லாத ஒரு சொல்லைக் கண்டுபிடித்து அப்சல் குருவைக் கொலை செய்தார்கள். நாட்டு மக்களின் மனசாட்சி அல்ல அப்சல் குருவை தூக்கிலே போடுவதற்குக் காரணமாக அமைந்தது. மாறாக பாரதீய ஜனதா கட்சியின் அழுத்தங்கள் தான் என்பதை காங்கிரஸ் கட்சியின் கபில் சிபால் பின்னர் தெளிவுபடுத்தினார்.

நாடாளுமன்றத் தாக்குதல் நடந்த போது



ஆட்சியில் இருந்தவர்கள் தாம், இப்போது ஆட்சியில் இருக்கின்றார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

**ஊழல்களை மறைக்க**

அன்று சவப்பெட்டி ஊழல் என்றொரு ஊழல் நாட்டை உலுக்கிக் கொண்டிருந்தது. பாரதீய ஜனதா கட்சியின் உண்மை முகத்தை நாட்டு மக்களுக்குத் தோலுரித்துக் காட்டியது. கார்கில் போரில் உயிரிழந்தவர்களின் உடலைப் புதைக்க வாங்கிய சவப்பெட்டிகளில் கோடி, கோடியாகப் பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்தவர்கள் அடித்த கொள்ளை விவகாரங்கள்தான் சவப்பெட்டி ஊழல் என வரலாறு பதிவு செய்தது.

இந்த ஊழல் நாடாளுமன்றத்தை உலுக்கவிருந்தது. அதே நாளில் அத்வானியை அதாவது அப்போது உள்துறை அமைச்சராக இருந்த அத்வானியின் நச்சு மூளையில் உதித்த பொடா சட்டம் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வரவிருந்தது. அதை விஞ்சிக் கொண்டு சவப்பெட்டி ஊழல் நாடாளுமன்றத்தை உலுக்கவிருந்த வேளையில் தான், நாடாளுமன்றம் தாக்கப்பட்டது.

அதேப்போல் இப்போது ரஃபேல் விமானம் வாங்குவதில் நடந்த ஊழல்கள் இதனை நீதிமன்றங்கள் கூட கண்டு கொள்ளவில்லை, உச்ச நீதிமன்றம் மெத்தப்படித்து எல்லாம் சரியாகத்தானிருக்கின்றது எனச் சொல்லிவிட்டது. தனக்குத் தவறான தகவல்கள் தரப்பட்டிருக் கின்றன என்பதை இப்போது உச்ச நீதிமன்றம் உணர்கிறது. ஆனால் எதையும் செய்ய முடியாமல் திண்டாடுகின்றது.

ஆனால் இந்து குழுமத்தின் ராம் அவர்கள் நான்கு கட்டுரைகள் வழி மொத்த ஊழலையும் அம்பலப்படுத்தினார். மோடி வகையறாவின் அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் பரிக்கரே உண்மையை ஒத்துக் கொண்டார், மொத்த கொள்ளைப் பணம், 31,000 கோடியும் மோடிக்கும், மோடியின் பினாமி அனில் அம்பானிக்கும் சென்றுள்ளன என்ற உண்மை அடித்தட்டு மக்கள் வரை சென்று சேர்த்து உச்ச நீதிமன்றமே சாதாரண எழுத்தாளர்கள் ஆய்வாளர்கள், இவர்களின் கடுமையான தாக்குதலுக்கு உள்ளானது.

உண்மையைச் சொன்னால் மோடி, அதானி, அம்பானியைப் போல் உச்ச நீதிமன்றமும் மாட்டிக் கொண்டது. மோடியின் புனிதம் கலைந்தது முட்டாள் தனம் முச்சந்திக்கு வந்தது. அடுத்து என்ன என மக்கள் கேட்டுக் கொண்டிருக்கும் போது புல்வாமா தாக்குதல்கள் நடந்தன.

மக்களுக்கு பழைய சந்தேகங்கள் வரத் தொடங்கிவிட்டன.

நாடாளுமன்ற தாக்குதலைப் பொறுத்தவரை பிற்றை நாளில் அரசு அதிகாரி சத்தீஷ் சர்மாவும் **RVS** மணி அவர்களும் உண்மையை உரக்க முழங்கினார்கள்.

பொடாவைக் கொண்டு வருவதற்கு நாடாளுமன்ற தாக்குதலையும், UAPAA - 2008 ஐ கொண்டு வருவதற்கு 26/11 என்ற மும்பை தாக்குதலையும் அரசே நடத்தியது என்றார்கள். (Times of India: 14.07.2013)

அரசியல் நடத்துகின்றார்கள், என மேற்குவங்க முதல்வர் மம்தா சொல்வதும், பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோயாலைக் கேளுங்கள் யார் இந்த தாக்குதல்களை நடத்தியது என்பதைச் சொல்லி விடுவார்கள் என்பதும் நியாயம்தானே!

### புல்வாமா தாக்குதல்

காஷ்மீரில் புல்வாமாவில் இந்திய துணை இராணுவப்படையினர் மீது தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காரில் நிரப்பப்பட்ட வெடிகுண்டை கொண்டு நடத்தப்பட்ட தற்கொலைப்படை தாக்குதலில் சி.ஆர்.பி.எஃப் படையினர் 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தஎண்ணிக்கையும் முதலில் 44 எனவும் பின்னர் 47 எனவும் கூறப்பட்டு பின்னர் 40இல் நிலைநிறுத்தப்பட்டது.

இந்த தாக்குதலின் மூலம் நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிஉள்ளது. நாட்டு மக்கள் அனைவரையும் உலுக்கிய நிகழ்வு இது.யாராலும் மறக்க முடியாத,மன்னிக்க முடியாதசம்பவம் இது.

இந்ததீவிரவாத செயலை நிகழ்த்தியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

### இயல்பாக எழும் கேள்விகள்

ஆனால் இந்த தாக்குதல் சம்பந்தமாக இயல்பாக சில கேள்விகள் எழுகின்றன. இந்த தீவிரவாத தாக்குதலை நிகழ்த்தியவர்கள் யார்?

இந்த தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்கள் யார்?

இராணுவப் படையினர் நகர்தல் குறித்த தெளிவான உளவுத்தகவல் அவர்களுக்கு எப்படி கிடைத்தது?

ஏன் திடீரென்று 2500 துணை இராணுவப் படையினர் ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்த்தப்பட்டனர்?

விமானத்தில் அழைத்து செல்வதற்கான வசதியிருந்தும், முன்னதாகவே ஜம்மு லோக்கல் காவல்துறை எச்சரிக்கை கொடுத்தும் பாதுகாப்பே இல்லாமல் 2500 வீரர்களை அழைத்து செல்ல உத்தரவு பிறப்பித்தது யார்?

கடுமையான இராணுவ பாதுகாப்புமிக்க பகுதியில் அதுவும் துணை இராணுவம் அணிவகுத்து சென்ற நிலையில் தேசிய நெடுஞ்சாலையில் இவ்வளவு எளிதாக காரில் சென்று தாக்க முடிந்தது என்றால் அது பாதுகாப்பு குறைபாடா? உளவுத்துறையின் குறைபாடா? அல்லது செல்வாக்கு மிக்கவர்களின் ஏற்பாடா?


தேசிய பாதுகாப்புஆலோசகர் அஜித் தோவலை விசாரித்தால் புல்வாமா தாக்குதல்கள் குறித்த உண்மைகள் வெளிவரும் என ராஜ் தாக்கரே கூறியிருப்பது ஏன்? விசாரித்தால் உண்மைகள் வெளிவருமா?

https://www.thequint.com/news/india/truth-of-pulwama-attack-will-come-out-if-doval-is-probed-raj-thackeray?fbclid=IwAR0QQ2WeQKjW5DlsjNg2yda7Xgxn9SwlNBEbTKon-oK9rx7OEZqtZPYDDo

## 2500 வீரர்களை ஒரே நேரத்தில் அனுமதித்தது ஏன்?

**ஓய்வுபெற்ற CRPF IGPஅதிகாரி VPS பன்வார் கூறும் போது, எப்போதும் 300 & 400 வீரர்கள் தான் நகர்த்தப்படுவார்கள். ஆனால் இம்முறை 78 வாகனங்களில் வீரர்கள் கொண்டு செல்லப்பட்டிருப்பது சரியான முடிவு இல்லை. இது தீவிரவாதிகளுக்கு எளிமையாக நாமே வாய்ப்பை ஏற்படுத்தி தருவது போன்றது என்கிறார். வீரர்கள் பயணித்த 78 பேருந்துகள் மிகவும் மெல்லிய தகரத்தால் செய்யப்பட்ட வாகனங்கள்.குண்டுகள் துளைக்காத வாகனங்கள் பயன்படுத்தப்பட வேண்டிய சூழலில் பலவீனமான வாகனங்கள் உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது! இது எப்படி என்று கேள்வி கேட்கிறார்கள் உயர் இராணுவ அதிகாரிகள்**

**பாதுகாப்பு பிரச்சனையில் இவ்வளவு குளறுபடிகள் நிகழ்த்தப்பட்டிருப்பதே பெரும் சந்தேகத்தை உருவாக்குகிறது. வீரர்கள் விமான மார்க்கமாக செல்ல கேட்டும் மறுக்கப்பட்டிருக்கிறது. அதே போல் மொத்தமாக வீரர்களை கொண்டு செல்ல முடிவெடுத்தது மிகப்பெரும் தவறு என்ற நிலையில், தெரிந்தே செய்யப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் உத்தரவுகள் எங்கிருந்து வந்தன என்ற விசாரணை நேர்மையாக நடக்கும் பட்சத்தில் இதிலுள்ள மர்மங்கள் விலகி உண்மை வெளிவரும்.**






தாக்குதல் நடந்த உடனே 350 கிலோ ஆர்.டி.எக்ஸ் தாக்குதலில் பயன்படுத்தப் பட்டதாக தகவல் வெளியானது. அது 350 கிலோ தான் என எப்படி அரசுக்கு தெரிந்தது? இது சர்சசைக்குள்ளாகி பின்னர் அது 60 கிலோ, 80 கிலோ என திருத்தப்பட்டது. இதையும் அளவிட்டது யார்?

தாக்குதலை நடத்தியதாக சொல்லப்பட்ட தீவிரவாதியின் உடல் பாகங்கள் எங்கே? அதன் மீதான பிரேத பரிசோதனை அறிக்கையின் தகவல் என்னானது? அந்த உடல் முதலில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதா என்று எவ்விதமான தகவலும் ஊடகங்களில் வெளிவரவில்லையே ஏன்? குற்றம் சாட்டப்பட்ட அஹ்மது தாரின் உடலை அவரது குடும்பத்தினர் கேட்ட போது பாகங்கள் ஏதும் கிடைக்கவில்லை என்று அதிகாரிகள் அவர்களிடம் கூறியிருக்கிறார்கள். அப்படியிருக்கையில் அஹ்மது தார் உடல் பாகங்கள் சிதறி அடையாளம் கண்டுபிடிக்க முடியாத நிலையிலும் தாக்குதல் நடந்த சில மணி நேரங்களில் அஹமத் எனும் நபர் தான் செய்தார் என ஊடகங்கள் தனது செய்தி பசிக்காக வெளியிடலாம். ஆனால் இராணுவம் உடற்கூறு ஆய்வு செய்யாமல் எப்படி சொல்ல முடிந்தது?

தாக்குதலை நான் தான் நடத்தினேன் என்று அவர் இறந்ததன் பிறகு அவருடைய வீடியோவை முகநூலில் ஒளிபரப்பியது யார்? அந்த வீடியோவில் வாயசைவுக்கு சற்றும் பொருந்தாமல் குரல் கொடுத்து டப்பிங் செய்து ஒளிபரப்பியது யார்?

http://www.wionews.com/india-news/adil-ahmad-dar-the-


India Today
@IndiaToday
Kamran alias Ghazi Rasheed is the mastermind of the #Pulwama terror attack which took place on February 14.
(@ShujaUH)


INDIA TV
Pulwama Terror Attack: Security forces start major hunt for key conspirator Abdul Rasheed Ghazi
The sources say that Rasheed Ghazi recently recruited nearly 70 youths between the age group of 18-23. Out of these recruits, Ahmed Dar was category C recruit, they said.


Outlook Magazine
@OutlookIndia
Abdul Rasheed Ghazi, who was an Afghan war veteran and an IED specialist, was the one who trained Adil Dar, the Jaish-e-Mohammed terror commander who drove the explosive-laden vehicle into the CRPF convoy.


Zee News Hindi
सेना ने पुलवामा हमले का लिया बदला, मास्टरमाइंड कामरान और गाजी ढेर
पुलवामा आतंकी हमले का मास्टरमाइंड माना जा रहा जैश ए मोहम्मद का आतंकवादी कामरान हिलाल और अब्दुल राशिद गाजी मारा गया है.
Today at 1:23 PM


Thread
Raj Shekhar Jha
@rajshekharTOI
THIS COULD BE BIG! A source tells me that Abdul Rasheed Ghazi likely trapped in #Pulwama . Official confirmation awaited.
rain behind Pulwama attack still in Valley?


ABP News @abpnewstv
Reportedly, The Pulwama attack's mastermind, Kamran alias Abdul Rashid Ghazi has been killed in Pinglan encounter. He was sent by Masood Azhar to avenge the killings of his two nephews, Talah Rasheed and Usman.
#Kamran #AbdulRashidGhazi #Pulwama #PulwamaTerrorAttack

man-who-carried-out-the-pulwama-attack-197476

https://www.indiatoday.in/india/story/pulwama-attack-nia-to-question-suicide-bomber-adil-ahmed-dar-s-relative-1462762-2019-02-22

*இந்த தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டவன் என்று காட்டப்பட்ட ரஷீத் காஷி என்கிற கம்ரான் (Rashid Ghazi alias Kamran) என்பவனின் படம் உண்மையில் யாருடையது?*

*தீவிரவாதி ரஷித் காஷி என கிட்டத்தட்ட அனைத்து ஊடகங்களாலும் காட்டப் பட்ட படம் மாஃப்பிங் செய்யப்பட்ட படம் என்று வெளியான செய்தி குறித்து அரசின் பதில் என்ன? அல்ட் நிவ்ஸ் (மாற்று செய்திகள்) என்ற ஊடகத்தில் இது முதலில் வெளிவந்து பின்னர் இது ஸ்க்ரால் போன்ற செய்தி ஊடகங்களால் கேட்கப்பட்டது. இது உண்மையானால் போலியாக மாஃபிங் செய்து படத்தை வெளியிட்டது யார்? அவருடைய நோக்கம் என்ன?*

https://scroll.in/article/913739/why-photo-of-jaish-commander-being-used-by-media-is-similar-to-bon-jovis-it-was-made-with-an-app

*அவன் சுட்டுகொல்லப்பட்டதாக சொல்லப்படும் செய்தி உண்மை தானா?*

https://economictimes.indiatimes.com/news/politics-and-nation/pulwama-attack-mastermind-abdul-rasheed-ghazi-killed-by-security-forces-in-kashmir/close-aide-of-masood-azhar/slideshow/68045939.cms

*சரியாக பாராளுமன்ற தேர்தல் வரும் போது இந்த தாக்குதல் நடந்துள்ளதே. இதனால் பயனடையப் போவது யார்?*

*ஒவ்வொரு தேர்தலின் போது இது போன்ற தாக்குதல்கள்நடக்கின்றனவே, அது எவ்வாறு? இந்த தாக்குதல் நடந்த செய்தியை கேள்விப்பட்ட பின்னரும் மோடி அவர்கள் ஒரு ஆவணப்படத்தில் நடித்துக் கொண்டிருந்ததை தொடர்ந்து கொண்டிருந்தாரே, இது தான் அவர் அந்த வீரர்களுக்கு செய்யும் மரியாதையா? இது தான் அவரின் நாட்டுப்பற்றா?*

https://scroll.in/article/914174/did-modi-continue-shooting-a-documentary-after-pulwama-attacks-or-did-doval-fail-to-inform-him

*புல்வாமா தாக்குதலில் இறந்தவீரர்களை பற்றி சொல்லி பிஜேபிக்கு மோடியும், அமீத் ஷாவும் தமிழிசையும் ஓட்டு கேட்டது சரியா? இறந்த மத்திய ஆயுதப்படை வீரர்கள் இந்தியாவிற்காக உயிரை விட்டார்களா? அல்லது பிஜேபிக்காக உயிரை விட்டார்களா? அவர்கள் பிஜேபியில் சேர்ந்தது எப்போது?*

*இந்தியாவின் மற்ற மாநிலங்களை விட ஜம்மு காஷ்மீரின் நிலை மாறுபட்டது. இராணுவ முகாம்கள் காஷ்மீரின் மூலையெங்கும் போடப்பட்டிருக்கும். 15 காஷ்மீரிகளுக்கு ஒரு ராணுவ வீரர் என்ற விகிதத்தில் காஷ்மீரில் இராணுவ வீரர்கள் நிரப்பப் பட்டிருக்கிறார்கள்.காஷ்மீரின் ஊர்களுக்குள்ளேயே செக்போஸ்ட்கள் வைக்கப்பட்டிருக்கிறது. வீடுகளுக்கு பலசரக்கும், கறியும் வாங்கி சென்றாலே சோதனை செய்யும் இராணுவம் 350 கிலோ வெடி மருந்துடன் ஒரு கார் 2500 இராணுவ வீரர்கள் செல்லும் பாதையில் எந்த சோதனையும் இல்லாமல், தேசிய நெடுஞ்சாலையில் வந்து வெடிக்க வைக்கப் பட்டிருக்கிறது என்றால், இப்படிப்பட்ட திட்டமிட்ட பாதுகாப்பு குறைபாட்டில் அரசியல் தலையீடும், இராணுவ மேலதிகாரிகளின் தலையீடும் இல்லாமல் இருக்குமா?.*

*24 மணி நேரமும் ரோந்து கண்காணிப்பு, சிசிடிவி கண்காணிப்பு, தீவிரவாதிகளின் ரேடார் ஒயர்லெஸ் போன்ற தகவல் தொடர்புகளை வழிமறித்து கேட்கும் நுண்ணறிவு பிரிவு என சகலமும் செயல்பாட்டில் கொண்டிருக்கும் காஷ்மீரில் உள்ள இந்திய ராணுவம் எப்போதும் பதட்டம் நிறைந்த மாநிலத்தில் 2500 வீரர்களின் பயணத்தின் போது பாதுகாப்பு நோக்கங்களில் செயல்படாமல் கோட்டை விட்டதன் காரணம் என்ன?.. இராணுவ வீரர்களின் பாதுகாப்பை விட அதிகபட்ச முக்கியத்துவம் ஏதும் இல்லாத நிலையில் பாதுகாப்பில் எப்போதுமே இல்லாத அளவுக்கு ஏன் தளர்த்தப்பட்டது?*

*ஏப்போதுமே பாதுகாப்பு உச்சத்தில் இருக்கும்*

> **“ஒரு தாக்குதலை தொடர்ந்து அதற்கு பிறகு ஒரு தீவிரவாத அமைப்பு அந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்று கொள்வதும், ஆனால் பின்னாட்களில் அது அரசால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டது என்றும், அதில் கைது செய்யப்பட்டவர்கள் அப்பாவிகள் என்றும் நீதிமன்றத்தில் விடுவிக்கப்படுவதும் இந்தியாவிற்கு புதிதல்ல.**
>
> **இது போன்ற மின்னஞ்சல் டேவிட் கென் ஹேவுட் போன்ற அமெரிக்கர்களின் மடிக்கணிணியிலிருந்து அனுப்பப்பட்டால் அவர்கள் பத்திரமாக அமெரிக்காவிற்கு திருப்பி அனுப்பப்படுவார்கள்.**
>
> **வாங்கிப்படியுங்கள் கர்கரேவை கொலை செய்தது யார்? பக்கம்: 107**
>
> **வேர்கள் வெளியீட்டகம்.”**

நிலை என்றால் கூட அமெரிக்காவிலிருந்தும், உள்ளூர் காஷீர் காவல்துறையிடமிருந்தும், ஒரு பயங்கர தாக்குதல் நடத்தப்படலாம் என்று பிப்ரவரி 6ம் தேதி தகவல் கொடுக்கப்பட்டிருந்தும் கூட பாதுகாப்புக்கான எந்த முயற்சியும் எடுக்காமல் விடப்பட்டது ஏன்?

வீரர்கள் வந்த பேருந்து மிக வேகமாக தங்களது இலக்கை அடைந்து கொண்டிருந்தது. வீரர்கள் பயணிக்க அனைத்து பாதுகாப்பு முன்னேற்பாடுகளும் முறையாக செய்யப்பட்டது. சுமார் ஒரு வாரகாலமாக ஜம்மு-ஸ்ரீநகர் நெடுஞ்சாலையில் போக்குவரத்து நிறுத்தப்பட்டு அனைத்துநடமாட்டங்களும் கண்காணிக்கப் பட்ட பிறகே, நேற்று வீரர்கள் பயணத்தை தொடங்கினர். அந்த நெடுஞ்சாலையில் இப்படியொரு தாக்குதல் நடத்த ஒரு வாய்ப்பே கிடையாது. இந்தப் பகுதிகளில் நிறைய சோதனை சாவடிகள் உள்ளன, அவை அனைத்தையும் தாண்டி நூற்றுக்கணக்கானகிலோ வெடிப் பொருட்களை கொண்டு வர முடியாது. பாதுகாப்பு பணிகளில் ஏதோ தவறு நடந்துள்ளது. இல்லையெனில், இதுபோன்ற சம்பவம் நடந்திருக்காது." என்கிறார். "பாதுகாப்பு குறைபாடு" என்பதற்கான காரணம் என்ன?. இயற்கையானதா?. இல்லை இந்த தாக்குதலுக்காக திட்டமிட்டு உருவாக்கப்பட்டதா?.

இறந்த ஒவ்வொரு வீரனின் குடும்பத்தின் சார்பாகவும் இந்த கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய கடமை மத்திய அரசுக்கு உள்ளது.

### இராணுவ மேலதிகாரிகளே எழுப்பக்கூடிய கேள்வி: விமானத்தில் ஏன் ஏற்றிச் செல்லவில்லை?

இந்த சம்பவம் நடத்தப்பட்டதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே இராணுவ வீரர்களை விமான மார்க்கமாக அழைத்து செல்வதற்கு இராணுவம், உள்துறை அமைச்சகத்திடம் அனுமதி கேட்டது. ஆனால் உள்துறை அமைச்சகம் அனுமதி தர முடியாது என்று மறுத்துவிட்டது.

ஏற்கனவே பிபரவரி 4ம் தேதி இராணுவ வீரர்கள் நகர்வின் போதே மோசமான வானிலை காரணமாக பல்வேறு பிரச்சனைகள் இருந்ததால் விமான மார்க்கத்தை பயன்படுத்திக் கொள்ள உள்துறை அமைச்சகத்திடம் அனுமதி கோரினோம். ஆனால் எங்களுக்கு பதில் சொல்வது குறித்து அவர்களுக்கு எந்த கவலையும் இல்லை என்று வேதனையடைகிறார் மூத்த **CRPF** அதிகாரி. விமான மார்க்கமாக அழைத்து செல்வதென்பது அவர்கள் பாதுகாப்பை உறுதி செய்வது மட்டுமல்ல. சாலை மார்க்கமாக அழைத்து செல்வதை விட செலவு குறைந்தது.

இது தொடர்பாக உள்துறை அமைச்சகத்தை The Quint ஊடகம் தொடர்பு கொள்ளும் போது அவர்கள் எந்த பதிலையும் கொடுக்கவில்லை. இராணுவத்தின் பாதுகாப்புத்துறையில் அதிக கவனம் செலுத்துவதாக சொல்லும் அரசு ஏன் இந்த பரீசிலனையை ஏற்றுக்கொள்ளவில்லை?

### ஆர்.டி.எக்ஸ். பயன்பாடு

கடந்த 10 ஆண்டுகளில் ஆர்.டி.எக்ஸ் வெடி குண்டுகள் காஷ்மீரில் பயன்படுத்தப்படவில்லை. காஷ்மீரில் அம்மோனியம் நைட்ரேட்

## மாலேகான் குண்டுவெடிப்பும், புல்வாமா தாக்குதலும்

**இந்தியாவில் சரியாக 11 வருடங்களுக்கு பிறகு மாலேகான் தாக்குதலுக்கு அடுத்தபடியாக புல்வாமா தாக்குதலில் RDX மீண்டும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட இரு குண்டு வெடிப்புகளுக்கும் நெருக்கமான தொடர்பு இருக்கிறது.**

**இரண்டுமே நாட்டில் பெரும் பரப்பரப்பை ஏபடுத்திய பெரும் தாக்குதல்.**

**இரண்டு தாக்குதலுக்கும் ஆர்.டி.எக்ஸ் வெடிபொருள் தான் பயன்படுத்தப்பட்டது.**

**இரண்டு தாக்குதலிலும் தாக்குதல் முடிந்த சில மணி நேரங்களிலேயே ஒரு முஸ்லிம் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றது.**

**ஆனால், மாலேகான் தாக்குதலில் பல ஆண்டுகள் கழித்து இந்த தாக்குதல் முஸ்லிம்கள் பெயரை பயன்படுத்தி இந்துத்துவ தீவிரவாதிகளால் நடத்தப்பட்டது என்று கண்டறியப்பட்டு பல வருடங்களுக்கு பிறகு கைது செய்யப்பட்ட முஸ்லிம் அப்பாவிகள் விடுவிக்கப்பட்டனர்.**

**இது புல்வாமாவிலும் நடப்பதற்கான அதிக வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அதற்குள் இதனை உபயோகித்து ஒரு வெறுப்பு அரசியல் உருவாக்கப்பட்டு அதன் மூலம் தேர்தலில் அரசியல் அமைப்புகள் ஆதாயம் அடைந்திருக்கும்**

அடிப்படையான குண்டுகள் தான் இதுவரை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால் இம்முறை இது பெரிதும் பிரச்சனைக்குள்ளான ஒன்றாக பார்க்கப்படுகிறது.

ஆர்.டி,எக்ஸ் வெடிகுண்டு எல்லாவற்றையும் விட அதிக சக்தி வாய்ந்தது. இது தான் இரண்டாம் உலக யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டது. இராணுவத்தில் மட்டுமே பயன்படுத்தப்படும் வெடிபொருள். இது எப்படி காஷ்மீரில் பயன்படுத்தப்பட்டது? இதற்கு முன்னால் மாலேகான் தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட போதும் பாகிஸ்தானில் இருந்து கொண்டு வரப்பட்டிருக்கும் என்று சொன்னார்கள். ஆனால், பின்னாளில் ஹேமந்த் கர்கரே என்ற நேர்மையான அதிகாரி, இராணுவத்தில் பணிபுரியும் ஒருவர் தான் தேவையான வெடிபொருளை குண்டு வெடிப்பிற்காக கொடுத்தார் என்று கண்டுபிடித்து கைதும் செய்தார். அப்படியொரு சதி இந்த தாக்குதலில் நடந்திருப்பதற்கான அனைத்து வாய்ப்புகளும் இருக்கின்றன. அதனால் ஏன் இது இன்னொரு மாலேகானாக இருக்கக்கூடாது?



THE TIMES OF INDIA

Govt behind Parliament attack, 26/11: Ishrat probe officer

ENCOUNTER ROW TAKES MURKY TURN

➢ Former home ministry official R V S Mani accuses then IG of SIT looking into IShrat Jahan encounter, **Satish Verma, of coercing him into signing statement** in Ishrat Jahan encounter

➢ Says **home ministry is a "stooge" of IB**

➢ Verma **accused govt of orchestrating Parliament attack, 26/11 to toughen anti-terrorist laws:** "He narrated that December 13, 2001 (Parliament attack) was followed by POTA and November 26, 2008 (Mumbai terror attack) was followed by amendment to UAPA"

➢ **Doubted the counter-terror intelligence of IB** on Ishrat encounter case

**I am not allowed to speak to the press about my official work. You presume what suits you**
**— Satish Verma**

*The officer said that the terror attacks were set up "with the objective of strengthening the counter-terror legislation (sic)".*

### 3 கிலோ மாட்டிறைச்சியை மோடி கண்டு பிடிப்பார் ஆனால்..?

இதற்கிடை யேகாங்கிரஸ் கட்சி ஒரு தமாஷானா ஆனால் அர்த்தமுள்ள கேள்வியை மோடியை பார்த்து கேட்டது. முஸ்லிம்கள் வீட்டில் உள்ள 3 கிலோ மாட்டுக்கறியை மோடியால் கண்டு பிடிக்க முடியும், ஆனால் 300 கிலோ ஆர்.டி.எக்ஸை மோடியால் கண்டுபிடிக்க இயலாது. இல்லையா? என மோடியை பார்த்து காங்கிரஸ் கட்சியின் ஹாருன் யூசுப் என்பவர் கேள்வி கேட்டிருந்தார். ஆனால் இதற்கெல்லாம் மோடி அசைந்து கொடுப்பதாக தெரியவில்லை.

https://www.indiatoday.in/india/story/pulwama-attack-congress-haroon-yusuf-modi-beef-rdx-tweet-1461421-2019-02-21

### 40 பேர் இங்கே 900 பேர் அங்கே

40 துணை இராணுவப்படையினரின் இறப்பே நம்மை உலுக்கிக் கொண்டிருக்கும் போது இன்னும் 900 இராணுவ வீரர்கள் இறந்துள்ளனர் என்ற செய்தி உலகிற்கு தெரியாமலே மறைக்கப்பட்டுள்ளது தான் கொடுமை.

ஆம் கடந்த 2011 முதல் 2018 வரை கிட்டத் தட்ட 900 இராணுவ வீரர்கள் இறந்துள்ளனர். அதுவும் தற்கொலை செய்து கொண்டு. ஆம் எந்த நாட்டின் இராணுவத்துடனும் மோத வில்லை. எந்த தீவிரவாதியும் தாக்கவில்லை.

நம் நாட்டு இராணுவத்தில் பணியாற்றும் சமயத்தில் அதிகாரிகள் கொடுக்கும் அழுத்தத்தாலும் நடத்தப்படும் விதங்களாலும் விடுமுறை கிடைக்காமல் நீண்ட நாட்கள் வேலையில் ஈடுபடுத்தப்படுவதாலும் யுத்த களத்தில் ஏற்படும் மன அழுத்தங்களாலும் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்து கொண்டு இறந்துள்ளனர் என மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதில் இராணுவத்தினர் எண்ணிக்கை 707. விமானப் படையை சேர்ந்தவர்கள் எண்ணிக்கை 148. கடற்படையை சேர்ந்தவர்கள் எண்ணிக்கை 36.

2011இல் 105 பேர், 2014இல் 104 பேர் கடந்தவருடம் 80 என இந்த பட்டியல் உள்ளது.

அதாவது சராசரியாக 88 இராணுவத்தினர் ஒரு வருடத்தில் தற்கொலை செய்து கொண்டு இறக்கின்றனர்.

இதைத் தவிர்த்து மத்திய ஆயுதப் படையினரில் **(Central Armed Police Forces (CAPF) and Assam Rifles** 2012 முதல் 2015 வரையில் சி.ஆர்.பி.எஃப்படையினர் **(Central Reserved Police Force (CRPF))** 149 பேர் தற்கொலை செய்துள்ளனர்.

134 எல்லை பாதுகாப்புபடையினர் **(Border Security Force (BSF))** தற்கொலை செய்துள்ளனர்.

# ஏற்கனவே நாம் கூறியது...!

**நம்முடைய செப்டம்பர் 2018 வைகறை வெளிச்சத்தில் இப்படியொரு தாக்குதல் நடக்க கூடும் என பதிவு செய்திருந்தோம்,**

**“தேர்தலுக்கு முன்னதாக பாகிஸ்தானோடு சிறிய போர் நடக்கலாம் என எச்சரிக்கிறார்கள் அரசியல் நிபுணர்கள். ஏற்கனவே எல்லை தாண்டி ஊடுருவி துல்லியத் தாக்குதல் நடத்தி வரும் இந்தியப் படை, பாகிஸ்தான் ஆக்கிரமித்து வைத்திருக்கும் காஷ்மீர் பகுதியில் முழு அளவு தாக்குதல் நடத்த வாய்ப்பு இருப்பதாகவும் எச்சரிக்கிறார்கள். போர் எப்போதெல்லாம் நடந்ததோ அப்போதெல்லாம ஆட்சியிலிருக்கும் கட்சி தான் மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கிறது. அந்த பார்முலாவை இந்த முறை பாஜக பயன்படுத்தும் என்கிறார்கள் அவர்கள்.”**

இது மட்டுமன்றி மத்திய தொழில்துறை பாதுகாப்பு படையினர் **(Central Industrial Security Force)** 56 பேர் கடந்த 4 வருடங்களில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இந்தோ திபெத்தியன் எல்லை காவல்துறையில் ஸஷாஸ்திரா சீமா பல் (Sashastra Seema Bal (SSB)) இரண்டிலும் சேர்த்து 25 பேர் கடந்த 4 வருடங்களில் தற்கொலை செய்துள்ளனர்.

இதே காலகட்டத்தில் அசாம் ரைபிள் **(Assam Rifles)** படையில் 30 பேர் தற்கொலை செய்து இறந்துள்ளனர்.

கவனிக்க வேண்டிய விஷயம் என்ன வென்றால் இப்படி தற்கொலை செய்து கொண்டு இறந்தவர்கள் யாரும் உயரதிகாரிகள் கிடையாது. கடைநிலையில் உள்ளவர்கள். இந்தஅறிக்கை பாராளுமன்றத்தில் கொடுக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் எடுக்கப்பட்டது.

இப்படிப்பட்ட இறப்புகளை நாம் கணக்கில் கொள்வதே இல்லை என்பதே கொடுமையானது. தேசபக்தியை ஒட்டுமொத்தமாக குத்தகைக்கு எடுத்துள்ள பிஜேபி அரசு இதனை தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

புல்வாமா தாக்குதலில் இறந்த 40 மத்திய பாதுகாப்பு படையினருக்காவும் பதிலடி கொடுக்கப்பட வேண்டும். அதேப் போல் ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்களை தற்கொலை செய்து கொண்டு சாகவிட்டவர்களுக்கும் பதிலடி கொடுக்கப்பட வேண்டும் என்பதே நாட்டு மக்களின் விருப்பம். தேசபக்தர்கள் செய்வார்களா?

https://thewire.in/security/india-armed-personnel-suicides

**பிஜேடி(பிஜூ ஜனதா தள்) சட்ட மன்ற உறுப்பினரால் அவமானப் படுத்தப்பட்ட புல்வாமா உயிர் தியாகியின் உறவினர்.**

நாட்டின் பாதுகாப்பிற்காக தன் இன்னுயிரை ஈந்துள்ள உயிர் தியாகிகளில் ஒருவர் தான் ஒடிஷாவை சேர்ந்த மனோஜ் குமார் பெஹ்ரா என்பவர். வெளியில் தேசபத்தியாளர்களாக வேஷம் போடும் பல அரசியல்வாதிகள் உண்மையில் அப்படிப் பட்டவர்களாக இருப்பதில்லை என்பதே உண்மை.

அதை உண்மைப்டுத்தும் விதமாக ஒடிஷாவின் சட்டமன்ற உறுப்பினராக உள்ள தேபாஷிஷ் சமந்தராய் என்பவர் நடந்து கொண்டார். புல்வாமா தாக்குதலில் இறந்து போனமனோஜ் குமார் பெஹ்ராவின் இறுதிசடங்கிற்கு வந்த அவரின் உறவினரை ஆணவத்துடன் தரையில் தள்ளிவிட்ட காட்சி இப்போது இணையத்தில் வைரலாகிவருகிறது.

https://www.timesnownews.com/india/article/shameful-odisha-bjd-mla-manhandles-kin-of-crpf-jawan-martyred-in-pulwama-terror-attack-watch/368935

**2019 நாடாளுமன்ற தேர்தல் நடக்குமா?**

மோடியின் அரசாங்கத்தால், தற்போது நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற இயலாது என பிஜேபியினர் உறுதியாக நம்புகிறார்கள். எனவே, புல்வாமா தாக்குதலை காரணம் காட்டி ஒரு சிறிய அளவிலான போரை பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா தொடங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளன. ஒருவேளை நாடாளுமன்ற தேர்தலில் பிஜேபியினருக்கு இது வாக்குகளை பெற்றுதரும் என்று மோடி அரசுநம்புகிறது. இதனை உளவுத்தகவல்கள்மூலம் மோடி அரசுஉறுதி செய்யும். அதன் பின்னரும் அவர்களுக்கு ஆதரவு இல்லையெனில் போர் பதற்றத்தை காரணம் காட்டி ஓர் அவசரகாலத்தை பிரகடனப்படுத்தி 2019 நாடாளுமன்ற தேர்தல் இரத்து செய்யப்படலாம்.

**அபூ சித்திக்**
*மற்றும்*
**அபூ அப்ரஹ்**

# புல்வாமா தாக்குதல் குறித்த வலைதள கருத்துக்கள்

**Satheesh Kumar**
18 mins

2017 இல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவன் 2019 இல் தீவிரவாத தற்கொலைப்படை தாக்குதல் நடத்தியிருக்கான்.

இவனை விடுவித்தது யார்..? ஏன்..? எப்போது விடுதலையானான்...?

பக்காவா வீடியோ எல்லாம் தயாரிச்சுட்டு குண்டு வெடிச்சதும் வெளியிட்டது யார்..? ஐ.பி.அட்ரஸ் வைத்து அதை ட்ரேஸ் செய்யாதது ஏன்..?

KASHMIR TIMES
Online Edition

2 MILITANTS KILLED, ANOTHER ARRESTED

SHOPIAN, Sep 10: The encounter that started at Barbugh village of southern Shopian district on Saturday evening ended with the killing of two local militants and arrest of their third associate.

The encounter had started at around 6:00 PM Saturday after the forces including army and Special Operations Group (SOG) of police laid a siege to the village following an input about the presence of militants there. As the forces were surrounding the target area, militants opened fire on them which was retaliated triggering a gunfight. While, one of the militants identified as Altaf Ahmad Rather from Awneera Zainpora was killed in the initial exchange of fire, two of his associates were trapped in a house. The heavy exchange of fire continued till late evening amid clashes between the forces and youth. The forces had later suspended the operation and tightened the siege to ensure that the militants don't escape.


**cartoonist bala**
@cartoonistbala

ஹெல்மெட் போடலனா விரட்டிட்டுப்போய் மிதிச்சு கொல்ற போலீஸ் இருக்கும் நாட்டில் 350 கிலோ வெடி மருந்துடன் பயங்கரவாதியின் வாகனம் பாதுகாப்பு படைவீரர்கள் செல்லும் பாதுகாப்பு மிக்க பகுதியில் வந்து தாக்குதல் நடத்த முடிந்திருக்கிறது என்பது சாதாரணமாக கடந்து செல்ல முடியாத செய்தி..










**Ponnusamy Purushothaman**
1 hr

தீவிரவாதிகள் தாக்குதலில் கொல்லப்பட்ட சிஆர்பிஎஃப் வீரர்கள் பட்டியலில் நசீர் அகமது பெயர் இருக்கு, சுப்ரமணியம் பெயர் இருக்கு, சிங் பெயர்கள் இருக்கு, யாதவ் பெயர் இருக்கு ஆனால் ஒரு "பார்த்தசாரதி"யோ, "ஷர்மாவோ", "ஆச்சாரியோ" பெயரோ இல்லை. இது புரிந்தால் தான் இந்திய சமூகம், இந்து சமூகம் குறித்த புரிதல் வரும்.

10% இட ஒதுக்கீடு கேட்ட முற்பட்ட சாதிகளில் 10% கணக்கில் 4பேராவது வரவேண்டும் அல்லவா? எங்கே உங்கள் உயர் சாதி ஏழைகளின் பெயர்கள்?

**Sathiya Sothanai**
@Timepassna

Replying to @maalan

1.24 மணிநேர தீவிரரோந்து கண்காணிப்பு
2.தீவிரவாதிகளின் ரேடார் ஒயர்லெஸ் ஐ ஒட்டுகேட்கும் நுண்ணறிவு
3.தேசியநெடுஞ்சாலை செக்போஸ்ட்கள்
4.2500 வீரர்களின் இடப்பெயர்ச்சி
5.350KGவெடிமருந்து

எல்லாவற்றையும்விட மத்தியஅரசின் நேரடிகட்டுப்பாட்டில் காஷ்மீர்

இப்ப சொல்லுங்க
என்ன [illegible] மோடி?

Translate Tweet

2:18 pm · 15 Feb 19 · Twitter for Android





# பெருமாள் கோயிலில் குஞ்சாலி மரைக்காயர்

தமிழரின் கடல் வாணிப வரலாற்றில் எனக்கிருக்கும் ஆர்வத்தை அறிந்த நண்பர் ஒருவர், அந்தத் தகவலைச் சொன்னார். 'தெக்க, ஒரு பெருமாள் கோயில்ல பழங்கால கப்பல் படம் வரைஞ்சிருக்கும். அங்க குஞ்சாலி மரைக்காயரை சனங்க கும்புடுறாங்க'. தமிழ் இனக் குழுக்களில் 14-ம் நூற்றாண்டு முதல் கடல் வணிகத்தில் சிறந்து விளங்கியவர்கள் மரைக்காயர்கள். 16 -ம் நூற்றாண்டில் போர்த்துகீசியரை எதிர்த்துப் போரிட்டு வீர மரணமடைந்த குஞ்சாலி மரைக்காயர்கள் குறித்த நூல்கள், திரைப்படங்கள் பற்றியெல்லாம் கேள்விப்பட்டிருந்த எனக்கு, அது புதிய செய்தி.

மிதமான வெயிலடித்துக்கொண்டிருந்த ஒரு மதிய நேரத்தில், அந்தப் பெருமாள் கோயிலைத் தேடி, தூத்துக்குடி மாவட்டத்தில், மணப்பாடு அருகில் உள்ள மாதவன்குறிச்சியைச் சென்றடைந்தேன். கண்ணில் பட்ட ஓரிரண்டு பெண்கள் அப்படி ஒரு கோயிலே ஊரில் இல்லை என்று சாதித்துக்கொண்டிருந்தபோது, அங்கு வந்த நடுத்தர வயதுப் பெண், "எங்க குலக் கோயில்தான் அது, வாங்க" என்று என்னை ஆர்வத்துடன் அழைத்துச் சென்றார். கோயிலின் இரும்புக் கேட்டை தள்ளியவுடன் உடனடியாகக் கண்ணில் பட்டது, மண்டப முகப்பில் வரையப்பட்டிருந்த, பழங்காலத்து பாய்மரக் கப்பலின் படம். மண்டபத்தினுள்ளே பல கிராம தெய்வங்களுடன் கட்டம் போட்ட வெள்ளை கைலியும், பச்சை நிறச் சட்டையும், வெள்ளை துருக்கி குல்லாவும் அணிந்தவாறு, தாடியுடன், குஞ்சாலி மரைக்காயர் அழகிய ஓவியமாகக் காட்சியளித்தார்.

**ஒரு நூற்றாண்டு யுத்தம்**

இந்தியப் பெருங்கடலில், 16-ம் நூற்றாண்டு வரையில் யாருடைய குறுக்கீடும் இல்லாமல் தங்குதடையின்றி நடந்துகொண்டிருந்த கடல் வணிகத்தை, குறிப்பாக நறுமணப் பொருள் வணிகத்தைத் தங்களுக்கு மட்டுமே உரியது என்று ஏகபோக உரிமை கொண்டாட ஆரம்பித்தனர் ஐரோப்பிய போர்த்துக்கீசியர். அக்காலத்தில் இந்திய மன்னர்களுக்குக் கடற்படையென்று தனியாக எதுவும் கிடையாது. வணிகக் கப்பலில் செல்லும் பாதுகாப்புப் படைகளே கடற்கொள்ளையர்களைச் சமாளித்துக் கொண்டன.

அப்போது, தமிழகக் கடல் வணிகம் என்பது பெரும்பாலும் தென்னக முஸ்லிம்கள் வசம் இருந்ததால், போர்த்துக்கீசியரை எதிர்த்து நிற்க வேண்டிய பொறுப்பும் அவர்களையே சார்ந்திருந்தது. கோழிக்கோடை ஆண்டுவந்த சாமுத்ரி, முக்குவ மீனவக் குடும்பத்தில், வீட்டுக்கு ஒருவர் இஸ்லாத்தைத் தழுவ வேண்டும் என்று உத்தரவிட்டான். இவ்வாறு பலப்படுத்தப்பட்ட கடற்படையைக் கொச்சியைச் சார்ந்த குஞ்சாலிகள் தலைமையேற்று, கேரள, தமிழக, இலங்கைக் கடற்கரைகளில் போர்த்துக்கீசியரோடு சண்டையிட்டனர். கோழிக்கோடு, பொன்னானி, கொல்லம், கொச்சி, காயல்பட்டினம், தூத்துக்குடி, கீழக்கரை, வேதாளை என்று

பல்வேறு இடங்களில் ஒரு நூற்றாண்டுக்கும் மேல் சண்டைகள் நடைபெற்றன.

பீரங்கி பொருத்தப்பட்ட 'காரவல்' என்ற போர்த்துக்கீசிய பெரும் கப்பல்களோடு மோதுவது சிரமம். ஆனால், அக்கப்பல்களை உடனுக்குடன் திசை திருப்புவது எளிதல்ல என்பதோடு, அவை கடலில் விரைந்து செல்ல வேகமான காற்றின் உதவியும் தேவை. எனவே, குஞ்சாலிகள் பெரும் கப்பல்கள் புக முடியாத ஆற்று முகத்துவாரங்கள் போன்ற குறுகிய இடங்களில் மறைந்திருந்து, சிறு படகுகளில் விரைந்து, துடுப்பைப் போட்டு காரவல்களைத் தாக்கிவிட்டுத் திரும்பும் உத்தியைக் கையாண்டு, வெற்றியும் பெற்றனர். சிறிய படகுகள் என்பதால், போர்த்துக்கீசிய பீரங்கிகளுக்கு அவை எளிதாகச் சிக்கவில்லை. வரலாற்று ஆய்வாளர்

கே.கே.என்.குறுப்பு 'இந்தியாவின் கடற்படை மரபுகள்: குஞ்சாலி மரைக்காயர்களின் பங்கு' என்ற நூலில் 'இது போன்ற பல படகுகளை ஆற்றின் முகத்துவாரத்தில், குறுகிய நீர்ப் பரப்பிலும் குஞ்சாலிகள் மறைத்துவைத்திருந்தனர். அவை ஒன்றுசேர்ந்து போர்த்துக்கீசிய காரவல்களைத் தாக்கி, அவற்றின் பாய்மரங்களைத் தீயிட்டு செயலிழக்கச் செய்தன' என்கிறார்.

மரைக்காயர்களின் போர்த் தந்திரத்துக்கு ஏற்றவாறு மாதவன்குறிச்சி அருகில் கடலில் கலக்கும் ஆற்று முகத்துவாரம் அமைந்துள்ளது. குஞ்சாலிகள் என்னதான் திறம்பட சண்டையிட்டு சில வெற்றிகளை அடைந்திருந்தாலும், போர்த்துக்கீசியரின் உயர்ரக ஆயுதத் தொழில்நுட்பத்துக்கு முன்னர், முடிவில் தோல்வியையே தழுவினர். மணப்பாடு போர்த்துக்கீசியர் கைவசமிருந்தது. குஞ்சாலி மரைக்காயர்களில் ஒருவர் அல்லது அவர்களது தளபதிகளில் ஒருவர் மாதவன்குறிச்சி அருகில் போரிட்டு வீர மரணம் அடைந்திருப்பாரோ என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது. ஏனென்றால், போரில் மரணத்தைத் தழுவியோரைத் தெய்வமாக்கிக் கௌரவிப்பது இம்மண்ணின் கலாச்சாரம்.

**ஆணியில்லாத கப்பல்**

மரைக்காயர் வழிபாட்டுக்கான காரணம் குறித்து விசாரிக்கையில் ஒவ்வொருவர் சொல்லும் கதையும் சற்று மாறினாலும், பெரும்பாலானவை வரலாற்றுச் சம்பவங்களுடன் ஒத்துப்போகின்றன. நம் நெடிய பாரம்பரியத்தில் தொலைந்துபோய்விட்டவற்றின் பதிவுகளாகவும் அந்தக் கதைகள் அமைந்துள்ளன. உதாரணமாக, புரட்டாசி மாதம் கோயில் கொடையின் போது நடைபெறும் வில்லுப்பாட்டில் 'நம்ம மரைக்காயருக்கு 999 கப்பல் இருந்துச்சு. அவுக ஆயிரமாவது கப்பல,ஆணியில்லாத கப்பலா இருக்கணுமுன்னு முடிவு பண்ணுனாக...' என்று சேர்ம சுந்தரி தாமோதரன் குரலை உயர்த்தி, இழுத்துப் பாடும் போது, ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் தமிழர்களின் கப்பல்களை ஆணிகள் பயன்படுத்தாமல் வலுவாகக் கட்டும் திறன் பெற்றிருந்தனர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

மரைக்காயரின் ஓவியத்துக்கு முன்னே உள்ள சிறு மேடையில் அமர்ந்தவாறு, தனது வில்லுப்பாட்டினைத் தொடரும் சேர்ம சுந்தரி குழுவினர், ஆணியில்லாத கப்பலை உருவாக்குவதற்காகக் காட்டுக்குள் சென்ற மரைக்காயரும், விஸ்வகர்மாக்களும் கபாலசாமி குடியிருந்த மரத்தை விவரம் தெரியாமல் எதேச்சையாக வெட்டுவதிலிருந்து, மரைக்காயர் கடல் போரில் மரணமடைந்தது, பூசைக்குத் தகுதிபெற்றது வரை விவரிக்க, இதனூடே பெருமாள் கோயில் கொடை நடைபெறுகிறது. வில்லுப்பாட்டில் சகோதரர்களாக வர்ணிக்கப்படும் குன்னாலி, குட்டி அலி என்ற பெயர்கள் குஞ்சாலி மரைக்காயர்களின் வரலாற்றுடன் வரும் மரைக்காயர் பெயர்களுடன் ஒத்துப்போகின்றது. கேரளக் கடற்கரையில் ஆரம்பித்த மரைக்காயர்களின் கடற்பயணம் மணப்பாடு அருகே சோக முடிவை அடைந்ததையும் வில்லுப் பாட்டு விவரிக்கின்றது. இந்தச் சம்பவம் சுமார் 400-லிருந்து 500 வருடங்களுக்குள் நடந்திருக்கலாம் என்று அனைவரும் கருதுகின்றனர்.

**தொன்மங்களின் பொருள் விளக்கம்**

இவ்வாறு பல்வேறு நிகழ்வுகள் கேரளத்து குஞ்சாலி மரைக்காயர் வரலாற்றுடன் ஒத்துப்போனாலும், வில்லுப்பாட்டு அவர்களை ராமநாதபுரம் அருகில் உள்ள கீழக்கரையின் அரசர்களாகச் சித்தரிக்கின்றது. 400 வருடங்களுக்கும் மேலான வரலாறு, காலப் போக்கில் அவரவர் புரிதலுக்கு ஏற்ப மாறியிருக்கிறது என்று இதை எடுத்துக்கொள்ளலாம். ஆயிரமாவது கப்பலை ஆணியில்லாத கப்பலாக்குவதில் மரைக்காயர் காட்டும் ஈடுபாடு, இழந்த தமிழர் கடல் பாரம்பரியத்தை மீட்டெடுக்கும் முயற்சியாகவும் கருதலாம்.

ஐரோப்பிய காலனியத்துக்கு எதிராக, போர்த்துக்கீசியருடன் போரிட்டு வீர மரணமடைந்த குஞ்சாலி மரைக்காயர்களின் நினைவாக, சுதந்திர இந்தியா, 1954-ல் 'ஐ.என்.எஸ் குஞ்சாலி' என்ற இந்திய கடற்படைத் தளத்தை நிறுவிக் கௌரவித்தது. குஞ்சாலிகள் மறைவுக்குப் பின்னர் பெரும் வீழ்ச்சியைக் கண்ட தமிழகத்தின் கடல் வணிகப் பாரம்பரியம் கிட்டத்தட்ட நம் நினைவுகளிலிருந்து அடியோடு அகன்றுவிட்டது என்றே கூறலாம். கேரளா தவிர்த்து, தமிழகத்தில் குஞ்சாலிகள் பெரிதும் மறக்கப்பட்ட நிலையில், தென் தமிழ்நாட்டில் வருடா வருடம், மாதவன்குறிச்சி பெருமாள் கோயில் கொடை விழாவில் தொடர்ந்து உரிய மரியாதை செலுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

*நன்றி: தி இந்து*

**- கோம்பை எஸ்.அன்வர்**,
தமிழ் முஸ்லிம்களின் வேர்களைப் பதிவுசெய்த 'யாதும்' எனும் ஆவணப்படத்தை இயக்கியவர், வரலாற்று ஆய்வாளர்.



# நான் ஏன் பா.ஜ.க வில் இருந்து வெளியேறினேன்?

சிவம் சங்கர் சிங் - *2013* -ஆம் ஆண்டில் பாரதீய ஜனதா கட்சிக்காக பிரச்சாரம் செய்தவர். மோடி தன்னை மிகப்பெரிய சிறந்த நிர்வாகியாக காட்டிக் கொண்டிருந்த நேரம் அது. இந்த வேளையில் தான் **Citizens for Accountable governance** எனும் குழுவை தேர்தல் வியூகங்களை வகுப்பவரான பிரஷாந்த் கிஷோர் என்பவர் ஆரம்பித்தார். சில கன்சல்டன்சிகளில் பணிபுரியும் இளம் திறமையாளர்கள் தங்கள் வேலைகளை துறந்து விட்டு, இக்குழுவில் இணைந்து மோடிக்காக பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தார்கள். இந்த பின்னணியில் பா.ஜ.காவில் இணைந்தவரே சிவம் சங்கர் சிங்.

*2017, 2018*-இல் மனிப்பூர் மற்றும் திரிபுரா மாநிலத் தேர்தல்களில் பா.ஜ.க விற்காக பணிபுரிந்த அவர் தேர்தல் வியூகங்களை வகுப்பதற்கும், வாக்காளர்களை குறி வைப்பதற்காகவும் சமூக வலைதளங்கள் மூலம் தரவுகளை திரட்டியுள்ளார். தேர்தல் வெற்றிக்காக பா.ஜ.க அள்ளிதெளித்த வாக்குறுதிகளுக்கும், வெற்றி பெற்ற பின்னர் அக்கட்சியின் செயல்பாடுகளுக்கும் மிகப் பெரிய அளவிலான இடைவெளி இருப்பதை அவர் கவனித்துள்ளார்.

அதன் பின்னர் பா.ஜ.க விற்கு பிரச்சாரம் செய்வதை கைவிட்ட அவர் தற்போது பிஹாரில் பா.ஜ.க வை எதிர்க்கும் மஹா கூட்டணிக்கு (மகாஹத்பந்தன்) பணிபுரிந்து வருகிறார். அவர் **2018** ஜூன்-இல் நான் ஏன் பா.ஜ.க.வில் இருந்து வெளியேறினேன் என்ற தலைப்பில் **Medium** என்ற வலைபக்கத்தில் தனது கருத்துக்களை பகிர்ந்திருந்தார். ஜனவரியில் அவரை டெல்லியில் தி கேரவான் பத்திரிக்கையின் நிருபர் துஷார் தாஹ்ரா சந்தித்துள்ளார். அந்த சந்திப்பின்போது, பா.ஜ.க தேர்தல் வெற்றிக்காக சாதி மதவாதத்தை தூண்டும் வகையில் தொழில் நுட்பத்தை எப்படி பயன்படுத்துகிறது என்பதையும் விரிவாக பகிர்ந்துள்ளார்.

**மணிப்பூர் மற்றும் வட கிழக்கு மாநிலங்களில் வேலை செய்தது எப்படி?**

மணிப்பூர் மற்றும் வட கிழக்கு மாநிலங்களில் எவ்வாறு பணியாற்றினோம் என்று அவர் இப்படி விளக்குகிறார்.

பா.ஜ.கவிற்கு பிரச்சாரம் செய்ய ஆரம்பித்த பின், அக்கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் ராம் மாதவ்வின் தொடர்பில் இருந்தேன். **2017**-இல் நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலுக்காக மணிப்பூர் செல்ல அவர் என்னை கேட்டுக்கொண்டார். அங்கே அலுவலகமோ, கட்சி அமைப்போ எதுவும் இல்லை. சில கிராபிக் டிசைனர்கள், ஆராய்ச்சியாளர்களை வேலைக்கு அமர்த்தி, பிரச்சாரக் குழுவை ஏற்படுத்தி சில ஆய்வுகளையும் நடத்தினோம். பா.ஜ.கவிற்கு எதிரான எதிர்ப்பு மன நிலையே நிலவி வந்தது. இத்தடைகளை

தாண்டி வேலை செய்வதே சிரமமாக இருந்தது. பா.ஜ.க வெற்றி பெறுவதற்கு 31 இடங்கள் தேவை என்ற நிலையில் 21 இடங்களில் வெற்றி பெற்று, மற்ற சிறு கட்சிகளுடன் ஆதரவுடன் 2017 மார்ச்சில் பா.ஜ.க ஆட்சி அமைத்தது.

அதன் பின்னர் டெல்லி சென்ற நான் வட கிழக்கு மாநிலங்களின் தொகுதி குறித்து ஆய்வு செய்தேன். அதற்காக தரவுகளை **(Data)** சேகரித்தேன். பா.ஜ.க வெற்றி பெற வேண்டும் என்றால் வாக்கு சாவடிகளில் கவனம் செலுத்த வேண்டும். வெற்றி வாய்ப்பு சாதகமாக இல்லாத தொகுதிகளில் அதிக கவனம் செலுத்த வேண்டாம் என்பதே திட்டம்.

இதற்கு முந்தைய மூன்று நாடாளுமன்ற மற்றும் சட்டப்பேரவை தேர்தல் குறித்த தகவல்களை தேர்தல் ஆணையத்திடம் இருந்து பெற்றோம். அவையனைத்தையும் ஒன்றிணைத்து, வாக்குகள் எப்படி மாறுகிறது என்பதை அலசினோம். வட கிழக்கு மாநிலங்களில், காங்கிரசும், மாநில கட்சிகளும் இருந்தனவே தவிர, அங்கே பா.ஜ.க இல்லை. திரிபுராவில் ஆட்சி செய்து கொண்டிருந்த கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக எந்த தொகுதிகளில் அதிக வாக்கு விழுகின்றது என்பதை பகுப்பாய்வு மூலம் அறிந்து கொண்டோம். இதனுடன், சமூக பொருளாதாரம், சாதி மற்றும் கருத்து கணிப்பு தரவுகளையும் இணைத்து பகுப்பாய்வு செய்தோம். எந்தெந்த சாதிகள் மற்றும் பழங்குடியினர் யாருக்கு வாக்கு அளிக்கிறார்கள் என்பதில் கவனத்தை குவித்து விவாதித்தோம்.

வாக்கு சாவடிகளில் வெற்றிபெற்றால், தொகுதிகளை கைப்பற்ற முடியும், மாநிலத்தையும் கைப்பற்ற முடியும் என்பதே பா.ஜ.கவின் தேர்தல் வியூகம். இதற்கு முந்தைய தேர்தல்களில் ஒவ்வொரு வாக்கு சாவடிகளிலும் பதிவான ஓட்டுகளை ஆராய்ந்தோம். தேர்தல் ஆணையத்தின் படிவம் 20 - இன் மூலம் வாக்கு சாவடி வாரியாக வாக்குகள் பிரிந்த விதத்தை அறியலாம். ஒவ்வொரு கட்சிக்கும் எவ்வளவு வாக்குகள் பதிவாகின்றது என்பதும் தெரிந்து விடும்.

வாக்காளர் பட்டியலை டிஜிட்டல் வடிவமாக்கினோம். சமூக ஊடகங்கள் வழி தகவல்களை அனுப்புவதற்காக வாக்காளர் பட்டியலில் இருக்கும் பெயருடன் அதன் மொபைல் எண்களை இணைத்தோம். 60 நபர்களுக்கு ஒரு பொறுப்புதாரி. அவர் இந்த வாக்காளரின் வீடுகளுக்கு சென்று பா.ஜ.கவின் கொள்கைகளை விவரித்து அவர்களின் பதில்களை கட்சியிடம் சமர்பிக்க வேண்டும்.

மணிப்பூரில் நாங்கள் அரசாங்கத்தை அமைத்திருந்தாலும், அங்கே பெரும்பான்மையை பெறத் தவறி விட்டோம். எனவே திரிபுராவில் கவனமாக செயல்பட்டோம். திரிபுராவின் முன்னாள் முதலமைச்சர் மாணிக் சர்க்கார் திரிபுராவை அமைதியான மாநிலமாக மாற்றியது உண்மை தான்.

ஆனால், கடந்த 15-20 வருடங்களாகவே திரிபுரா அமைதியான மாநிலமாகத்தான் திகழ்கிறது என்று பிரச்சாரம் செய்தோம். எனவே இதில் மாணிக் சர்காரின் சாதனைகள் என்று எதுவும் இல்லை என்றோம். திரிபுராவில் அரசு ஊழியர்கள் நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தான் ஊதியம் பெறுகிறார்கள். அங்கே ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் பெரிய பிரச்னையாக இருப்பதை கண்டு கொண்டோம். ஊழியர்களுக்கு 20,000-30,000 ரூபாய் அதிகமாக வழங்கப்படும் என்று வாக்களித்தோம். இது மிகப்பெரிய மாற்றத்தை உண்டாக்கியது. பா.ஜ.க அங்கே வெற்றி பெற்றது.

இதே உத்தியை உத்திர பிரதேசத்திலும் பயன்படுத்தினோம். இம்மாநிலத்தில் மக்களின் பெயர்களை வைத்தே அவர்களின் ஜாதி மதத்தை அறிந்து கொள்ளலாம். வாக்காளர் பட்டியலுடன் மொபைல் எண்களை இணைத்த பின்பு, ஒவ்வொரு ஜாதியை சார்ந்தவர்களுக்கும் தனிப்பட்ட தகவல் அனுப்பப்படும்.

உதாரணமாக, இதர பிற்படுத்தப்பட்ட பிரிவுக்குள் யாதவ் சமூகம் வரும். இந்த யாதவ் சமூகமே, சமாஜ்வாதி கட்சிக்கு ஓட்டு வங்கி. எனவே யாதவ் அல்லாத இதர பிற்படுத்தப்பட்ட சமூகத்தையும், தலித்துகளையும் பா.ஜ.க. குறிவைத்தது.யாதவ் அல்லாத இதர பிற்படுத்தப் பட்ட சமூகத்தை சார்ந்தவர்களுக்கு சமூக ஊடகங்கள் வழி இப்படி தனிப்பட்ட தகவல்களை அனுப்பினோம்.

“இட ஒதுக்கீடு சலுகைகளை யாதவ் சமூகத்தினரே அனுபவித்து வருகிறார்கள். சமாஜ்வாதி கட்சி ஆட்சியில் இருக்கும்வரை உங்களுக்கு இடஒதுக்கீடு சலுகைகள் கிடைக்காது.”.

இப்படிப்பட்ட தகவல்கள் அனைத்தும் பா.ஜ.கவின் அதிகாரப்பூர்வ சேனல்கள் வழி அனுப்பப்படாது.

**“NaMo Supporters 2019 Banaras”, “Kattar Hindu Sena”, “ Hindu Mahasbha”** போன்ற வாட்சப் குழுக்களின் வழி அனுப்பப்படும்.

முஸ்லிம்களுக்கு எதிரான மனநிலை கொண்டவர்கள் உத்திரபிரதேச இந்துக்கள் என்பதை அறிந்து கொண்டோம். எனவே அவர்களுக்கு இப்படி தகவல் அனுப்பினோம்.

“ஹிந்து மக்கள் தொகையை முஸ்லிம்களின் மக்கள் தொகை மிஞ்சி விடும்”.



இது உண்மையல்ல. எனினும் பா.ஜ.க இதன் மூலம் உணர்வுகளை தூண்டிவிட முயற்சித்தது.

இதனூடே பொய்யான செய்திகளையும் பரப்பினோம். உதாரணமாக, சிரியா, பங்களாதேஷ் வீடியோக்களை மக்களிடம் பரவ விட்டோம். அதனுடன் "முஷாபர்நகரில் என்ன நடக்கிறது என்பதை பாருங்கள்" என்று பதிவிட்டோம். வீடியோக்களில் வரும் நபர்கள் தாடியுடனும் தொப்பியுடனும் வருவதால் மக்கள் வித்தியாசத்தை அறிந்து கொள்ள மாட்டார்கள்.

சமூக ஊடங்களில் மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்கள் என்பது தொலைக்காட்சி, வானொலி இவற்றில் செய்யப்படும் விளம்பரங்களுக்கு இணையானது. இந்த பிரச்சார பணியை வெளியாட்களிடம் பா.ஜ.க ஒப்படைத்து விடும். அவர்களுக்கும் பா.ஜ.கவிற்கும் நேரடி தொடர்பு இருக்காது. மத்திய பிரதேசம் மற்றும் உத்திர பிரதேச மாநிலங்களில் பா.ஜ.கவிற்கு ஆதரவாக செயல்படும் 20-30 பேஷ்புக் பக்கங்களை இந்த குழுக்களே இயக்குகின்றன என்பது எனக்கு தெரியும்.

"We Support Indian Army", " We support Namo" "Nation With Namo" போன்ற பக்கங்களை 10-15 இலட்சம் பேர் பின்தொடர்கின்றனர். பதிவுகள் அதிகமாக பகிரப்படவேண்டும் எனில் பேஷ்புக்கிற்கு கட்டணம் செலுத்த வேண்டும். எனவே இதற்காக பணம் செலவிடப்படுகிறது. ஒரு பேஷ் புக் பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு மட்டும் 1.5 முதல் 2 கோடி வரை செலவிடப்படும். ஆனால் இது குறித்து பாஜக விடம் கேட்டால், இந்த பக்கங்கள் தங்களுடையது இல்லை, தங்களின் ஆதரவாளர்களால் நடத்தப்படுவது என்று கூறி விடும். மற்ற கட்சிகளும் பாஜக வை போன்று வியூகங்களை வகுத்து செயல்பட்டது.

பாஜக வின் 2019- இக்கான தேர்தல் வியூகம் என்பது ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு தனிப்பட்ட எதிரியை உருவாக்குவது. JNU விவகாரத்தை எடுத்துக் கொண்டால், தேசியவாதி என்று தன்னை கருதும் ஒவ்வொருவருக்கும் ஒரு எதிரியை உருவாக்கியுள்ளது. அதற்காக அர்பன் நக்சல் என்ற வார்த்தையை கையாள்கிறது. இடதுசாரி கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்களை அர்பன் நக்சல் என்று அழைப்பதன் மூலம் அவர்களை நாட்டுக்கு கேடு விளைவிப்பவர்களாகவே மக்கள் கருதுவார்கள் என்று இவ்வார்த்தையை பாஜக பயன்படுத்துகிறது.

EVM குளறுபடிகள், வாக்காளர் பெயர் நீக்கங்கள் மற்றும் போலி வாக்காளர்கள் இவற்றையும் தங்கள் நலனுக்காக பாஜக பயன்படுத்துகிறது. (பார்க்க : வைகறை வெளிச்சத்தின் முந்தைய மாத இதழ்கள்).

தமிழகத்தை எடுத்து கொண்டாலும் மேலே குறிப்பிட்ட பேஷ்புக் பக்கங்களின் பதிவுகள் பாஜகவினரால் பகிரப்படுகின்றன. தமிழகத்தில் இயங்கும் மாநில கட்சிகளை அவர்கள் தமிழர்களுக்கு எதிரானவர்கள், அவர்கள் தமிழ் மக்களுக்கு எதுவும் செய்யவில்லை என்று அவர்களை தமிழ் மக்களிடமே எதிரியாக கட்டமைக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது ஏன் என்பதை இப்போது புரிந்து கொள்ளலாம்.

ஆதாரம்: caravanmagazine (website),

29 ஜனவரி 2019

**அபூஹாசின்**




# கோப்ராபோஸ்ட்
# “ஆப்ரேஷன் கரோக்”

இந்தியாவில் எந்த விடயத்திற்கெல்லாம் விவாதங்கள் நடத்தப்பட வேண்டுமோ அதை தவிர மற்ற விடயங்களின் மீது கவனத்தை திருப்புவது தான் தற்போது தமிழக, இந்திய ஊடகங்கள் செய்து வரும் பணி. உண்மையை வெளிக்கொணரும் பணியில் இருப்பவர்கள், வெளிவரும் உண்மைகளை கூட எடுத்து சொல்வதில் பயம் கொள்கிறார்கள் அல்லது அரசியல் செய்கிறார்கள்.

அதனால் தான் இன்று ஊடகங்கள் செய்ய வேண்டிய பணியை தனித்தனி மனிதர்களாக சமூக வலைத்தளங்களில் செய்ய தொடங்கி விட்டார்கள். ஊடகங்கள் எடுத்துக் காட்ட தயங்குகிற உண்மைகளையும் தயக்கமில்லாமல் சமூக வலைத்தளங்கள் மூலமாக பொதுத் தளங்களில் விவாதிக்கிறார்கள்.

வெகுஜன மீடியாக்கள் வீடுதேடி வந்து கொடுத்த செய்திகளில் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்ட சூழலில் உண்மையான செய்திகளை தேடி சாமான்யர்களும், இளைஞர்களும் நகர தொடங்கியிருக்கிறார்கள். அதனால் உண்மை செய்திகளை வெளியிடும் பிரபலம் இல்லாத ஊடகஙளும் உலகளவில் பிரபலமாகின்றன. அப்படியொரு ஊடகம் தான் கோப்ராபோஸ்ட்.

அரசியல்வாதிகளையும், நேர்மையில்லாத ஊடகங்களையும் ரகசிய கேமராக்கள் மூலம், அவர்கள் மூலமே உண்மையை வெளிக்கொண்டு வருவதில் இதுவரை பல்வேறு சாதனைகளை செய்துள்ளனர். இதன் வரிசையாக பாலிவுட் நடிகர்களின் உண்மை முகத்தையும், பாஜக வின் இணைய பிரிவு எப்படி இயங்குகிறது என்பது பற்றியும் “ஆப்ரேஷன் கரோக்” என்ற பெயரில் ஒரு புலனாய்வை நிகழ்த்தியுள்ளனர்.

இது இந்தியா முழுவதும் ஒரு பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியிருக்கிறது. ஒரு தேசிய கட்சிக்கு சார்பாக மக்களால் விரும்பப்படும் நடிகர்கள் பிரச்சாரம் செய்து அதில் மறைமுகமாக பணத்தை பெற்றுக் கொள்வதும் தெரிய வந்திருக்கிறது.

பிப்.19ம் தேதி வெளிவந்த இந்த புலனாய்வு இன்று வரையும் சமூக வலைத்தளங்களில் பெருமளவு விவாதிகப்படுகிறது. ஆனால் வெகுஜன ஊடகங்கள் இதில் சிறிதும் கவனம் செலுத்தவில்லை.

முன்னனி நடிகர்களாகவும், பாடகர்களாகவும் உள்ள விவேக் ஓப்ராய், சன்னி லியோன், அபீஜித் பட்டாச்சார்யா போன்ற ஏராளமான நபர்கள் பணம் பெற்றுக்கொண்டு பாஜகவுக்கு ஆதரவாக வலைத்தளங்களில் பாஜக தரும் செய்திகளை வெளியிட ஒத்துக் கொண்டனர். தாங்கள் போடும் ஒரு கருத்துக்கு 2 லட்சம் வரை தரப்பட வேண்டும் என்று ஒப்பந்தம் எழுதிக்கொள்ளலாம் என்கிறார்கள்.

அதுமட்டுமல்ல கோப்ராபோஸ்ட் செய்தியாளர் பாஜக இணைய பிரிவிலிருப்பது போல் தன்னை அறிமுகப்படுத்தி கொண்டு, மொத்த தொகையில் 10% மட்டும் வெள்ளை பணமாக செக், அல்லது வங்கி கணக்கில் போட்டு விடுவதாகவும், மீதி தொகையை (கருப்பு)பணமாக வாங்கிக் கொள்ளுமாறும் அனைவரிடமும் கூறுகிறார். இதற்கு வித்யா பாலன், அர்ஷத் வர்ஷி, ராசா முர்ஷாத், சௌமியா டண்டன் போன்ற பிரபலங்களை தவிர மற்ற அனைவரும் முன்வந்து ஏற்றுக் கொண்டனர்.

ஊடகங்களில் விவாதிக்க வேண்டிய முக்கியத்துவம் நிறைந்த இச்செய்தியை பற்றி எந்த வெகுஜன ஊடகங்களும் கவனம் செலுத்தவில்லை. இந்நாட்டின் எதிர்கட்சிகள் கூட இதன் மீதான விசாரணைக்கு வலியுறுத்தவில்லை. இதுபோன்று பணத்தை பெற்றுக்கொண்டு நடுநிலை பிரபலங்களாக காட்டிக் கொள்ளும் மனிதர்களின் முகத்திரை கிழிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரை இப்படி பணம் கொடுத்து தான் பல நடிகர்கள் பாஜகவுக்கான அதரவு கருத்துகளை வெளியிடுகிறார்கள் என்ற சந்தேகம் இருந்த நிலையில் அதனை ஆதாரங்களுடன் நிரூபித்திருக்கிறது இந்த புலனாய்வு. இதற்கான விசாரணையும், தண்டனையும் இம்மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு கண்டிப்பாக கொடுக்க வேண்டியது இந்நாட்டின் நீதித்துறையின் கட்டாயம்.

-அபூ அனஸ்.

# சிலுவைப் போர் 2.0

JOHN FEFFER






## முஸ்லிம்களுக்கு எதிராக முஸ்லிம்கள்

தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,

இன்றைய நாட்களில் மேலை நாட்டவர்கள், அமெரிக்காவின் தலைமையின் கீழ், இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம் நாடுகளின் மீதும் தொடுத்து வருவது ஒரு சிலுவைப்போர். இதற்கு மேலை நாட்டவர்கள் வைத்திருக்கும் பெயர் சிலுவைப் போர் 2.0. முதல் சிலுவைப் போர் 1095 – இல் தொடங்கி 1274 –இல் முடிந்தது. இவை 9 போர்களாக நடந்தன. சிலுவைப் போர்கள் என்பவை கிருஸ்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் நடந்த போர். (கிருஸ்தவர்களின் கணக்குப்படி முதல் சிலுவைப் போர் 1274இல் முடிந்தது)

சிலுவை யுத்தம் 2.0 என்ற இரண்டாவது போர் 1991இல் தொடங்கியது என்பது வரலாற்று வல்லுநர்களின் கணிப்பு. இதை முதல் GULF WAR - முதல் வலைகுடா போர் என அழைப்பார்கள். (பார்க்க பின்குறிப்பு – 4)

இந்த சிலுவைப்போரை அதாவது இந்த இரண்டாவது சிலுவைப் போரை எப்படித் தொடங்கினோம்? அதன் கூறுகள் என்ன? எப்படி தொடர்ந்து கொண்டிருக்கின்றோம்? என்பனவற்றையெல்லாம் ஜான் பெப்ஃபர் என்பவர் ஒரு நூலாக தருகின்றார். அந்த நூலின் பெயர் CRUSADE 2.0 THE WEST'S RESURGENT WAR ON ISLAM. அதாவது சிலுவைப்போர் 2.0 – மேலை நாடு இஸ்லாத்தின் மேல் தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர். இந்த நூலின் தமிழ் வடிவமே இந்த தொடர். உலக நிகழ்வுகளின் பின்னணிகளைப் புரிந்திட இவற்றைப் படியுங்கள்.

நாங்கள் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் வெறுப்பை வளர்க்க முஸ்லிம் அல்லாதவர்கள் பெரும்பாலும் கிறிஸ்தவ எழுத்தாளர்கள், கதையாசிரியர்கள் ஆகியோரை மட்டும் பயன்படுத்தினால் போதாது என முடிவு செய்தோம். இஸ்லாம் ஆபத்தானது, முஸ்லிம்கள் கொடூரமானவர்கள் என்பதையெல்லாம் முஸ்லிம்களில் சிலரைக் கொண்டே பிரச்சாரம் செய்திட வேண்டும் என முடிவு செய்தோம்.


இந்த முயற்சியில் நாங்கள் சில பல முஸ்லிம் எழுத்தாளர்களைக் கண்டுபிடித்தோம். அவர்கள் ஏற்கனவே எங்கள் இஸ்லாம், முஸ்லிம் வெறுப்பு பிரச்சாரத்தில் வீழ்ந்தவர்கள். இவர்கள் முஸ்லிம்கள் சரியில்லை ஆனால் இஸ்லாம் நல்ல மார்க்கம் என்று தங்கள் நிலைப்பாட்டை தொடங்கினார்கள். இவர்களை நாங்கள் பாராட்டினோம். எங்கள் அமைப்புகள், அறக்கட்டளைகள் இவற்றில் இடம் தந்தோம், கௌரவித்தோம். இவர்கள் தாங்கள் பெரிதாக அங்கீகரிக்கப்பட்டதாக நினைத்தார்கள்.

இதனால் தங்கள் கருத்துக்களை தைரியமாக வெளியிட்டார்கள். காலப்போக்கில் இஸ்லாத்தின் கொள்கைகள், காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும். அவை பழைமை ஆனவை, புதுப்பிக்கப்பட வேண்டும் என்றெல்லாம் கருத்துக்களை வெளியிடத் தலைப்பட்டார்கள். காலப்போக்கில் இவர்களை முஸ்லிம்களில் சிலர் பாராட்ட முன்வந்தனர். இவர்கள் முற்போக்கு சிந்தனையாளர்கள் என்ற பெயரில் பிரபல்ய மானார்கள்.

இப்போது இன்றைய "முஸ்லிம்கள் சரி இல்லை" பழைய மார்க்கம் இஸ்லாம் புதுப்பிக்கப் பட வேண்டும் என்ற எண்ணம் முஸ்லிம்களிடையே பரவியது. ஆனால் எல்லா முஸ்லிம்களும் இவர்களை ஏற்றுக் கொள்ள வில்லை. இது எங்கள் எதிர்பார்ப்புமில்லை. ஆனால் ஒரு விஷயத்தில் நாங்கள் வெற்றிப் பெற்றோம். அது எங்கள் எதிரிகளின் கோட்டைக்குள்ளேயே எங்கள் யுத்தத்தை கொண்டு சென்று விட்டோம். (பார்க்க பின் குறிப்பு 1)

இதில் நாங்கள் கையில் எடுத்த முஸ்லிம் எழுத்தாளர்களில் வாஃபா சுல்தான் என்பவர் மிகவும் முக்கியமானவர். இவர் ஒரு பெண் எழுத்தாளர். ஒரு மனநோய் மருத்துவர். சிரியாவில் பிறந்தவர். அமெரிக்காவில் இருந்து செயல் படுபவர். இவர் நாங்கள் தந்த பாராட்டுகளால் பெரிதும் கவரப்பட்டார். நாங்கள் எதிர்பார்த்ததை விட அதிகமான ஆர்வத்தை இஸ்லாத்தை எதிர்ப்பதில் காட்டினார்.

இந்த வாஃபா சுல்தான் இஸ்லாத்திற்கெதிராக எழுதிய முதல் நூல். **"A GOD WHO HATES"** "வெறுக்கும் கடவுள்" என்றொரு நூல்.





இந்த நூலில் EVILS OF ISLAM - இஸ்லாத்தால் விளையும் தீமைகள் என்றொரு அத்தியாயம். அதில் இஸ்லாம் ஒரு மதமல்ல, அஃதோர் அரசியல் தத்துவம் இந்த அரசியல் தத்துவத்தை இஸ்லாம் மக்கள் மீது திணிக்கிறது. எனப் பிரஸ்தாபித்தார்.**(Source: A GOD WHO HATES. Newyork WAFA SULTAN. St.MARTINS:2009. Page 240)**

இந்தப் பெண்மணி இஸ்லாத்திற்கெதிராக ஓர் இமாலயப் பணியைச் செய்து கொண்டிருந்தாள். இந்த அம்மா எங்கள் யுக்தியின் வெற்றி என்றே எடுத்துக் கொண்டோம்.

இந்த வெற்றியில் உற்சாகம் பெற்ற நாங்கள், இந்த பெண்மணியைப் போன்ற முஸ்லிம்களைத் தேடத் தொடங்கினோம். இப்போது இன்னொரு பத்திரிகையாளர் தென்பட்டார்.

அவரும் ஒரு பெண் எழுத்தாளர்தான். பெயர் இர்ஷாத் மன்ஜ். அவரைப் பாராட்டினோம். புகழ்ந்தோம். வசதிகளை ஏற்படுத்தித் தந்தோம். எங்கள் வலையில் விழ வைத்தோம். ஊடகங்களில்




அவருக்கு மிகையான முக்கியத்துவங்களை வழங்கிட வைத்தோம்.

இவர் இஸ்லாத்திற்கு எதிராக ஒரு நூலை எழுதி வந்தார். அதன் பெயர், **"THE TROUBLE WITH ISLAM."** இஸ்லாத்திலுள்ள தொந்தரவு. என்னவெனில் அதன் மனநிலையே ஒரு பாலைவனம். ஏனெனில் அது பாலைவனத்தோடு சம்மந்தப்பட்ட ஒரு மார்க்கம்" **"THE DESERT MIND SET" (Source: IRSHAD MANJI - THE TROUBLE WITH ISLAM - Newyork St. MARTIN 2003)**


(இந்த வெளியீட்டாளரைப் பற்றி பின் குறிப்பு 2இல் பார்க்கவும்)

நாங்கள் எதை விட்டாலும், இதுபோல் இஸ்லாத்திற்கெதிராக எழுதும் கருத்துக்களை பரப்பிடும் எழுத்தாளர்களை தேடுவதை நிறுத்திடவில்லை. எங்கள் தேடுதல் வேட்டையில் எகிப்திலிருந்து ஒருவர் சிக்கினார். அவரது பெயர் நொய்னி தர்வேஷ். இவரை நாங்கள் தொடர்ந்து இஸ்லாத்திற்கு எதிராக எழுதச் சொன்னோம். முடிந்த வரை எழுதினார். முஸ்லிம்களில் சிலர் இவரை இஸ்லாத்திற்கு வெளியே சென்று விட்டார் என எழுதிட தலைப்பட்டார்கள்.

இவர் கோபப்பட்டார். அதை நாங்கள் நன்றாக பயன்படுத்திக் கொண்டோம். அவருடைய ஆத்திரங்களை அப்படியே நூலாக மாற்றினோம். அந்த நூல், **NOW THEY CALL ME INFIDEL -** அவர்கள் இப்போது என்னை மதம் மாறிவிட்டவர் என அழைக்கின்றார்கள்" எனப் பெயர் பெற்றது.

இந்த நூல் மக்களிடையே அதிவேகமாக விற்றுக் கொண்டிருக்கும் போது நாங்கள் அவரை இஸ்லாத்தை உண்மையிலேயே துறந்து விடுமாறு வேண்டினோம். அவரும் தயாராக ஒத்துக் கொண்டார். கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டார். அவருடைய நூல் அமோகமாக விற்பனையானது. அவர் தனது நூலில், "AN ATTACK ON CIVILAZATION ITSELF BY HATERS OF CIVILIZATION" என்றார். அதாவது, "நாகரீகத்தின் மீதே நாகரீகத்தை வெளிப்படுத்துபவர்கள் தாக்குதலை தொடருகின்றார்கள்."(Source: NONIE DARWISH, NOW THEY CALL ME AN INFIDEL; Newyork PENGUIN, 2006) பார்க்க பின்குறிப்பு *:3)*

அடுத்து இவர்களையும் இவர்களது எழுத்துக்களையும் வைத்துக் கொண்டு நாங்கள் என்ன செய்தோம் என்பதை இப்படிக்



குறிப்பிடுகின்றார் ஜான் பெஃபர்)

"All these books have mainstream publishers, and their authors have appeared widely in the media using these Muslims and Ex. Muslims as their spokes people a well founded New york of activists, journalists and think tankers has turned Islamo phobia into a cottage industry and a budding trans Atlantic endeavour"

(Source: JOHN FEFFER. CRUSADE 2.0, THE WEST'S RESURGENT WAR ON ISLAM. PAGE 20)

இதன் பொருள்:

**இந்த நூல்கள் எல்லாம் பொதுவாக எல்லா மக்களும் வாங்கிப் படித்திடும் நூல்களை வெளியிடுபவர்களிடமிருந்து வெளி வந்தவை. அவற்றின் ஆசிரியர்கள் காட்சி ஊடகங்களில் பிரபல்யமாக காட்சி தந்து கொண்டே இருந்தவர்கள். இந்த முஸ்லிம்களையும், முன்னாள் முஸ்லிம்களையும் முஸ்லிம்களின் செய்தித் தொடர்பாளர்களைப் போல், (முஸ்லிம்களின் பிரதிநிதிகளைப் போல்) பயன்படுத்தி இஸ்லாமோபோஃபியா என்ற இஸ்லாமியப் பீதியை ஒரு குடிசை தொழிலாக்கி வளர்த்தோம். அட்லாண்டிக் கடலைக் கடந்து வளரும் ஒரு நல்ல வியாபாரமாகவும் ஆக்கினோம்."**

இன்னும் சில சதிகள் தொடரும். இன்ஷா அல்லாஹ். (பார்க்க பின் குறிப்பு:4)

# சிலுவைப்போர் மார்ச் மாத தொடர் பின் குறிப்புகள்

**குறிப்பு** - 01

இந்தியாவில் முஸ்லிம்களுக்கெதிராகவும், இஸ்லாத்திற்கெதிராகவும் பிரச்சாரங்கள் நீண்ட நெடும் நாட்களாக நடந்து வருகின்றன. நமது கணிப்பின் படி ஆங்கிலேயர்கள் இந்தியாவில் காலெடுத்து வைத்ததன் முக்கியமான நோக்கங்களில் ஒன்று இந்தியாவை ஆட்சி செய்து கொண்டிருந்த முஸ்லிம்களிடம் இருந்து இந்தியாவை கைப்பற்றிட வேண்டும். அதனை ஆங்கிலேயர்களின் காலணியாகவும், கிருஸ்தவ பூமியாகவும் ஆக்கிட வேண்டும்.

பிரபல பத்திரிகையாளர், இஸ்லாத்தின் மேல் எள் முனை அளவுகூட நாட்டமில்லாத, அதே நேரத்தில் தனது முஸ்லிம் பெயரை மாற்றிட மனமில்லாத, எம்.ஜே.அக்பர், தான் தொடக்கக் காலத்தில்(BJP இல் சேருவதற்கு முன்னால்) எழுதிய நூலில் இதனை குறிப்பிடுகின்றார்.(Source: IN THE SHADE OF THE SWORD" by M.J.AKBAR)

ஆக அன்று முதலே அவர்கள் முஸ்லிம்களையும், இஸ்லாத்தையும் குறி வைத்துத் தாக்கி வருகின்றார்கள். அவர்கள் ஏற்படுத்தி வைத்த வெறுப்பையும் வெற்றுப் பொய்ப் பிரச்சாரத்தையும் இந்துத்துவவாதிகள் அப்படியே பின்பற்றி பாசிச படுகொலைகளையும் உடன் இணைத்து முஸ்லிம்கள் மீதும் இஸ்லாத்தின் மீதும் போர் தொடுத்து வருகின்றார்கள்.

தாங்கள் ஆட்சியில் அமரும் போதெல்லாம் முஸ்லிம்களின் தனியார் சட்டங்களில் கை வைப்பதும் முஸ்லிம்களைக் கொந்தளிப்புகளுக்கு உள்ளாக்குவதும் வழக்கம்.

இவர்கள் தங்களின் 4 லட்சம் முழு நேர ஊழியர்கள் வழியாகவும், 37 அமைப்புகள் / இயக்கங்கள் வழியாகவும் வெறுப்புப் பிரச்சாரத்தை 24X7 என சதா சர்வ காலமும் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டே இருக்கின்றார்கள்.

இதில் முஸ்லிம்களையும் இணைத்துக் கொண்டார்கள். இவர்களின் யுக்திகளுள் ஒன்று முஸ்லிம் பெண்களை மையப்படுத்தியே இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் கொந்தளிப்புகளுக்கு உள்ளாக்குவது. இதில் இவர்கள் தங்கள் பெண்கள் அணியைப் பயன்படுத்துகின்றார்கள் என்பது மட்டுமல்ல முஸ்லிம் பெண்களைக் கொண்டே சில அமைப்புகளையும் ஏற்படுத்தியுள்ளார்கள்.

அவற்றில் மிகவும் முக்கியமானவை, "முஸ்லிம் மகிளா அண்டோலன் என்ற அமைப்பும், பேபக் கலக்டிவ் என்ற அமைப்பும் அடங்கும். இந்த அமைப்புகளைப் பயன்படுத்தித்தான் இவர்கள் முத்தலாக் சட்டத்தை கொண்டு வந்தார்கள். இதிலும் ஒரு உத்தியைக் கையாண்டார்கள்.

குறிப்பாக பாசிசம் 2014ஆம் ஆண்டு குஜராத்

இனப்படுகொலைகள் புகழ் நரேந்திர மோடியின் தலைமையில் இந்தியாவில் ஆட்சி அமைத்தது. முதல் நால் முதலே முஸ்லிம்களுக்கெதிராக சதிகளையும், கொலைகளையும் கட்டவிழ்த்து விட்டது. முஸ்லிம் தனியார் சட்டங்களைக் கை வைத்திட நீதிமன்றங்களை குறிப்பாக உச்ச நீதிமன்றத்தைப் பயன்படுத்தியது.

முதலில் பொது சிவில் சட்டத்தைக் கொண்டு வருவோம். என மார்தட்டியது. முஸ்லிம் சட்ட வல்லுநர்கள் குறிப்பாக தாஹீர் மஹ்மூத் அவர்கள் நீதிமன்றங்களுக்கே அந்த உரிமை இல்லை என்றொரு கடிதத்தை அனைவருக்கும் எழுதினார். நீதிமன்றகளை கையில் வைத்துக் கொண்டும் கூட இவர்களால் பொது சிவில் சட்டத்தை கொண்டு வந்திட இயலவில்லை.

அதன் பின் பாசிஸ்டுகள் முஸ்லிம்களுக்குள் கருத்து வேறுபாடுகள் உள்ள ஒரு விஷயத்தை எடுப்போம் எனத் திட்டம் போட்டார்கள். "முத்தலாக்" விவகாரத்தில் முஸ்லிம்களிடையே கருத்து வேறுபாடு இருக்கின்றது என்பதைக் கண்டுபிடித்தார்கள். சில நெறிக்கெட்ட பெண்களை கையிலெடுத்து, முத்தலாக் சட்டத்தை கொண்டு வந்தார்கள்.

முஸ்லிம்கள் கருத்து வேறுபட்டார்கள். பிரிந்து நின்றார்கள். யாரும் முத்தலாக் கூடாது என நின்ற பெண்களின் அதாவது முஸ்லிம் பெயர் தாங்கியப் பெண்களின் பின்னணியைப் பார்த்திடவில்லை. வைகறை வெளிச்சம், நீதி அமைதிக்கான மக்கள் இவற்றைத் தவிர.

முஸ்லிம்கள் எங்கள் தனியார் சட்டத்தில் தலையிட உச்ச நீதிமன்றம் உட்பட யாருக்கும் எந்த உரிமையுமில்லை என்று ஓரணியில் நின்றிருக்க வேண்டும். ஆனால் அவர்களில் சிலர் தாங்கள் தான் மெத்தப்படித்த மேதாவிகள் எனக் காட்டி ஊடகங்கள் வழி விளம்பரங்களைத் தேடிக் கொண்டார்கள்.

வேறு சொற்களால் சொன்னால் பாசிசத்தின் வலையில் தாராளமாக வீழ்ந்தார்கள்.

இதே போல் மேலை நாடுகளிலும் இஸ்லாத்திற்கெதிரான பெரும் போரில் அதாவது சிலுவைப் போர் *2.0* - இல் தாராளமாகத் தங்களைத் தந்தார்கள். சில முஸ்லிம்கள் இஸ்லாத்தின் எதிரிகள் விரித்த வலையில் தாராளமாக வீழ்ந்தார்கள்.

**குறிப்பு - 02**

செய்ண்ட் மார்டின் என்ற வெளியீட்டகத்தின் வேலையே இஸ்லாத்திற்கு எதிராகச் சிந்திப்பவர்களைச் சந்தித்து அவர்களின் இஸ்லாமிய எதிர்ப்பை நூல்களாக ஆக்கி மக்கள் மன்றத்தில் அவை எப்போதும் கிடைக்கும் படி செய்வதே! இதற்கு முன்னர் ஜான் பெஃப்பர் சொன்ன வாஃபா சுல்தானின் நூலை வெளியிட்டதும் இந்த செய்ண்ட் மார்ட்டின் தான் என்பது நினைவு கூரத்தக்கது.

**குறிப்பு - 03**

"பென்குவின்" என்பது உலகெங்கும் கிளைகளைக் கொண்ட ஒரு நூல் வெளியீட்டு நிறுவனம். இது யூத - அமெரிக்க பின்னணிகளைக் கொண்டது. இஸ்லாத்திற்கு எதிரான நூல்களை வெளியிடுவதில் மிகையாக ஈடுபடும் ஒரு நிறுவனம். ஆனால் உலக அளவில் மிகவும் பெயர் பெற்ற ஒரு நிறுவனம். பொதுத் தளத்தில் பல அரிய நூல்களையும் தந்துள்ளது.

**குறிப்பு - 04**

இஸ்லாத்திற்கு எதிரான சதிகள் எத்துணை பாரதூரமாகத் திட்டமிடப்படுகின்றன. அவை எத்துணை நிதானமாகச் செயல்படுத்தப் படுகின்றன. அதற்காக எப்படியெல்லாம், ஆட்பலம், அறிவு பலம் எல்லாம் சேர்க்கப்படுகின்றன. போன்ற வற்றையெல்லாம் முஸ்லிம்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இந்த திட்டங்களை பொறுமையோடு நேர்மையோடு எப்படி எதிர் கொண்டிட வேண்டும் என்பதை சிந்திக்க வேண்டும். சீரிய நேரிய செயல் திட்டங்களை வகுத்திட வேண்டும். செயல்படுத்திட வேண்டும். (இன்ஷா அல்லாஹ்)


**வைகறை வெளிச்சம்**
**வாசகர்கள் தங்களது சந்தாக்களை புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.**




# எது முதலில்?



டாக்டர். யூசுஃப் அல் கர்ளாவீ

மௌலவி இல்யாஸ் ரியாஜி.M.A.,



# நவீன கால சீர்த்திருத்தவாதிகளின் பிரச்சாரத்தில் "எது முதலில்?"

நவீன கால சீர்த்திருத்தவாதிகளின் இஸ்லாமியப் பிரச்சாரகர்களின் வாழ்க்கையைப் பார்த்தால் ஒன்று தெளிவாகத் தெரிகிறது.

எல்லா வகையான சீர்த்திருத்தங்களையும் அவர்கள் மேற்கொண்ட போதிலும் ஏதேனும் ஒரு பணியை மெத்த அக்கறையுடனும் முனைப்புடனும் செய்திருக்கின்றனர்.

முஸ்லிம் சமுதாயத்துக்கு எந்த பணி தேவை என்று அவர்கள் கருதுகிறார்களோ எதற்கு உயிரூட்ட வேண்டும், எதை மேலோங்கச் செய்திட வேண்டும் எது குறித்த விழிப்புணர்வு வேண்டும் என்று கருதுகிறார்களோ எதிலே குறையும் ஏற்பட்டிருப்பதாக கருதுகிறார்களோ அதை முக்கியப் பணியாக கையில் எடுத்து தன் முனைப்புடன் அதைச் செய்திருக்கிறார்கள்.

**அஹ்மத் அல்மஹ்தி**

முஹம்மது அஹ்மது அல்மஹ்தி. சூடான் நாட்டில் இராணுவ கலோனல் ஆக இருந்தவர். இவர் பிரிட்டனின் காலனி ஆதிக்கத்துக்கும், அதன் ஆதரவாளர்களுக்கும் எதிரான ஜிஹாதுக்கு முதலிடம் தந்தார். தன்னைப் பின்பற்றக் கூடியவர்களுக்கு எளிமை, உலகப் பற்றின்மை ஆகிய நன்னடத்தைப் பயிற்சிகளைத் தருவதற்கும் முன்னுரிமை தந்தார்.

**அஸ்ஸய்யித் ஜமாலுத்தீன் ஆஃப்கானீ**

ஆஃப்கானிஸ்தானில் நுழைந்து அங்குள்ள குடிமக்களின்(முஸ்லிம்களின்) இஸ்லாமிய வாழ்வையும் உலக வாழ்வையும் பறித்துக் கொண்டிருந்த பிரிட்டனின் ஆதிக்கத்துக்கு எதிராக மக்கள் மத்தியிலே விழிப்புணர்வு ஏற்படுத்துவதை இவர் முதன்மைப் பணியாகச் செய்தார்.



ஒரே கொள்கை, ஒரே கிப்லா, ஒரே லட்சியம், ஒரே மறுமை என்று இருக்க வேண்டும் முஸ்லிம்கள். என்பதே அவரது பிரச்சாரம். அவரது வாழ்விலும், நடத்தையிலும் இது பளிச்சென்று தெரிந்தது.

இவரும் இவரின் நண்பரும் மாணவருமான முஹம்மது அப்துஹூவும் இணைந்து தொடங்கிய “அல்உர்வத்துல் உஸ்கா” என்ற இதழ் வழியாகவும் பிரச்சாரத்தை செய்தார்.

### இமாம் முஹம்மது அப்துஹூ

ஒவ்வொரு முஸ்லிமும் இஸ்லாத்தின் மூல ஊற்றுக்களுடன் தன் அறிவைப் பிணைத்து சுதந்திரமாகச் சிந்திக்க வேண்டும். யாரையும் ஆதாரம் கேட்காமல் பின்பற்றக் கூடாது என்பதை தம் முதன்மைப் பணியாகக் கொண்டவர் இவர்.

தன்னைப் பற்றியும் தனது இலட்சியங்களைப் பற்றியும் இதோ அவர் பேசுகிறார்.

இரு பெரும் விஷயங்களையே நான் உரத்த குரலில் பிரச்சாரம் செய்கிறேன்.

ஒன்று: ஆதாரம் கேட்காமல் யாரையும் பின்பற்றும் சிந்தனையிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டும். கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கு முன்னர் வாழ்ந்த இந்த சமுதாயத்தின் மூத்த முன்னோடி(ஸலஃப்) தலைமுறையின் வழியில் இந்த சன்மார்க்கத்தை விளங்க வேண்டும், இம்மார்க்கத்தை விளங்க வேண்டுமென்றால் அதன் நதி மூலத்தை நோக்கிச் செல்ல வேண்டும்.

இந்த சன்மார்க்கத்துக்கு தீங்கு செய்பவர்களை விரட்டியடிக்கவும், இதில் குழப்பம் செய்பவர்களையும் கலப்படம் செய்பவர்களையும் துச்சமெனக் கருதித் தூக்கி வீசிடவும் மனித அறிவுக்கு சீர்துக்கிப் பார்க்கும் திறனை அல்லாஹ் வழங்கியுள்ளான். மனித இனத்தின் கட்டுக் கோப்பை பாதுகாப்பதற்காக அல்லாஹ் தந்துள்ள அருள்தான் அறிவு.

இந்த அறிவு எனும் துலாக்கோல்(தராசு) கொண்டு மார்க்கத்துக்கு உரிய இடம் தந்திட வேண்டும். இப்படி நான் பிரச்சாரம் செய்யும் போது சமுதாயத்தின் பிரிக்க முடியாத அங்கங்களான இருபெரும் குழுவினருடன் நான் முரண்பட்டேன்.

ஒன்று: மார்க்கக் கல்வி பயிலும் மாணவர்கள் இன்னும் அவர்களைப் போன்றே தரத்தில் உள்ளவர்கள். மற்றொன்று: உலகக் கல்வியைப் பயில்பவர்கள் இன்னும் அவர்களுக்குத் துணை நிற்பவர்கள்.

இரண்டு: நான் முனைப்புடன் பிரச்சாரம் செய்த இரண்டாவது விஷயம் அரபு மொழியின் வடிவமைப்பில் சில சீர்த்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்பது.

இவையன்றி முஸ்லிம்களின் சமுதாய வாழ்வில் அதிமுக்கியமாகத் திகழும் வேறொரு விஷயத்தையும் நான் பிரச்சாரம் செய்து வந்தேன். எந்த சமுதாயத்திடம் இது இல்லையோ அந்த சமுதாயத்தை இழிவும் பலஹீனமும், மரண பயமும் வந்து பிடித்துக் கொள்ளும், ஆனால் மக்களில் எவரும் அதை கண்டு கொள்ளவும் இல்லை. அப்படி ஒன்று இருப்பதை பற்றிக் கவலைப்படவும் இல்லை.

அது என்னவென்றால் குடிமக்கள் அரசுக்குக் கட்டுப்பட வேண்டும். அரசு குடிமக்களுக்கு நீதி வழங்கிட வேண்டும். இவ்விரண்டுக்கும் மத்தியிலுள்ள வித்தியாசத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆட்சியாளருக்குக் கட்டுப்பட வேண்டும். அது கடமை என்பதெல்லாம் சரிதான். ஆனால் அவரும் மனிதர்தானே! மனிதர்கள் தவறு செய்யக் கூடியவர்கள் தானே அவர்களுக்கும் மனோ இச்சை உண்டு. எனவே, சமுதாயம் தன் சொல்லாலும் செயலாலும் ஆட்சியாளர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும். இதுவே அவர்களைத் தவறு செய்யவிடாமல் தடுக்கும். அவர்களைக் கட்டுப்படுத்தும்.

இதை நாம் தெள்ளத் தெளிவாக நெத்தியடியாகப் பிரச்சாரம் செய்தோம்.

ஆனால் அநியாயம் தனது பிடியைத் தளர்த்தவில்லை, அக்கிரமக்காரனின் கைகள் இரும்பினால் ஆனவை. மக்கள் அனைவரும் அவனுக்கு என்னமாய் அடிமைச் சேவகம் செய்கின்றனர். (நூல்:



முஹம்மது அப்துஹூவின் வரலாறு. பாகம் - 1 பக்கங்கள்; 11,12 - முஹம்மது ரஷீஷ் ரிழா)

**இமாம் ஹசனுல் பன்னா ஷஹீத் (ரஹ்)**

இவர்கள் இஸ்லாத்தைப் பற்றி முஸ்லிம்கள் கொண்டிருந்த புரிதலை ஒழுங்கு படுத்தினார்கள்.

மேற்கத்தியவாதிகளும் ஓரியண்டலிஸ்டுகள் எனப்படும் கீழைத்தேயவாதிகளும் இஸ்லாம் ஒரு மதம் தான். அது வாழ்க்கை நெறியல்ல. அதற்கென சில வழிபாட்டு முறைகள் உண்டு. அது மக்களை ஆளும் வலிமை மிக்கது அல்ல. அது நல்ல மதமாக இருக்கலாம். அதற்கென ஓர் ஆட்சி அதிகாரம் அரசு என்பதெல்லாம் தேவையில்லை. அநியாயத்துக்கு எதிராகப் போராடாமல் பதுங்கி அடங்கிப் போவதையே இஸ்லாம் வழியாகக் காட்டுகிறது என்றெல்லாம் ஒரு மாயச் சித்திரத்தை இஸ்லாத்தின் மீது ஏற்படுத்தியிருந்தனர்.

அவற்றை அப்புறபடுத்தி அல்லாஹ்வும் ரசூலும் காட்டியபடி இஸ்லாத்தை அவர் காட்டினார்.

இஸ்லாம் என்பது ஒரு கொள்கை மட்டுமல்ல. அது ஒரு வாழ்க்கை நெறியும் கூட.

அது ஒரு மார்க்கம் மட்டுமல்ல. அரசமைப்புச் சட்டங்களையும் போதிக்கும் அறநெறி. அது உண்மையும் வலிமையும் உடையது.

அது அமைதியையும் போதிக்கும் அநீதிக்கு எதிராகப் போராடவும் தூண்டும். வாள், வேத நூல் இரண்டையும் சூழலுக்கு ஏற்ப பயன்படுத்தும் என்றெல்லாம் பிரச்சாரம் செய்தார்.

“இஸ்லாத்தின் ஓர் அங்கம் தான் அரசியல்” என்ற பிரகடனத்தை தெளிவாக முழங்கினார். சுதந்திரம், விடுதலை, இவை இஸ்லாத்தின் கடமைகளுள் ஒன்று என்று முழக்கமிட்டார். இதற்காக அவர் அரும்பாடுபட்டார்.

இதுபோல அவர் முஸ்லிம்களில் ஒரு புதிய தலைமுறைகளை உருவாக்கிட பெரும் பிரயத்தனம் செய்தார். அந்தத் தலைமுறை இறைவனை அடைவதையே தன் இறுதி லட்சியமாகக் கொண்டது. இஸ்லாமே தன் வாழ்வு என வாழ்ந்தது. முஸ்லிம்கள் அனைவரும் நமது குடும்பம் என உணர்ந்தது.

இஸ்லாத்தை மிக நுட்பமாகப் புரிந்து ஆழமாக இறை நம்பிக்கையுடன் பின்னிப் பிணைந்து செயல்பட்டது.

இஸ்லாத்தை தம்முடைய வாழ்வில் முழுமையாகச் செயல்படுத்திய பிறகு மக்களையும் அதை நோக்கி ஈர்த்தது. வாழ்வின் ஒவ்வொரு அங்குலத்தையும் இஸ்லாமிய அடிப்படையில் அமைந்திட அனைவருக்கும் வழிகாட்டியது.

இந்த இலட்சியப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் போதே முஸ்லிம்களை ஓரணியாகத் திரட்டியது. பிளவை வெறுத்தது. ஒன்று பட வேண்டும் என்று வலியுறுத்தியது.

அவர் உருவாக்கிய அந்த உன்னதத் தலைமுறை முஸ்லிம்களைப் பிளக்கின்ற அவர்களின் முழக்கத்தைச் சிதைக்கின்ற அவர்களைக் கூறு போடுகின்ற தலைப்புகளில் எங்கும் உரை நிகழ்த்துவதில்லை.

இஸ்லாத்தின் அடிப்படைச் சட்டங்களின் கீழ் முஸ்லிம்கள் ஒற்றுமையாக இருந்தால் அதுவே போதுமானது என்றே வாழ்ந்தது அந்தத் தலைமுறை.

இமாம் ஹசனுல் பன்னா ஷஹீத்(ரஹ்) தனது இருபதுக்கும் முப்பதுக்கும் இடைப்பட்ட வயதிலேயே ஒரு நிலைப்பாட்டைக் கூறி வந்திருக்கிறார்.

“இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள் ஷரீஅத்தின் அடிப்படை வழிமுறைகள் அடிப்படையான ஒழுக்கங்கள் இவற்றின் கீழ் முஸ்லிம்கள் ஒன்று பட வேண்டும். முடிவற்றுத் தொடரும் பிரிவுச் சட்டங்களில் ஏற்படும் கருத்து வேறுபாட்டைத் தவிர்க்க வேண்டும்” இதுவே அவரின் நிலைப்பாடு.

அங்கே (எகிப்து நாட்டில்) சிறியதொரு பள்ளிவாசல் உண்டு. அங்கு அவர் பாடம் நடத்துவார். அவர் தன் உரைகளில் ஒரு சம்பவத்தை குறிப்பிட்டார். அது படிப்பினைக்குரிய சம்பவம்.

இன்ஷா அல்லாஹ் தொடரும்.

# விவேகானந்தர் அமெரிக்கா செல்ல உதவிய முஸ்லிம்கள்!



கி.பி.1860ல் ஸ்ரீமுத்து ராமலிங்க சேதுபதி இராமநாதபும் சமஸ்தானத்தின் அரசராக அறிமுகப்படுத்துவது பட்டத்து அரசர்களின் வேலை.

கி.பி. 1860ல் ஸ்ரீமுத்து இராமலிங்க சேதுபதி இராமநாதபுரம் சமஸ்தானத்தின் அரசராக இருந்தார். அவருக்குப் பின் அவர் மகன் ஸ்ரீ பாஸ்கர சேதுபதி அரசரானார். பாஸ்கர சேதுபதி அரசவையில் பட்டத்து சுல்தான் அப்துல் காதிர் மரைக்காயரும் அவர் தம்பி பட்டத்து சேக் தம்பி மரைக்காயரும் அரசின் முக்கிய பொறுப்பில் இருந்தனர்.

கி.பி.1897ல் அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் உலக ஆன்மீக மாநாடு நடைபெற்றது. அதில் பங்குபெற்று உரையாற்ற சுவாமி விவேகான்ந்தருக்கு அழைப்பு வந்தது. அமெரிக்கா செல்ல வழிச் செலவுக்கு இந்தியாவிலுள்ள ஐநூறுக்கும் அதிகமான மகாராஜாக்களை அணுகினார். யாரும் உதவ முன் வராமையால் மன வேதனையோடு கன்னியாகுமரி வந்து மூன்று கடல்களும் சங்கமிக்கும் கடலிலுள்ள பாறையில் தவம் இருந்தார். அப்பாறை இன்று அவர் பேரால் நினைவு மண்டபமாக உள்ளது.

சுவாமி விவேகானந்தர் இராமேஸ்வர்ம் கோவிலுக்கு சென்ற போது அங்கு வைத்து சேதுபதி அரசின் கொடைத்தன்மையை அறிந்து அவரைப் பார்த்து தன் அமெரிக்கப் பயணம் பற்றி பேச விரும்பினார்.

இராமநாதபுரம் சமஸ்தான அரசராக ஸ்ரீ பாஸ்கர சேதுபதி அரசரும் அமைச்சர்களாக பட்டத்து சுல்தான் அப்துல் காதிர் மரைக்காயரும் அவர் தம்பி பட்டத்து இளைய தம்பி மரைக்காயரும் இருந்தனர்.

சுவாமி விவேகானந்தர் முக்கிய பிரமுகர்கள் மூலம் பட்டத்து சுல்தான் அப்துல் காதிர் மரைக்காயரைப் பார்த்து அவர் மூலம் ஸ்ரீ பாஸ்கர சேதுபதியை சந்தித்து அவர் உதவியுடன் அமெரிக்கா சென்று உலக ஆன்மீக மாநாட்டில் ஆன்மீக உரையாற்றி உலகப் பெரியார்களின் அன்பையும், பாராட்டையும் பெற்றார்.

சுவாமி விவேகானந்தர் நாடு திரும்பும் போது நேராக வங்காளம் செல்லாமல் எந்த பொருளுதவி தக்குதவியதோ அந்த நன்றிக் கடனாக கப்பலில் இலங்கை வந்து அங்கிருந்து இராமேஸ்வரம் பக்கதிலுள்ள பாம்பன் பக்கமுள்ள (குற்றுக்கல்)

குற்றுக்கல்லில் வந்து இறங்கினார்.

சுவாமி விவேகானந்தர் குற்றுக்கல்லில் வந்து இறங்குவதை அறிந்த ஸ்ரீ பாஸ்கர சேதுபதியும், பட்டத்து இளவரசர் அப்துல் காதிர் மரைக்காயரும் ஏனைய அரசு அதிகாரிகளும் அரசு சார்பாக வரவேற்று இராமநாதபுரம் அரண்மனையிலும் வரவேற்பு நல்கி வாழ்த்தினார். இந்நிகழ்வை மதுரை தமிழ் சங்கப் புலவர் மு. இராகவய்யங்காரும், கீழக்கரை செய்யது முகம்மது புலவரும் உறுதி செய்துள்ளனர்.

சுவாமி விவேகானந்தர் இலங்கை, சென்னை, கும்பகோனம், கேரளா போன்ற பகுதிகளுக்கு நாடுபூரா சுற்றி ஆன்மீக கருத்துக்களை சொன்னதோடு இஸ்லாமிய, ஆங்கிலேய ஆட்சியில் நம் நாட்டில் இருந்த பல தவறுகள் களையப்பட்டதாகவும் நம் நாட்டிலிருந்த தீண்டாமை, சாதி வேற்றுமையை களைந்தும் சண்டைகளற்ற நாடாக உருவாக்கினதை மக்களை சந்தித்து உரையாற்றினார்.

பூரண சுதந்திரம் பெற்ற இந்தியா என்றால் என்ன? என்பதை மக்களுக்கு விளக்கிய சுவாமி விவேகானந்தர் இந்து வேதாந்த மூளையும், ஜைன கைகளும், கிறிஸ்தவ கால்களும், இஸ்லாமிய உடலுமான ஒருப் பூவாக ஒரே கொடியில் ஒரு பூ என்று பூத்து காய்க்கிறதோ அன்று தான் இந்தியா பூரண சுதந்திரம் பெற்ற இந்தியாவாக மாறும் என்று சொன்ன சொல் மத நல்லிணக்கத்திற்கும் ஆரோக்கியமான நாடாக நம் நாடு திகழவும் அது வழிவகை செய்யும்.

சுவாமி விவேகானந்தர் நாம் ஒவ்வொருவரும் அவர் அவர் மதத்தை பின்பற்றுவது தவறில்லை என்று, ஆனால் மதத்தை வைத்து சண்டை போடாதே அது அறிவின்மையின் அறிகுறி என்றும், தூய்மையும் அறிவும் வெளியேறி இதயம் வறளும் போது சண்டைகள் உண்டாகுமென சொன்ன சொல் மாந்தர்கள் ஏற்று நடந்தால் நாடு, வாழுமிடங்களில் மனித நேயமும், சண்டை சச்சரவுகள் வராத அமைதியான ஓர் பூங்காவாக நாட்டினை மாற்ற முடியும்.

இக்கட்டுரை டாக்டர். தைக்கா சுஹைபு ஆலிமின் சேவை மலரிலிருந்து குறிப்புகள் பார்த்து எழுதியது.

நூல் வெளியீடு: *16.06.1993*

இடம்: ஜனாதிபதி மாளிகை

வெளியிட்டவர்: அன்றைய ஜனாதிபதி திருசங்கர் தயாள்சர்மா அவர்கள்.

**ஹாஜி பி.எம். அப்துல் ரஹீம்**

குளச்சல், குமரி மாவட்டம்


இறைவனின் அழகியத் திருப்பெயரால்

நியூ **மலேஷியா**

**டிராவல் சர்வீஸ்**



பதிவு எண் : **2015/33/018/10098/ANSP**

அரசு அங்கீகாரம் பெற்றது

**உரிமை: S.B.S. பஷீர்**

- பாஸ்போர்ட் ஆன்லைன்
- விமான டிக்கெட்
- விசா சர்வீஸ்
- ECNR & PCC
- எம்பஸி அட்டெஸ்டட்
- GCC மெடிக்கல் சர்வீஸ்

**ECR நீக்கி ECNR மாற்றிட**

கிளை அலுவலகம்:

12, களைமகள் வீதி, MRF டயர்ஸ் பின்புறம்)
7வது குறுக்குத் தெரு,சுப்பையா நகர்,
பாஸ்போர்ட் அலுவலகம் அருகில்,
புதுச்சேரி - 605001.
செல்: 9894303789 | 9445907389

68, பெரிய கடை தெரு, பரங்கிப்பேட்டை,
கடலூர் மாவட்டம் - 608502
E mail ID: newmalaysiapno@gmail.com |Web : www.newmalaysiatravelservice.com

தொலைபேசி:
04144 243267
04144 243440

செல்:
7708803789
7708503789




# 11 இஸ்லாம்

## அரசியல் | அதிகாரம் | அரபுலக எழுச்சி

புரட்சிக்குப் பின், இஸ்லாத்தில் ஜனநாயகம் அங்கீகரிக்கப்பட்டதா அல்லது தடுக்கப்பட்டதா என்ற விவாதங்கள் நடைபெறலாயின. ஜனநாயகம் என்பது பாவச்செயல் என்றனர் இஸ்லாமியவாதிகள். ஆலோசனைகளை விவாதிக்கும் ஒரு நடைமுறை தான் ஜனநாயகம் என்றனர் மற்றவர்கள். சட்டசபையில் நுழைவது பாவம், ஏனெனில் குர்ஆனின் வழிகாட்டுதலில் அது இயங்கவில்லை என்று கருத்து தெரிவித்தனர் சிலர். அதேவேளையில், நாடாளுமன்றத்தில் நுழைவதன் மூலம் இஸ்லாம் சம்பந்தப்பட்ட பிரச்னைகளை அங்கே இஸ்லாமியவாதிகள் எழுப்ப முடியும் என்று கூறினர் சிலர். அதேப்போன்று, பெண்களின் தலைமையில் ஆட்சி நடைபெறுவது சரிதானா அல்லது தவறா என்றும் விவாதங்கள் நடைபெற்றன. பெண்களின் ஆட்சி ஷரியாவிற்கு எதிரானதல்ல என்று இமாம் ஹனீபா(ரஹ்) அவர்களின் கருத்தை சிலர் மேற்கோள் காட்டினர்.

பெண்களுக்கும், காப்டிக் கிறிஸ்தவர்களுக்கும் உரிய மதிப்பு அளிக்கப்படும் என்று தனது அரசியல் அறிக்கையில் அறிவித்தது முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் அரசியல் பிரிவான **FJP (Freedom and Justice Party).** கெய்ரோவில் நடைபெறும் கோப்துக்களின் திருவிழாவில் பங்கேற்பதற்காக தனது பிரதிநிதிகளை அனுப்பியது **FJP**. கோப்துக்களுடன்(கோப்துக்கள்(காப்டிக்) எகிப்தின் பழங்குடி கிறித்தவர்கள்) அரசியல் கூட்டணியையும் அமைத்து கொண்டது.

**இயக்கங்களின் அரசியல் பாதைகள்:**

புரட்சிக்கு பின், பொதுத் தளங்களில் இஸ்லாமியவாதிகள் தங்களுக்கென்று ஒரு இடத்தை பிடித்தனர். துனீசியாவில் இஸ்லாமியவாதிகள் பெற்ற வெற்றி, எகிப்து நாடாளமன்ற தேர்தலில் மற்ற இஸ்லாமிய இயக்கங்களுடன் இணைந்து **FJP** உறுப்பினர்கள் பெற்ற வெற்றி இவையனைத்தும் இஸ்லாமிய இயக்கங்கள் அரசியலை முன்னெடுத்து செல்ல வாய்ப்புகளையும் தளங்களையும் உருவாக்கின.

நேரடி அரசியலில் இறங்கிய பின், எதார்த்தமாக நடந்து கொள்ள வேண்டும் என்ற நினைப்பில் தனது முந்தைய பாதையில் இருந்து விலகி சென்றது **MBH.** பாலஸ்தீன் விவகாரங்கள் **MBH**-இன் தேர்தல் அறிக்கையில் இடம் பெறவில்லை. மற்ற அரசியல் கட்சிகளை போன்று வேலையின்மை, சமூக நீதி, வறுமை

ஆகிய பிரச்னைகளே அதில் இடம் பெற்றன. மற்ற தேசிய கட்சிகளை போன்று, தனது முந்தைய சித்தாந்தங்களை தொலைத்து கொண்டு, வாக்குறுதிகளை அளிப்பதும் அதை முறிப்பதும் என பரபரப்பாக இயங்கியது **FJP.**

நெடுங்காலமாக இயங்கி வந்த சலபுக்களிடத்திலும் சித்தாந்தத்தில் தொய்வும் மாற்றங்களும் அரபு புரட்சிக்கு பின் ஏற்பட்டது திகைப்பை ஏற்படுத்தியது. இஸ்லாத்தின் கொள்கைகளை உறுதியாக கடைப்பிடிப்பவர்களையும், முஹம்மது நபி(ஸல்) அவர்கள் காலத்திலும் அவர்களை பின்பற்றிய முதல் தலைமுறையினர் காலத்திலும் பின்பற்றப்பட்ட இஸ்லாத்தை அப்படியே கடைபிடிக்க வேண்டும் என்று விரும்புபவர்களையும் குறிக்க சலபு என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. எகிப்தில் சலபுக்களின் வளர்ச்சி கடந்த காலங்களில் கணிசமாக அதிகரித்து கொண்டே இருந்தது. அல் அஸ்கர் ஏற்படுத்திய சிந்தனை தாக்கத்தை விட, வளைகுடா நாடுகள், சவூதி அரேபியாவின் வஹாபி சிந்தனைக்கு அதிக கடன்பட்டிருக்கின்றனர் எகிப்து சலபுக்கள்.

**MBH**-க்கு மாற்றாக சலபுக்களை ஊக்கப் படுத்தியது எகிப்தின் சர்வாதிகார அரசு. புரட்சி தொடங்கிய வேளையில், அதில் கலந்து கொள்வதை பற்றி 2011 ஜனவரி 9-இல் வெளியிட்ட அறிக்கையில் எதையும் சலபுக்கள் குறிப்பிடவில்லை. அவர்களின் மௌனம், அதில் இணைந்திருந்த இளைஞர்களின் மத்தியில் கவலையை ஏற்படுத்தியது. இதுவே கருத்து ரீதியான பிளவையும் ஏற்படுத்தியது. 2011 பிப்ரவரி 2-இல் வெளியிட்ட அறிக்கையில் போராட்ட காரர்களின் வன்முறையை கண்டித்தது. சலபுக்களில் சிலர் போராட்டத்தில் கலந்து கொண்டதையும் பார்க்க முடிந்தது. எகிப்தின் எதிர்கால அரசியல் எப்படி இருக்க வேண்டும் என்ற திட்டத்தை தயாரித்தனர் சலபுக்கள்.

சலப்புக்கள் கட்சியை ஆரம்பிப்பார்கள், அரசியலில் இறங்குவார்கள் என்பதெல்லாம் அதுவரை எதிர்பார்த்திராத ஒன்று. அரசியல் களத்தில் தங்களுக்கு போட்டியாக சலபுக்கள் வந்துவிடுவார்களோ என எண்ணியது **MBH.** அரசியல் களத்தில் அதுவரை எந்த ஒரு செயல்பாடும் இல்லாதிருந்த சலபுக்கள், நாட்டின் பெரிய அரசியல் சக்தியாக மாறினர். **MBH**-க்கும் சலபுக்களுக்கும் அதுவரை கருத்தியல் மற்றும் அரசியல் ரீதியான எந்தவொரு உடன்பாடும் கிடையாது. ஆனால் எகிப்தில் புதிய அரசியல் வடிவமைப்பை ஏற்படுத்த வேண்டி, இரு அணிகளும் ஒருவருக்கொருவர் கைக்கோர்த்தனர்.

**MBH**-ஐ போன்றே தேர்தலில் போட்டியிடுவதற்காக அல் நூர் என்ற அரசியல் கட்சியை சலபுக்கள் ஆரம்பித்தனர். அரசியல் விவாதங்களில் திருப்பு முனையை ஏற்படுத்தியது அல் நூர் கட்சியின் தீர்மானங்கள். அரசியல், சமூக, பொருளாதார சீர்திருத்தங்களை உள்ளடக்கியதோடு, ஷரியாவிற்கு உயர்ந்த அதிகாரத்தை வழங்கிட வேண்டும் என்ற தீர்மானத்தையும், ஷரியாவின் அடிப்படையில் ஜனநாயக அமைப்பை ஏற்படுத்திட வேண்டும் என்றும் அவர்கள் முன்மொழிந்தனர்.

புரட்சிக்கு பின் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் 27.8 சதவிகித வாக்குகளை பெற்று 123 இடங்களில் வெற்றி பெற்று இரண்டாவது இடத்தில் வந்தது. சலபுகளின் கட்சி **FJP** கூட்டணி கட்சிகள் 37.5 சதவிகித வாக்குகளை பெற்று, 235 இடங்களை கைப்பற்றியது. சலபுக்கள் பெற்ற வெற்றி அவர்களின் அரசியல் நிலையை உயர்த்தியது. சலபுக்களை தவிர மற்ற அரசியல் கட்சிகளுடன் கூட்டணிக்கு வாய்ப்பில்லாத நிலைமைக்கு வந்தது **MBH.**

கீழ்அவையில் அல்நூர் கட்சியின் அரசியல் பிரவேசம் ஒட்டுமொத்த எகிப்திற்கும் ஓர் அரசியல் அதிசயம் தான். (இந்த அவை 2012 ஜூன் 14-இல் கலைக்கப்பட்டது). அரசியலில் கலந்து கொள்வதை கடந்த காலங்களில் சலபுக்கள் எப்பொழுதுமே கண்டித்தே வந்துள்ளனர். எனினும் மாறிவரும் அரசியல் சூழ்நிலைகளால் அவர்களும் போட்டிக்கு தள்ளப்பட்டனர். அதில் பலனும் அடைந்தனர். எகிப்து வரலாற்றில் முதல்முறையாக கீழ் அவையை இஸ்லாமியவாதிகள் கைப்பற்றினர். அவைத் தலைவர் பதவியையும் பெற்றனர். அது மட்டுமல்ல, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் அதிகாரத்தை வழங்குவதற்காக இராணுவத்திடமும் பேச்சு வார்த்தையில் அவர்கள் ஈடுபட்டனர். புரட்சிக்கு முந்தைய நிலைமையில் இது சாத்தியமேயில்லை.

சலபுக்களின் அரசியல் செயல்பாடுகள் நிலையாக இல்லை. மாறிக்கொண்டே இருந்தது. எகிப்து அதிபர் தேர்தலிலும் இந்நிலைமையை காண முடிந்தது. அரசியலை விட சமயம் சார்ந்த விவகாரங்களுக்கே முன்னுரிமை கொடுத்தனர் சலபுக்கள். **MBH**-ஐ போன்றே சலபுக்கள் மத்தியிலும் பிளவுகள் உண்டானது. அதிலிருந்து பிரிந்த ஒவ்வொரு அணியும் தங்களின் கொள்கைகளை விளக்கின.

அல் அஸலா, அல் பாதிலா போன்ற கட்சிகள் உதயமாயின. ஆரம்பத்தில் இருந்தே மார்க்க கருத்துகள் சம்பந்தமாக சலபுக்கள் மத்தியில் சச்சரவுகள் ஏற்பட்டு கொண்டிருந்தன. அல் அஸலா கட்சியை சேர்ந்த சிலர் ஆட்சியை எதிர்க்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தனர். இஸ்லாமிய கட்டமைப்பின் கீழ் மதசார்பற்ற நாடாக எகிப்து விளங்க வேண்டும் என்றனர் அவர்கள். அரபு புரட்சிக்கு பின், சித்தாந்த வேறுபாடுகளை சந்திக்காமல், அரசியல் பிளவுகளை சந்திக்காமல் எந்தவொரு கட்சியோ இஸ்லாமிய அமைப்போ தப்பித்திடவில்லை. இன்ஷா அல்லாஹ் தொடரும்

**அபூஹாசின்**



# கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தை அரங்கேற்றியது மோடியே

# சாமியார் பிராச்சி ஒப்புதல் வாக்குமூலம்

புல்மாவாவில் தாக்குதலில் நாற்பதுக்கும் மேற்பட்ட இந்திய ராணுவ வீரர்கள் பலியான நிலையில், அதை வைத்து எந்தெந்த வழிகளில் ‘பிழைப்பை’ நடத்தலாம் என இந்துத்துவ கும்பல் அலைந்து கொண்டிருக்கிறது.

காஷ்மீர் மாணவர்கள் மீது நாடெங்கிலும் கட்டவிழ்த்துவிடப்பட்ட தாக்குதல், சமூக ஊடகங்களில் முசுலீம்களுக்கு எதிராக விசம பிரச்சாரம் என இந்துத்துவ கும்பல் தேர்தல் நெருங்குவதையொட்டி வெறியாட்டம் போடுகிறது. வெறுப்பைத் தூண்டி கலவரங்களை நிகழ்த்த காத்திருக்கும் இந்துத்துவ கும்பல் தலைவர்கள் விசத்தை கக்கத் தொடங்கியுள்ளனர்.

விசுவ இந்து பரிசத்தைச் சேர்ந்த சாமியார் பிராச்சி, புல்வாமா தாக்குதலைத் தொடர்ந்து பிரதமர் மோடிக்கு ஒரு யோசனை கூறுகிறார். கூடவே, மோடி முன்பு நிகழ்த்திய படுகொலைகளையும் ‘பெருமை’யுடன் நினைவு கூறுகிறார்.

சமூக ஊடகங்களில் வைரலாகிவரும் அந்த வீடியோவில் பிரதமருக்கு கைகூப்பி வணக்கம் தெரிவிக்கும் பிராச்சி, “பிரதமர் அவர்களே, கோத்ரா போல ஒரு சம்பவத்தை நிகழ்த்தி பாகிஸ்தானுக்கு பாடம் புகட்டினால் நாடே உங்களுக்கு தலைவணங்கும்” என்கிறார். விசுவ இந்து பரிசத்தின் ‘யுவ



வாஹினி' பெண்கள் குண்டர் படையை தலைமையேற்று நடத்திவரும் பிராச்சி, உத்தரபிரதேசத்தில் பாஜக வேட்பாளராக களம் கண்டவர்.

"ராவல்பிண்டி மற்றும் கராச்சியை எரித்தால்தான் தீவிரவாதம் முடிவுக்கு வரும்" என்றும் அந்த வீடியோவில் பிரதமருக்கு 'யோசனை' சொல்கிறார் பிராச்சி.

2002-ல் குஜராத்தில் நிகழ்ந்த கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தைக் காரணம் காட்டி ஆயிரக்கணக்கான முசுலீம்களை கொன்று குவித்தது இந்துத்துவ கும்பல். அயோத்தியில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த விசுவ இந்து பரிசத் அமைப்பினர் 60 பேர் கோத்ரா ரயில் பெட்டிக்குள் வைத்து எரிக்கப்பட்டனர். இதை செய்தது முசுலீம்கள் எனக் கூறி, பெரும் கலவரத்தில் ஈடுபட்டது இந்துத்துவ கும்பல். 'ஒரு வினை நிகழ்ந்தால் அதற்கு எதிர்வினையும் இருக்கும்' என்றார் அப்போதைய குஜராத் முதல்வர் மோடி.

ரயில் எரிப்பு சம்பவம் குறித்து ஃபிரண்ட்லைன் இதழில் காங்கிரஸ் தலைவர் சங்கர்சிங் வகேலா, "தடயவியல் ஆய்வு கோத்ரா ரயிலுக்கு உள்ளே இருந்துதான் தீ பற்ற வைக்கப்பட்டது என்பதைச் சொன்னது. 60 லிட்டர் பெட்ரோலும், விசுவ இந்து பரிசத் அமைப்பினர் இருந்த பெட்டிக்குள் ஒரு முசுலீமால் நுழையவே முடியாது. தங்களுடைய சுய லாபத்திற்காக தங்களுடைய சொந்த அமைப்பினரை கொல்லத் துணிந்தவர்கள் அந்த அமைப்பின் தலைவர்கள். என்னை நம்புங்கள்; எனக்கு அவர்களைப் பற்றி நன்றாகத் தெரியும்" என்று பேட்டியளித்திருந்தார்.

தடயவியல் ஆய்வு, எந்தவித எரியும் திரவமும் வெளியே இருந்து உள்ளே ஊற்றப்பட்டதற்கான தடயம் இல்லை எனக் கூறியது.

அந்த வழக்கில் சில முசுலீம்கள் மீது வழக்கு பதியப்பட்டு, தீர்ப்பு வந்துவிட்டது. தொடக்கம் முதலே கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம், இந்துத்துவ காவிகளால் திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒன்று என பலரும் சொல்லிவரும் நிலையில், நீதிமன்றம் பல்வேறு சாட்சியங்களை புறம்தள்ளிய நிலையில், படுகொலை நிகழ்த்திய கும்பலே தற்போது அதை ஒப்புக் கொண்டுள்ளது.

"மோடி அரசு வடமேற்கு எல்லையில் சில நாடகங்களை தேர்தலுக்காக நடத்த இருக்கிறது என்பதும், கோத்ரா சம்பவத்தை நிகழ்த்தியது யார் என்பதும் பிராச்சியின் மூலமாக தெரியவருகிறது" என்கிறார் பத்திரிகையாளர் ரவி நாயர்.

படுகொலைகளை அவர்களே ஒப்புக் கொண்டாலும் ஜனநாயகத்தில் பல்வேறு அமைப்புகளில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி படுகொலையாளர்கள் சுதந்திரமாக உலவ முடிகிறது.

குஜராத்தில் நான்காயிரத்துக்கும் அதிகமான முசுலீம்களை இனப்படுகொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டவர், அதன்பின் இரண்டு முறை முதல்வராகிறார், அதன் பின் நாட்டையே ஆளும் பிரதமராகிறார்.

குஜராத் முசுலீம் மக்கள் மீதான இனப்படுகொலைக்கு காரணமான காவி கும்பல் தண்டிக்கப்படவில்லை என்பதும் தற்போது மோடி அரசின் அறிவிக்கப்படாத பாசிச அபாயம் வந்து கொண்டிருப்பதும் வேறு வேறு அல்ல!

**நன்றி: வினவு**

# குழந்தைகளைப் பெற்றால் சன்மானம்! தயாரா?

மனிதன் ஒரு சமூக விலங்கு - **Social Animal.** இப்படிச் சொன்னான் சாக்ரடீஸ். இவர் இப்படி சொல்வது எப்படியாவது மனிதனை விலங்கினங்களோடு சேர்த்திட வேண்டும் என்பது நோக்கமல்ல. மனிதன் சமூகத்தோடு வாழ்ந்திட வேண்டும் என்பதை அறியுறுத்திட.

ஆனால் மனிதன் இந்த உலகத்தில் தன் ஆசைகளால் அல்லாடிக் கொண்டிருப்பவன். அவற்றை நிறைவேற்றிட உலகில் பொருள் ஈட்டுவதற்காக தன்னை முற்றாகத் தந்து கொண்டிருப்பவன் என்றான் **(Father of Economics)** பொருளாதார இயலின் தந்தை என அழைக்கப்படும் ஆடம் சுமித்**(Adam Smith)**

இந்த வகையில் மனிதனை ஒரு பொருளாதார மிருகம் எனலாம். இந்தப் பொருளாதார மிருகம் உலக வாழ்க்கையை மிகவும் உல்லாசமானதாகவும், ஆடம்பரமானதாகவும் ஆக்கிட அநேகத் திட்டங்களை வகுத்தான். அவற்றுள் ஒன்று, குழந்தைகளைக் குறைவாகப் பெறுவது என்பது. இது மேலை நாட்டவர்கள் குறிப்பாக ஐரோப்பாவைச் சார்ந்தவர்கள், தங்கள் சொகுசு வாழ்க்கைக்காகத் தேர்ந்தெடுத்த உத்தி. 1950கள் முதலே இந்தக் கூப்பாட்டைப் போட தொடங்கினார்கள்.

“அதிகம் பெறாதே! அவதிப்படதே!” எனத் தொடங்கி, ஒரு குழந்தை போதும் என முடித்தார்கள்.

இதில் வேடிக்கை என்னவெனில் கீழைநாடுகளில், இன்னும் சொன்னால் உலக நாடுகளின் கனிம வளங்களை, இயற்கை வளங்களைக் கொள்ளையடித்துச் சுரண்டி கொழுத்துக் கிடந்தவர்கள் குழந்தைப் பெறுவதற்கெதிராகக் கூச்சல் போட்டார்கள்.

இவர்களிடம் தங்கள் இயற்கை வளங்களைப் பறிகொடுத்து விட்டுப் பட்டினிக் கிடந்த கீழ்த்திசை நாட்டு மக்களிடம் இந்தக் கொள்கையைத் திணித்தார்கள்.

ஒரு கட்டத்தில் இந்த மேலைநாடுகளின் பிடியிலிருந்து விடுதலை அடைந்தன கீழ்த் திசை நாடுகள்.

இந்த மேலைநாட்டவர்கள் தங்களின் காலனிகளாக இருந்த இந்த கீழ்த்திசை நாடுகளுக்குச் சுதந்திரத்தை வழங்கிடும் போது அந்த நாடுகளின் இயற்கை வளங்களை இவர்கள் முற்றாகச் சுரண்டி எடுத்துச் சென்றிருந்தார்கள்.

இன்னும் இந்த கீழத்திசை நாடுகளில் சுரண்டுவதற்கு எதுவுமில்லை. இந்தக் நாடுகளை இனி மேலும் கையில் வைத்திருந்தால் நஷ்டம்தான் வரும், என்ற நிலையில் தான் விடுதலைகள் வழங்கப்பட்டன.

இப்படி இயற்கை வளங்களை கொள்ளையடித்துத் திரும்பிய போது, தங்கள் கலாச்சாரத்தையும் தங்கள் வாழ்க்கை நெறிகளையும் அந்த மக்களிடம் திணித்திருந்தார்கள். அத்தோடு கருத்தடை, கரு சிதைப்பு போன்றவற்றையும் இந்த மக்களிடம் சொல்லித் தந்தார்கள்.

தங்களை அடிமைப்படுத்தி வைத்திருந்தவர்களை முன்னேற்றத்தின் முன்னோடிகளாகப் பார்த்துப் பழகிப்போன கீழ்த்திசை நாட்டு மக்கள், தாங்கள்

அதிகமாகக் குழந்தைகளைப் பெறுவதால் தான், கஷ்டப்படுகின்றோம் எனச் சிந்திக்கத் தலைப்பட்டார்கள். குழந்தைகள் பெறுவதைக் குறைந்தார்கள்.

தொடக்கக் காலத்தில் நாட்டு வைத்தியங்களின் படி தங்கள் கருப்பையில் ஜெனித்த குழந்தைகளைக் கொலை செய்தார்கள். பின்னர் விஞ்ஞானம் வளர்ந்து கருப்பையிலிருக்கும் குழந்தைகளைக் கொலைச் செய்தவற்கு வழிகளைக் காட்டிக் கொடுத்தது.

காலப்போக்கில் கருத்தரிக்காமலிருக்கும் வழிகளைக் கண்டெடுத்தார்கள். பெண்களின் கருப்பைக்களுக்கு கரு முட்டைகள் செல்வதைத் தடுக்க கருப்பையில் முடிச்சுப் போட்டு விட்டார்கள். அதன் பின் மாத்திரை உலகத்திற்கு மக்களை அழைத்துச் சென்றார்கள்.

குழந்தைகள் பெறுவதைத் தடுக்காதீர்கள் எனப் பேசியவர்களையும் வறுமைக்குப் பயந்து குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள், "பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் ஒரு வயிற்றுடன் பிறக்கின்றன. என்பது உண்மையானால் அவர்கள் உழைத்து சம்பாதிக்க இரண்டு கைகளுடனும் பிறக்கின்றனர் என்ற உண்மையின் வெளிச்சங்களையெல்லாம் இவர்களின் கண்களைத் திறக்கவில்லை.

காலம் நகர்ந்தது ஐரோப்பிய நாடுகளில் மக்கள் தொகை குறைந்தது. எந்த அளவுக்கு என்றால் சில நாடுகளில் மக்களே இருக்க மாட்டார்கள் என்ற நிலை வந்தது.

ஆங்கிலத்தில் சொன்னால் **Replacement Population** – "ரீப்பிளேஸ்மண்ட் பாப்புலேஷன்" இல்லை என்ற நிலை வந்தது. இந்த ரீப்பிளேஸ்மண்ட் பாப்புலேஷன் என்பதன் பொருள் ஓர் 'இனம்' எண்ணிக்கையில் குறைந்து கொண்டே வரும், பின்னர் இல்லாமலாகி விடும். அந்த இனத்தைத் தக்க வைக்க பின்னர் யாரும் இருக்கமாட்டார்கள். பல அரிய பறவை இனங்கள் அருகிக் கொண்டே வந்து பின்னர் இல்லாமலாகி விட்டன. (உதாரணம்: தமிழ் இலக்கியங்களில் 'அன்னம்' எனக் கூறப்படும் பறவை)

இப்போது ஒருக் கேள்வி, கருத்தடை நீடித்தால் பூமியில் மக்களே இல்லாமல் ஆகிவிடுவார்களா? இந்தக் கேள்விக்குப் பதில் இன்றைய உலகில் "தேசியம்" என்ற கொள்கைத் தலைதூக்கி நிற்கின்றது. ஒரு தேசத்தை – நாட்டைச் சார்ந்தவர்கள், இன்னொரு நாட்டைச் சார்ந்தவர்களை அன்னியர்களாகப் பார்க்கின்றனர். ஆதலால் அடுத்த நாட்டைச் சார்ந்தவர்கள் தங்கள் நாட்டில் குடியேறவோ, குடியுரிமைப் பெறவோ அனுமதிப்பதில்லை. ஆக ஒரு நாட்டு மக்கள் ஓர் இனம் என்றே எடுத்துக் கொள்ள வேண்டியதிருக்கின்றது. ஆக ஒரு நாட்டில் "கருத்தடைத் திட்டம் " முற்றாக வெற்றிப்பெற்றால் காலப்போக்கில் அந்த இனம் முற்றாக இல்லாமல் போய்விடும்.

இப்படி ஒரு நிலை இப்போது ஐரோப்பாவைச் சார்ந்த ஹங்கேரி என்ற நாட்டுக்கு வந்திருக்கின்றது. ஆண்டுக்கு 32,000 பேர் என மக்கள் தொகையில் வீழ்ச்சி! அந்த நாட்டில் அதிகமாகக் குழந்தைப் பெற்றிட வேண்டும், எனப் பெண்களை கட்டாயப்படுத்துகின்றார்கள். இதனை இங்கிதமாகச் சொன்னால் உற்சாகப்படுத்துகின்றார்கள். இல்லையென்றால் ஹங்கேரியர்கள் என்ற இனம் இல்லாமல் போய்விடும்.

ஹங்கேரி நாட்டை ஆட்சிச் செய்து கொண்டிருக்கும் பிரதமர் விக்டர் பல்வேறு அதிரடி திட்டங்களை அறிவித்துள்ளார். குழந்தைகளை அதிகமாகப் பெறும் பெண்களுக்கு நான்கு குழந்தைகளுக்கு மேல் பெறும் பெண்களுக்கு வாழ்நாள் முழுவதும் வருமான வரி ரத்து, இளம் தம்பதிகளுக்கு 36,000 அமெரிக்க டாலர்கள் வட்டி இல்லாக் கடன் வழங்கப்படும்.

தம்பதிகள் மூன்று குழந்தைகளைப் பெற்றவுடன் கடன் முழுவதுமாக ரத்து செய்யப்படும். அரசு வேலைக்குப் போகும் பெண்கள், கருவுற்ற நாளிலிருந்து மகப்பேறு முடியும் வரை முழு சம்பளத்துடன் விடுப்பு, மகப்பேற்றின் கடைசி மூன்று மாதங்களுக்கு சம்பளத்துடன் கணவனுக்கு விடுப்பு என்றெல்லாம் அறிவுத்துள்ளார்.

இதுபோன்ற ஒரு நிலை முன்னர் சுவீடன் நாட்டுக்கும் வந்தது. ஆக பெண்கள் குழந்தைகளை அதிகமாகப் பெற்று ஹங்கேரி தேசிய இனத்தைக் காப்பாற்றிட வேண்டும் என்பதே இப்போதைய

இலக்கு.

இதுபோன்ற குளறுபடிகளுக்கு ஆளாகிடக் கூடாது என்பதால் தான் இறைவன் திருமணம் செய்வதை பரிந்துரைத்தான்.

உலகில் மிகப்பெரிய ஆராய்ச்சியாளர்கள் பலர், ஒவ்வொரு மதமும், சொன்ன குடும்பவியல்களை ஆராய்ச்சி செய்திருக்கின்றார்கள். அதில் மனித வாழ்வில் "காமம்: என்பது ஒரு முக்கிய பகுதி என்பதை கண்டறிந்துள்ளார்கள். அதே போல் இந்த முக்கியப் பகுதிக்கு இஸ்லாம் தான் சரியாக வழிகாட்டி இருக்கின்றது எனப் போற்றுகிறார்கள்.

பிக்மண்ட் பிராய்டு என்பவர்; இந்த "Sex" - "காமம்" மனித வாழ்வில் மிகவும் அழுத்தமான தாக்கத்தை ஏற்படுத்துவது என்பதை தெளிவுபடுத்தினார்.

அதற்கு முன்னால் இந்த Sex - காமம் என்ற துறையில் மிகப்பெரிய ஆராய்ச்சியாளராகவும் மனித இனத்திற்கு நல்ல பல உபதேசங்களைத் தருபவராகவும், "HABHOUSE - ஹாப் ஹாவுஸ்" என்பவர் இருந்தார்.

இவர் மனித வாழ்வில் காமம் ஏற்படுத்தும் தாக்கத்தை முதல் முறையாக ஆராய்ந்து மனித இனத்திற்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இவர் இஸ்லாம் தான் இந்த "காமம்" "ஒழுக்கம்" என்பனவற்றிற்கு சரியான அழுத்தங்களைத் தந்து மனித வாழ்வை நெறிபடுத்தியது எனப் பாராட்டுகின்றார். **("HABHOUSE" AS QUOTED IN FAMILY STRUCTURE IN ISLAM By HAMMUDAH ADBALATI; Page 58/59)**

ஆரம்பகால ஆராய்ச்சியாளர்கள் எல்லாம் ஒரு மனிதன் காமத்திற்கு முறையான வடிகால்களைக் காணவில்லை என்றால், அவன் அந்தத் திசையில் வெறிபிடித்தவனாய் தவறுகளைச் செய்வான். தவறுகளைச் செய்த பின்பே ஆலோசிப்பான் என்றார்கள்.

இதற்கு வடிகால் திருமணம் தான் என்கிறது இஸ்லாம். அதற்கு வெளியே கொள்ளப்படும் உறவுகள் கடுமையான தண்டனைக்குரியவை. இஸ்லாம் இதில் மரண தண்டனை வரை செல்கின்றது.

இனி திருமணத்தின் நோக்கங்கள்:

மனிதர்களின் (ஆண்/பெண்) ஒழுக்கத்தைப் பேணி பாதுகாப்பது, ஆறுதலடைவது, சந்ததிகளைப் பெற்று மனித இனத்தின் பெருக்கத்திற்கு வழிவகுப்பது இதில் ஆழமான ஆய்வுகளை மேற்கொண்ட அனைவரும் "REPLACEMENT SOCIATY" மனித இனத்தின் தொடர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் வழிவிட்டு சமுதாயங்கள், அழிந்து விடாமல் பாதுகாப்பது இஸ்லாம் தான் என்கிறார்கள். **(FAMILY STRUCTURE IN ISLAM)**

இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்த அல்லாஹ் இப்படிக் கூறுகின்றான்.

***மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்; ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்; அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள்; மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்) நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்.(4:1)***

***இன்னும், அல்லாஹ் உங்களுக்காக உங்களிலிருந்தே மனைவியரை ஏற்படுத்தியிருக்கிறான்; உங்களுக்கு உங்கள் மனைவியரிலிருந்து சந்ததிகளையும்; பேரன் பேத்திகளையும் ஏற்படுத்தி, உங்களுக்கு நல்ல பொருட்களிலிருந்து ஆகாரமும் அளிக்கிறான்; அப்படியிருந்தும், (தாமே கற்பனை செய்து கொண்ட) பொய்யானதின் மீது ஈமான் கொண்டு அல்லாஹ்வின் அருட்கொடையை இவர்கள் நிராகரிக்கிறார்களா?(16:72)***

சுகமான வாழ்க்கைக்காக குழந்தைகளை கருவிலே கொலை செய்பவர்கள் இந்த இறை வசனத்தால் பாடம் பெறட்டும்.

***இன்னும் எவர்கள் அறிவில்லாமல் மூடத்தனமாகத் தம் குழந்தைகளைக் கொலை செய்கிறார்களோ, அவர்களும் அல்லாஹ் தங்களுக்காக உண்ண அனுமதித்திருந்ததை, அல்லாஹ்வின் மீது பொய் கூறி ஆகாதென்று தடுத்துக் கொண்டார்களோ அவர்களும் வழிகெட்டு விட்டனர். நேர்வழி பெற்றவர்களாக இல்லை. (6:140)***

***அந்த குழந்தைகள் எந்தக் குற்றத்திற்காகக் கொல்லப்பட்டார்கள்? எனக் கேட்கும் நாள் ஒன்று வந்தே தீரும் என்கின்றான் இறைவன்.***

பார்க்க அல்குர்ஆன் 81:8

# முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான்
# நூருத்தீன் ஸங்கி(ரஹ்)



## எடெஸ்ஸா வெற்றி கொள்ளப்படுமா?

அபூ அஃப்ரஹ்

வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் ஒருவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள். ஆனால் மறக்கடிக்கப்பட்டு விட்டவர். நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அன்ஹு அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித்தவர்களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லாவிதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.

இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப்போர்களிலும் சிலுவைப்படையினர் முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்கள் அல்லாதவர்களுக்கும் செய்தனர். சிலுவைப்படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு அவர்களின் கொலைகள் கொடூரமாக இருந்தன. சிறுவர்களோ பெரியவர்களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் கண்டதை எல்லாம் கொள்ளையடித்து சென்றனர். அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் முற்றுகைகளை முறியடித்தவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னாபின்னப்படுத்தியவர்.

இன்று சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி(ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் குருவாக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள். மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள்.

நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப்படையினருக்கு எதிராக ஓர் ஒருங்கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

சில தவிர்க்க முடியாத காரணங்களால் கடந்த இதழில் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களின் வாழ்க்கைத் தொடர் இடம் பெற இயலாமல் போனது மன்னிக்கவும்.

அலெப்போவின் வெற்றி இமாதுத்தீன் ஸங்கி அவர்களுக்கு தெம்பை தந்திருந்தது. மற்றவர்களாக இருந்திருந்தால் அந்த வெற்றியிலேயே மனம் மகிழ்ந்திருப்பர். மனநிறைவு கண்டிருப்பர். ஆனால் இது இமாதுத்தீன் ஸங்கி அல்லவா?

இப்போது இமாதுத்தீன் அதாபேக் அவர்கள் எடெஸ்ஸாவை எப்படி கைப்பற்றுவது என திட்டம் தீட்ட தொடங்கினார். திட்டம் தீட்டுவதில் யார் அவரை மிஞ்ச முடியும்? ஆனாலும் இது எடெஸ்ஸா. இதனை சாதாரணமாக அடைந்து விட முடியாது.

### எடெஸ்ஸா

எடெஸ்ஸா என்பது அதன் கிரேக்க பெயர் ஆகும். அர்ருஹா என்பது அரபியில் அதன் பெயர். உர்ஃபா என்பது தற்போதைய பெயர். இது நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் சொந்த ஊர் ஆகும். தற்போதைய துருக்கியின் தென்கிழக்கு நகரம். யூப்ரடீஸ் நதியின் கிழக்கிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது

எடெஸ்ஸா கிறித்தவர்களுக்கு மிக முக்கியமான நகரம். அது அவர்களின் கௌரவம். அந்த நகரை இழப்பது என்பது சிலுவைப்போரை இழப்பதற்கு ஒப்பானதாகும். ஒட்டுமொத்த கிறித்தவ உலகத்தின் நம்பிக்கையை இழப்பதாகும்.




எடெஸ்ஸா ஐரோப்பாவையும் ஆசியாவையும் இணைக்கும் தலைவாயில். நாம் இந்த வரைபடத்தில் சுட்டிக் காட்டியிருக்கும் பகுதி தான் எடெஸ்ஸா எனப்படும் தற்போதையை உர்ஃபா நகரம். அன்றைய காலக்கட்டத்தில் ஃப்பிரான்குகள் எனப்படும் ஒட்டு மொத்த ஜெர்மானியர்கள் (தற்போதைய பிரான்ஸ் மற்றும் ஜெர்மன் பகுதிகளை இணைத்தது) ஆசியாவிற்குள் உள்ளே நுழைய இதுவே நுழைவாயில். மேலும் அன்றைய காலக்கட்டத்தில் கான்ஸ்டான்டைன் நோபிள் எனப்பட்ட இன்றைய துருக்கியின் இஸ்தான்புல் தான் அன்றைய சிலுவைப்போர் வீரர்களின் தலைநகரம்.

இதிலிருந்து எடெஸ்ஸா எவ்வளவு முக்கியமான நகரம் என்பதும் அதற்கான பாதுகாப்பு எப்படி இருக்கும் என்பதும் எடெஸ்ஸாவை கைப்பற்றுவது என்பது எவ்வளவு நடைமுறை சாத்தியமற்றது என்பதும் விளங்கும். ஆனால் சாத்தியமற்றதையும் சாத்திய மாக்குபவர்கள் தானே அல்லாஹ்வின் பாதையில் பயணிப்பவர்கள்.

எடெஸ்ஸாவை முஸ்லிம்களிடமிருந்து கைப்பற்றிய நாளிலிருந்து கிறித்தவர்கள் அதனை கண்ணும் கருத்துமாய் காத்து வந்தனர். முதல் சிலுவைப்போர் வெற்றிக்கு பிறகு ஃப்பிரான்குகள் எடெஸ்ஸா, அந்தியோக்கியா, ஜெருசலேம், திரிபோலி ஆகிய நான்கு நகரங்களை தங்கள் வசம் வைத்திருந்தனர். கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் சிலுவைப்போர் படையினர் வசம் எடெஸ்ஸா இருந்து வந்தது.

இந்த காலக்கட்டங்களில் அவர்கள் அங்கே தங்கள் பாதுகாப்பு அரண்களை அழுத்தமாக அமைத்து விட்டிருந்தனர். மிகுந்த பலம் பெற்றுவிட்டிருந்தனர்.

அவர்களை யாரும் தொட்டுவிட முடியாது என்ற அளவிற்கு அவர்களின் பலம் மிகுந்து விட்டிருந்தது. அளவளாவிய நம்பிக்கை கிறித்தவர்களுக்கு.

ஆனால் அதனை தகர்க்கத்தான் இப்போது இமாதுத்தீன் அவர்கள் திட்டம் தீட்டியிருந்தார்.

எடெஸ்ஸாவும் அதேபோல் ஜெருசலேம், அந்தியோக்கியா, ரோமியாஹ், கான்ஸ்டான்டைன் நோபிள் போன்ற நகரங்களும் சிலுவைப்படையினருக்கு முக்கியமானவை. இந்த பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்கள் ஃப்பிரான்கு களால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தனர். எடெஸ்ஸாவை கைப்பற்றியிருந்த ஃப்பிரான்குகள் மர்தீனுக்கும் யூப்ரடீசுக்கும் இடையே இருந்த சில கோட்டைகளையும் கைப்பற்றியிருந்தனர்.



ஃபிரான்குகளின் தாக்குதல் அமித், பக்ர், மர்தீன், ராஸ் ஐன், அர்ருக்காஹ் போன்ற பகுதிகளையும் பாதித்திருந்தது. அவர்கள் ஹர்ரானையும் அடிக்கடி தாக்கி வந்தனர்.

ஜோஸ்லின் என்பவர் தான் அப்போது எடெஸ்ஸாவின் தலைவர். அவர் சிறந்த குதிரைப்படை வீரர். அவர் அங்கே இருக்கும் வரை எடெஸ்ஸாவை தன்னால் தாக்கி வெற்றி கொள்வது கடினம் என நினைத்தார் இமாதுத்தீன். எனவே, அவரை எப்படி எடெஸ்ஸாவிலிருந்து வெளியேற்றுவது என திட்டம் தீட்டினார்.

அவர் தனக்கே உரிய பாணியில் தன்னால் எடெஸ்ஸாவை நெருங்க போவதில்லை என நடித்தார். எடெஸ்ஸாவை தாக்குவதை தன்னால் நினைத்து கூடப்பார்க்கமுடியாது என்றும் செய்திகளை வெளியில் பரப்பினார். இமாதுத்தீன் அதாபேக் அவர்களின் உளவுத்துறையினர் இந்த வேலையை கனக்கச்சிதமாக செய்து முடித்தனர். இந்த செய்தியை ஃபிரான்குகள் தங்கள் மேல் இருந்த அசாத்திய பலத்தின் காரணமாகவும் 50 ஆண்டுகளாக அவர்கள் வசம் அந்த இடம் இருந்து விட்டதன் காரணமாகவும் நம்பினர்.

இந்த நாடகத்தை மேலும் சிறப்பாக்க இதனை ஃபிரான்குகள் எள்ளளவும் சந்தேகம் இன்றி நம்பும் வகையில் எடெஸ்ஸாவிற்கு அருகில் இருந்த தியார் பக்ர் போன்ற இடங்களை தாக்குவது போல் இமாதுத்தீன் நாடகம் ஆடினார்.

இதே வேளையில் அவருடைய உளவாளிகள் எடெஸ்ஸாவில் ஃபிரான்குகளின் நடவடிக்கைகளைப் பற்றி உளவு பார்த்துக் கொண்டிருந்தனர்.

இமாதுத்தீன் அவர்கள் தியார் பக்ர் என்ற இடத்தில் போர் செய்து கொண்டிருந்ததையும் அந்த போரில் அவர் தீவிரமாக இருக்கிறார் என்ற செய்திகளை கேள்விப்பட்ட ஜோஸ்லின், இமாதுத்தீன் அவர்கள் தன்னை நோக்கி படையெடுக்க மாட்டார் என நம்பினார். அவ்வளவு ஏன்? அதற்கான தைரியம் துளியளவு கூட இமாதுத்தீனுக்கு இருக்காது எனவும் நம்பினார் ஜோஸ்லின்.

எனவே, ஜோஸ்லின் லெவான்தில் இருந்த தன்னுடைய தளங்களுக்கு சென்று அங்கு இருந்த தன்னுடைய போர் தளவாடங்கள் குறித்து ஆராய சென்றார். அதனை விரிவுப்படுத்த முயன்றார்.

ஜோஸ்லின் எடெஸ்ஸாவை விட்டு வெளியே சென்றுள்ளார் என்ற செய்தியை கேள்விப்பட்டவுடன் அதாபேக் அவர்கள் தியார் பக்ர் என்ற இடத்தில் போர் செய்வது போன்று நடத்திக்கொண்டிருந்த தன்னுடைய நாடகங்களை உடனடியாக நிறுத்திவிட்டு எடெஸ்ஸாவை முற்றுகையிட்டார். இருபத்தி எட்டு நாட்கள் முற்றுகைக்கு பின்னர் எடெஸ்ஸா முஸ்லிம்களின் வசம் வீழ்ந்தது. கிறித்தவர்களின் நம்பிக்கை தகர்ந்தது. இஸ்லாமிய ஆட்சி அங்கு நிலை நிறுத்தப்பட்டது.

இமாதுத்தீன் ஸங்கி அவர்கள் எடெஸ்ஸாவில் வந்து தங்கிவிட்டார். அந்த நகரின் அழகு அவரை

வெகுவாக கவர்ந்தது. அந்த நகரை போருக்கு முன்பு எப்படி இருந்ததோ அதே போன்று நேர்த்தியாக அமைத்தார். அப்படி புனர்நிர்மாணயம் செய்த பின்னர் அங்கிருந்து அவர் கிளம்பி ஃபிரான்குகளால் சுற்றி கைப்பற்றப்பட்டிருந்த கோட்டைகளை நோக்கி சென்று அவைகளை வெற்றிக் கொண்டார். அந்த மக்கள் இப்போது மிகவும் நிம்மதியாக உணர்ந்தனர்.

எடெஸ்ஸாவின் இழப்பு என்பது கிறித்தவர்களுக்கு மிகப்பெரிய இழப்பு. இதன் பின்னர் நடந்த பல்வேறு சிலுவைப்போர்களில் எடெஸ்ஸாவை கைப்பற்ற சிலுவைப்படையினர் மும்முரமாக முயன்றனர். ஆனால் அது அவர்களுக்கு கனவாகவே போனது. நூருத்தீன் ஸங்கி அவர்களின் ஆட்சியிலும் இதற்கான போர் நடந்தது. ஆனால் நூருத்தீன் அவர்களே அதில் வெற்றி பெற்றார்கள். அதன் பின்னர் இன்று வரை முஸ்லிம்களிடமிருந்து எடெஸ்ஸாவை கைப்பற்றும் முயற்சி அவர்களுக்கு எட்டாக்கனியாகவே மாறி விட்டது.

இந்த வெற்றிக்கு இரண்டு விஷயங்கள் முக்கிய காரணம். ஒன்று உளவெடுத்தது. மற்றொன்று எதிரியை குழப்பும் வண்ணம் செய்தியை பரப்பியது.

## இறைவனிடத்தில் ஸங்கி

எடெஸ்ஸா வெற்றியை இறைவன் எவ்வளவு விரும்பினான் என்பதை பின்வரும் சம்பவம் உணர்த்தும்.

இமாதுத்தீன் ஸங்கி அவர்களின் சரிதையை எழுதிய இப்னு அதீர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள், "இறைநேசர் ஒருவர் கூறியதாக பலர் என்னிடம் ஒரு செய்தியை கூறினார்கள். அந்த இறைநேசர் இமாதுத்தீன் அவர்கள் கொல்லப்பட்ட பிறகு அவரை கனவில் கண்டார். கனவில் ஸங்கி அவர்கள் இறைவனிடத்தில் நல்ல நிலையில் இருக்கிறார். அவரிடம் அந்த இறைநேசர் அல்லாஹ் உங்களுக்கு என்ன கூலி வழங்கினான் என்று கேட்கிறார். அதற்கு ஸங்கி அல்லாஹ் என் பாவங்களை மன்னித்தான் என்று பதிலளிக்கிறார். எந்த விஷயத்தை கொண்டு இறைவன் உங்கள் பாவத்தை மன்னித்தான் என்று இறைநேசர் கேட்கிறார். எடெஸ்ஸாவை வெற்றி கொண்டதற்காக என்று இமாதுத்தீன் கனவில் பதிலளித்தார் என அந்த இறைநேசர் குறிப்பிடுகிறார்."

அல்லாஹ்வின் பாதையில் போர் செய்து இஸ்லாத்தை நிலைநாட்டிய அந்த பணிக்காக இறைவன் இதைத் தவிர வேறு என்ன கூலியைத் தருவான்.

அன்று இமாதுத்தீன் எழுப்பிய இஸ்லாமிய ஆட்சி இன்றும் சீராக நடைபெறுவது மட்டுமல்ல அப்பகுதியில் துருக்கியின் அதிபராக உள்ள தையிப் எர்துகான் போன்றோர் உலகில் பல்வேறு பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கும் அநியாயங்களுக்கு எதிராக குரல் கொடுப்பது இன்னும் சிறப்பு.

## எடெஸ்ஸா வெற்றியை கனவில் கண்ட ஷேக்

சிசிலி (தற்போதைய இத்தாலியின் மிகப்பெரிய தீவுப்பகுதி) என்ற பகுதியின் மன்னன் ஒரு ஃபிரான்க் (ஃபிரான்ஸ் ஜெர்மனி ஆகிய ஒட்டு மொத்த பகுதிகளை சேர்ந்த ஜெர்மானியன்). மொரோக்காவை சேர்ந்த ஷேக் ஒருவர் அவருடைய பகுதியில் வாழ்ந்து வந்தார்.

மன்னன் அவரை தன்னுடைய அவைக்கு வரவழைத்து பல பரிசுகளை வழங்கி வந்தான். மன்னன் அவர் மீது நம்பிக்கையும் நல்ல மரியாதையும் வைத்து வந்தான்.

எடெஸ்ஸா வெற்றிக்கொள்ளப்பட்ட போது அந்த மன்னன் ஒரு பெரிய படையை ஆப்பிரிக்காவிற்கு அனுப்பி இருந்தான். அந்த படை தன் கண்ணில் அகப்பட்டதையெல்லாம் ஆக்கிரமித்து கொள்ளையடித்து வெற்றி பெற்று வந்தது.

இந்த செய்தி மன்னனை அடைந்தது. அந்த மன்னன் மொரோக்காவை சேர்ந்த அந்த ஷேக் இடம் வந்தான். அப்போது ஷேக் உறங்கிக்கொண்டிருந்தார். தூக்கத்தில் இருந்தவரை எழுப்பிய மன்னன் இந்த வெற்றியை பிரமாதமாக எடுத்து சொல்லி, எங்கள் இனத்தார் இவ்வளவு வெற்றிகளை குவித்துள்ளனர். இவ்வளவு சேதங்களை முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தியுள்ளனர். உங்கள் மக்களை காப்பாற்றக்கூடிய அந்த தூதர் எங்கே? என்று ஏகடியம் பேசினான்.

அதற்கு பதிலளித்த ஷேக், "அவர் இப்போது எடெஸ்ஸாவை வெற்றிக் கொள்ள வந்திருக்கிறார்" என பதிலளித்தார்.

மன்னனுடன் உடன் வந்திருந்தவர்கள் எல்லாம் இந்த பதிலைக் கேட்டு சிரித்தார்கள். ஆனால் அந்த மன்னன் அவர்களை தடுத்து, " இவர் ஒரு செய்தி அவருக்கு உறுதியானால் தான் கூறுவார், எனவே, இது நிச்சயம் நடக்கும்" எனக்கூறினார்.

அவரின் நம்பிக்கையின் படியே இமாதுத்தீன் அதாபேக் அவர்கள் எடெஸ்ஸாவை வெற்றிக் கொண்ட செய்தி அவர்களை வந்தடைந்தது. இந்த வெற்றியின் மூலம் ஒட்டுமொத்த கிறித்தவர்கள் தாங்கள் முஸ்லிம்களிடம் தோற்றுவிட்டதாக நினைத்தார்கள்.

# அன்பகத்தின்

## அன்பான வேண்டுகோள்!

அன்பார்ந்த வாசகர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

எமது இஸ்லாமியப் பிரச்சாரப் பணிகள் 37 ஆண்டுகளைக் கடந்து, 38ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றன. அல்ஹம்துலில்லாஹ்.

ஒரு நீண்ட நெடும் காலம் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும், எங்கள் பிரச்சாரங்கள் தொடந்து நடந்து வருகின்றன. அல்லாஹ் எங்கள் வழி பல பிரபல்யங்களுக்கு நேர்வழியைக் காட்டினான் அல்ஹம்துலில்லாஹ்.

அப்படி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு இஸ்லாத்தின் செயல்முறைகளையும் இஸ்லாத்தின் அனைத்துப் பகுதிகளையும் கற்றுத் தருவதற்கென மூன்று கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளோம். அல்ஹம்துலில்லாஹ்.

இந்த மூன்று நிறுவனங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் மார்க்க கல்வியை கற்று சென்றுள்ளார்கள். அவ்வாறு நிறுவப்பட்ட மூன்றாவது கல்விக்கூடமே அன்பகம். அதுவும் தன் 10ஆம் ஆண்டை நிறைவு செய்கின்றது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.

இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கல்வி கற்றுச் சென்றுள்ளார்கள். அன்பகம் கடந்த பத்து ஆண்டுகளாக ஒரு வாடகைக் கட்டிடத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதையும் அடிக்கடி மாற்றிட வேண்டிய நிலை.

இன்ஷா அல்லாஹ் அதனை ஒரு சொந்தக் கட்டடத்திற்கு மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதற்கு உங்கள் நிதி உதவிகளை தாராளமாக வழனுகும் படி அன்புடன் வேண்டுகிறோம்.

அல்லாஹ் உங்களுக்கு அளப்பரிய கூலிகளை வழங்கிடப் போதுமானவன்.

இவண்,

மு. குலாம் முஹம்மது, பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி, ஹாஜி. அப்துல் ரவூஃப்

**செக், டி.டி. அனுப்புவோர்**

## DARUL ISLAM FOUNDATION TRUST

என்ற பெயருக்கு எடுத்து பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்

52/1, மண்ணடி தெரு, 4வது மாடி, அறை எண் 7, மண்னடி, சென்னை - 600 001.

Please draw your cheques / DD infavour of **DARUL ISLAM FOUNDATION TRUST**
**CANARA BANK A/c. 1287101017301** branch St,mary's Road, R.A.puram, Chennai.
and send to: 52/1, Mannady Street, 4th Floor, Room No.7, Mannady, Chennai-600001
**Mobile : 81481 29887**, website: www.darultrust.in, Email: darultrust@yahoo.com,

மகளிர் மன்றம்

# அந்தப் பெண்களாக நீங்கள் மாறினால்!



நமது சகோதரிகளைப் பற்றிப் பேசிடும் போது இன்னொன்றையும் குறிப்பிட்டாக வேண்டும். அவர்கள் இஸ்லாத்தின் வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்தவர்கள்.

தொடக்கத்தில் பெருமானார்(ஸல்) அவர்கள் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்த போது தன்னால் இயன்ற உதவைகளையெல்லாம் செய்தார்கள். கதீஜா(ரலி) அவர்கள். பொருளால் அவர்கள் செய்த உதவிகளுக்கு அல்லாஹ்வே போதிய அளவில் நற்கூலிகளை வழங்கிட முடியும். அந்த அளவுக்கு தனது பொருள்களையெல்லாம் இறைவனின் பாதையில் தத்தம் செய்தவர்கள் - அள்ளித் தந்தவர்கள் அன்னை கதீஜா(ரழி) அவர்கள்.

அவர்களுக்கு பின் இஸ்லாமிய இயக்க வளர்ச்சியில் பல்வேறு பெண்களும் ஆற்றிய அருந்தொண்டை பட்டியல் போட்டால் மாளாது. அதுபோலத்தான் ஃபாத்திமா(ரழி) அவர்களும், ஆயிஷா(ரழி) அவர்களும்.

அவர்கள் இஸ்லாமிய இயக்க வளர்ச்சியில் மட்டுந்தான் நடுநாயகமாக விளங்கினார்கள் என்றில்லை. அவர்கள் இறையச்சம் என்ற இறைவனை அஞ்சி வாழ்வதிலும் நல்லதொரு எடுத்துக்காட்டாய் வாழ்ந்து காட்டி இருக்கிறார்கள்.

அந்த வகையில் வரலாற்றில் வரையிட்டுக் காட்டப்பட வேண்டிய ஒரு நிகழ்ச்சி!

கலீஃபா உமர்(ரழி) அவர்களின் ஆட்சி காலம்.

இரவு நேரத்தில் மதீனா நகரைச் சுற்றி நகர்வலம் வந்து கொண்டிருக்கின்றார்கள். இரவின் நடுப்பகுதி. அவர்கள் களைத்துப் போய் விட்டார்கள். ஒரு சுவர் மேல் சாய்ந்து இருந்தார்கள். அப்போது வீட்டுக்குள் பெண்ணொருத்தி தன் மகளிடம் இப்படி கூறினாள்: "மகளே! எழுந்திரு. அந்தப் பாலை தண்ணீருடன் கலந்து வை."

அதற்கு மகள் தாயிடம் இப்படிக் கேட்டாள்: "தாயாரே.. நீங்கள் அமீருல் மூஃமினீன்(நம்பிக்கையாளர்களின் தலைவரின்) கட்டளையைச் செவிமடுக்கவில்லையா?"

தாயார்: "அந்தக் கட்டளை என்ன?" என்று கேட்டாள்.

அதற்கு மகள்; அவர்கள் ஒருவரிடம் சொல்லி உரக்க ஒலிக்கக் கட்டளையிட்டார்கள். அது, "பாலில் தண்ணீர் கலக்கக் கூடாது" என்பதே!

இதைக் கேட்டதும் தாய் இப்படிச் சொன்னாள்; "எழுந்து பாலை தண்ணீரோடு கலந்து வை. நீ, உமர் பார்க்க முடியாத இடத்தில் இருக்கிறாய் என்பதை தெரிந்துக்கொள்."

இதைக் கேட்ட மகள் இப்படிப் பதில் கூறினாள்;

"நம்பிக்கையாளர்களின் தலைவர் பார்க்காவிட்டாலும், அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கின்றான். வெளியில் அல்லாஹ்வை கீழ்ப்படிவதைப் போல் நடந்து கொண்டு அந்தரங்கத்தில் கீழ்ப்படியாமல் இருக்க என்னால் முடியாது."

ஆட்சியாளர் உமர்(ரழி) அவர்கள் இதைச் செவிமடுத்தார்கள். உடனேயே தன்னுடன் வந்து உதவியாளர் அஸ்லம்(ரழி) அவர்களை அழைத்து அந்தப் பெண் யார் என்று அறிந்து வாருங்கள் என்றார்கள்.

அந்தப் பெண் யாரோடு பேசிக் கொண்டிருந்தாள், அவளுக்கு திருமணமாகி விட்டதா என்பதையெல்லாம் அறிந்து வாருங்கள் என்றார்கள். அஸ்லம்(ரழி) அவர்கள் விசாரித்து, அந்தப் பெண்ணுக்கு திருமணமாகவில்லை என்பதை வந்து சொன்னார்கள்.

உடனேயே உமர்(ரழி) அவர்கள் தன் மகன்களை அழைத்து வரச் சொன்னார்கள். மகன்களும் வந்தார்கள். அவர்களில் ஆசிம்(ரழி) அவர்கள் அந்தப் பெண்ணை மணந்து கொண்டார்கள்.

இந்தத் தம்பதிகளுக்கு ஒரு ஆண் மகன் பிறந்தார். அவர் தான் உமர் பின் அப்துல் அஜீஸ்(ரழி) என்ற இறையச்சமிக்க ஆட்சியாளர் ஆனார். இவரைத்தான் வரலாறு, "இரண்டாம் உமர்" என்று அடையாளம் காட்டுகின்றது.

இஸ்லாத்தின் பிந்தைய வரலாற்றில் இவர் மிகவும் இறையச்சமுள்ள ஓர் ஆட்சியாளராய் திகழ்ந்தார்கள்.

இப்படி இறையச்சத்தில் மிகைத்தவர்களாகவும், இறையச்சமுள்ள தலைமுறையைத் தருபவர்களாகவும் திகழ்ந்தார்கள் இஸ்லாமியப் பெண்கள்.

கலீஃபா உமர்(ரழி) அவர்களே மிகையான இறையச்சம் உள்ளவர்கள். அவர்கள் இறையச்சமிக்க அந்தப் பெண்மணியைத் தன் குடும்பத்தைச் சார்ந்தவர்களாக மருமகளாக ஆக்கி மகிழ்ந்தார்கள்.

- எம்.ஜி.எம்.

# ஜனவரி – 30 காந்தி படுகொலை
# சுந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம்

**கருத்தரங்கம் மேட்டுப்பளையத்தில், 30.01.2019 அன்று தாருல் இஸ்லாம் மற்றும் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் சார்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி குறித்த விரிவான தகவல்கள் இன்ஷா அல்லாஹ் அடுத்த மாத இதழில் இடம் பெறும்.**






# 7

# இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?

## தமிழகத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சாதாரண முஸ்லிம்களின் வரலாறு



## திவாகர் (எ) தப்ரேஷ்

உலகில் உள்ள அனைத்து மதங்களின் வேதங்களும் ஓரிறைக் கொள்கையைத்தான் போதிக்கின்றன. இந்துமதம், கிருஸ்தவ மதம், புத்த மதம் என அனைத்து மதங்களிலும் ஓரிறைக் கொள்கைக்கான அடித்தளம் இருந்தாலும் இந்த மதங்கள் எல்லாம் ஓரிறைக் கொள்கையை விட்டு விலகி நிற்கின்றன.

இந்து மத வேதமான ரிக் வேதத்தில் அத்தியாயம் 6ல், பகுதி 45ல், ஸ்லோகம் 16ல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: “வணக்கத்திற்குறிய இறைவன் ஒருவனே! உண்மையான இறைவன்”. ஆனால் இன்று இந்து மதத்தில் தான் பல்வேறு சிலை வழிபாடுகள் உள்ளன. அவர்களின் வேதம் இறைவன் ஒருவன் தான் என்று கூற அவர்களோ 33 கோடி கடவுள்களை உருவாக்கி வழிபட்டு வருகின்றனர்.

கிருஸ்தவ மத வேதமான பைபிள் இவ்வாறு கூறுகிறது: “உன் தேவனாகிய கர்த்தர் நானே! என்னையன்றி உனக்கு வேரே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.(யாத்திராகமம்: 20:2) ஆனால் இன்று கிருஸ்தவ மதத்தில் பிதா சுதன் பரிசுத்த ஆவி என்று முக்கடவுள் கொள்கையை திணித்து விட்டனர்.

ஆக உலகில் ஓரிறைக் கொள்கையை போதிக்கும் மதங்கள் அனைத்தும் அதை நடைமுறையில் செயல்படுத்தி காட்டவில்லை என்பது தான் நிதர்சனமான உண்மை. ஆனால் இஸ்லாம் தோன்றிய நாளிலிருந்து இன்றைய நாள் வரை ஓரிறைக் கொள்கையை போதிப்பதிலும், அதை பின்பற்றுவதிலும் அடிப்பிசுராமல் நிற்கிறது. அல்லாஹ் கூறுகிறான் குர்ஆனின் 112வது அத்தியாத்தில்:

01. கூறுவீராக அல்லாஹ் அவன் ஒருவனே.

02. அவன் எவரிடத்திலும் தேவையற்றவன்.

03. அவன் யாரையும் பெறவுமில்லை. எவராலும் பெறப்படவுமில்லை.

04. அன்றியும் அவனுக்கு நிகராக எதுவுமில்லை.

குர்ஆனின் இந்த நான்கு வரி விளக்கம் போதும், இஸ்லாம் எவ்வளவு ஆழமாக ஓரிறைக் கொள்கையைப் போதிக்கின்றது என்பதை வெளிக்காட்ட. போதிப்பதோடு நிற்காமல் அதை நடைமுறைப் படுத்துவதிலும் இஸ்லாம் தீவிரத்தைக் காட்டியது. அதன் தாக்கத்தை நீங்கள் இன்றும் உணரலாம்.

முஸ்லிம்கள் மத்தியில் இஸ்லாம் குறித்த பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் இக்லாஸ் எனும் ஓரிறைக் கொள்கையில் அனைவரும் ஒரே கருத்துடன் ஓரணியில் நிற்பார்கள். மற்ற மதங்களிலிருந்து இஸ்லாத்தை வேறுபடுத்தி காண்பிப்பதும் இதுதான். இப்படி அந்த ஓரிறைக் கொள்கையை தேடி அலைந்த சகோதரர் திவாகர் அவர்களின் பயணம் இஸ்லாத்தில் வந்து முடிந்த அனுபவங்கள் இதோ.....

## திவாகர் தப்ரேஷ்

என்னுடைய பெயர் தப்ரேஷ். நான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு நான்கு வருடங்கள் ஆகிறது. பழைய பெயர் திவாகர். நான் இந்து மதத்தில் செங்குந்த முதலியார் வகுப்பை சார்ந்தவன். நீங்கள் காட்டன் துண்டு வைத்திருந் தீர்கள் என்றால், லுங்கி கட்டியிருக்கிறீர்கள் என்றால் அது எங்கள் சமூகத்திலிருந்து வந்தது.

என்னை இஸ்லாத்தை நோக்கி ஈர்த்தது என்ன வென்றால் இஸ்லாம் கூறக்கூடிய ஓரிறைக் கொள்கைதான். நான் கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்கள் ஆராய்ச்சி செய்து எல்லா மதங்களை விடவும் இஸ்லாம் தான் ஓரிறைக் கொள்கையை சரியாக போதிக்கிறது.

எல்லா மதங்களும் ஓரிறைக் கொள்கையைத் தான் போதிக்கின்றது. ஆனால் "ஓபனிங்க் லா நல்லாதா இருக்கு பினிஷிங்க் சரியில்லையேப்பா" என்பது போல அந்த பினிஷிங்க் இஸ்லாத்தில் தான் இருந்தது. ஒரு இறைவனை எப்படி சரியாக வணங்குவது என்பதை இஸ்லாம்தான் எனக்கு சொல்லிக் கொடுத்தது.

அது மட்டுமில்லாமல் எனக்கு நிறைய கேள்விகளும் இருந்தது. அந்த கேள்விகளுக்கெல்லாம் பதில் இஸ்லாத்திடம் தான் கிடைத்தது.

சில நபர்கள் கூறுவார்கள். எல்லாம் ஒன்றுதான். ஜீஸஸ், கிருஷ்னர், அல்லாஹ் எல்லாம் ஒன்றுதான் என்று.

ஒரு உதாரணம் பார்ப்போம். நீங்கள் பைக்கில் சென்று கொண்டிருக்கிறீர்கள். ஹெல்மட் போடல. நீங்க போகிற வழியில் ஒரு இன்ஸ்பெக்டர் இருக்கிறார். அட இன்ஸ்பெக்டர் வேனாங்க. ஒரு கான்ஸ்டேபிள் இருக்கிறார். அவரைப் பார்த்தவுடன் என்னா பயம் வரும். அப்படியே ஒரு கார் பின்னாடி ஒளிந்து ஒளிந்து போவீர்கள் இல்லையா?

இப்போது உங்களுக்கு கமிஷனரை தெரியும். நீங்கள் சொன்னால் கமிஷனர் செய்வார். நீங்கள் பைக்கில் போகிறீர்கள். ஹெல்மட் போடல. இன்ஸ்பெக்டர் நிக்குராரு. இப்ப என்ன பன்னுவிங்க. மறைந்து மறைந்து போவீங்களா? அவர முட்டுரா மாறி போமாட்டிங்க. ஏன்னா கமிஷனர் உங்க சட்ட பாக்கெட் ல இருக்கிறாரு அப்படித்தானே.

அதாவது ஒரு துறையில் இருக்கக்கூடிய ஒரு அதிபதியை தெரிந்து வைத்திருப்பதாலேயே இப்படி ஒரு கெத்தும், தைரியமும் உங்களுக்கு வந்துருதுனா?

உலகில் உள்ள எல்லா படைப்பினங்களுக்கும் அதிபதி, அவைகள் அனைத்தையும் படைத்தவன் அவனிடம் நெருக்கமும், தொடர்பும் இருந்தால் இன்னா கெத்து இருக்கும் வாழ்க்கைல......

அல்லாஹ்விடம் நமக்கு பயம் இருக்கும். ஆனால் அல்லாஹ் நமக்கு கொடுத்த இந்த வாழ்க்கை மேல் நமக்கு பயம் இருக்காது. வாழ்க்கை மிகவும் இலகுவாக இருக்கும்.

இந்த ஒரு நெருக்கத்தை என்னால் இஸ்லாத்திற்கு வந்தவுடன் தான் உணர முடிந்தது.

நான் இந்துவாக இருக்கும் போது எனக்கு நிறைய தேவைகள் இருந்தது. அப்போது சொல்லுவார்கள்.

அந்த கோவிலுக்கு இந்த நேரத்துக்கு போ...... நீ கேட்டது நடக்கும்.....

சரி போனோம்!!!!!

அப்புறம் சொன்னாங்க,

அந்த ஊர்ல, இந்த நாள் ல, ஒரு விஷேஷம் நடக்கும். அங்க போ...... நீ கேட்டது நடக்கும்.....

போனோம்!!!!!

அட இந்த கோவில்ல, இந்த இரவு அங்க போய் தங்கு. நீ கேட்டது நடக்கும்.......

தங்கனோம்!!!!!!!

அப்புறம் அந்த எலுமிச்சை பழம் ல. அத அந்த சூலத்தின் மேல் குத்தும் போது உன்னுடைய தேவையை நினைச்சிக்கோ...... நடக்கும்..... அப்படினு சொன்னாங்க.

எல்லாமே பன்னோம். அதன் பின் எனக்கு ஒரு சந்தேகம் வரும். நாம கேட்டது ஆண்டவன் காதுக்கு போச்சா இல்லையா? என்று.

ஆனால் இஸ்லாத்திற்கு வந்த பின் அப்படி ஒரு சந்தேகமே எனக்கு வருவதில்லை.

ஏனென்றால் அல்லாஹ்விடம் எப்படி கேட்க வேண்டும், அல்லாஹ்விடம் எப்படி நெருக்கமாக இருக்கவேண்டும் என்ற விதிமுறை எனக்கு தெரிந்து விட்டது.

இதை நான் இந்த நான்கு வருடத்தில் மிகவும் அதிகமாக உணர்ந்தேன்.

### எந்த மதமும் தேவையில்லை.....

சிலர் கூறுவார்கள். நான் நல்லவனாகவே வாழ்கிறேன். எனக்கு எந்த மதமும் தேவையில்லை என்று.

உடல் எடை குறைப்பு நிகழ்ச்சிகளை கேள்வி பட்டிருக்கிறீர்களா? நம்முடைய உடல் எடையை குறைக்க நாம் பட்டினியாக இருக்க வேண்டும். நாம் உடற்பயிற்சி செய்ய வேண்டும். ஆனால் பணம் மட்டும் வேறு ஒருவருக்கு கொடுக்க வேண்டும்.

என்னுடைய நண்பர் ஒருவர் இருக்கிறார். அவருடைய எடை நூறுக்கும் மேல் உள்ளது. அவர் இந்த உடல் எடை குறைப்பு நிகழ்ச்சிக்கெல்லாம் போகவில்லை. பட்டினி கிடந்தார். எடையை குறைக்க ஓடினார். நன்றாக உடற்பயிற்சியும் செய்தார்.

அவர் ஒரு நாள் எங்க வீட்டிற்கு வந்தார். எங்கள் வீட்டில் எடை மிஷின் இருக்கிறது. அவர் திருநெல்வேலிக்காரர். வந்ததும், "ஏலே மிஷின எடுலே நா இப்போ ஏறிப் பாக்குறேன்" அப்படினு சொன்னார். ஏறி நின்னா எடை 107லிருந்து 111க்கு போய் விட்டது.

அவர் உடல் எடையை குறைக்க எல்லாமே செய்தார். ஆனால் எடை குறையாமல் ஏறிவிட்டது. எப்படி!!!!!

ஏனென்றால் அந்த துறை சார்ந்த வல்லுனர்கள் சொல்வதை இவர் கேட்கவில்லை. ஏற்கனவே இதற்கென்று ஒரு சில வல்லுனர்கள் இருக்கிறார்கள் அவர்கள் கூறும் விதிமுறைகளை பின்பற்றி செய்திருந்தால் பலன் கிடைத்திருக்கும். ரொம்ப ஈசியாகவும் இருந்திருக்கும்.

நான் பணி புரியும் ஐ.டி. நிறுவனத்தில் கூட வேலை செய்வதற்கு இரண்டு முறைகள் உள்ளது. சிக்மா, மற்றும் அஜைல் எனும் இரு வேலை முறைகள் இருக்கிறது. எல்லோருக்கும் வேலை தெரியும் ஆனால் இந்த இரண்டு முறைகளில் வேலை செய்தால் வேலை இலகுவாக இருக்கும். நிறைய லாபம் கிடைக்கும்.

ஒரு மிகச் சிறந்த வாழ்க்கை முறையை இந்த உலகத்திற்கு கொடுத்திருக்கிற இறைவன். நமக்கு இருக்க கூடிய பிரச்சினைகளுக்கு தீர்வை காட்டிய இறைவன், இந்த உலகத்தை படைத்த இறைவன் ஒரு சிறந்த வாழ்க்கை முறையை கொடுத்திருக்கிறான். இதைப் பற்றி மாற்று மத சகோதரர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்.

அதே போல இந்தியா சுதந்திரம் அடைந்து எழுபது வருடங்கள் ஆகிவிட்டது. எழுபது வருடம் ஆகியும் இன்னும் ஏழைகள் இருக்கிறார்கள் அல்லாவா?

அதாவது "ரிச் கெட் ரிச், புவர் கெட் புவர்" அப்படினு ஒருத்தர் சொன்னாரு. அப்படி சொல்லிட்டு அவர் ரிச் ஆகிட்டாரு. ஆனால் ஏழைகள் ஏழைகளாகவே இருக்கிறார்கள்.

எழுபது வருடங்களில் எவ்வளவு ஐ.ஏ.எஸ் ஆபிஸர்ஸ், எவ்வளவு பொருளாதார வல்லுனர்கள், எவ்வளவு மேதாவிகள். ஆனால் இன்னும் இந்தியாவை ஏழ்மையிலிருந்து விடுவிக்க முடியவில்லை எனறால், நாம் யோசிக்க வேண்டாமா? நம்மிடம் இதற்கான தீர்வே இல்லை. மனிதர்களிடம் இதற்கான தீர்வு நிட்சயமாக இல்லை. அதற்கான ஒரு தீர்வு யாரிடம் உள்ளது என்றால் நம்மை படைத்த இறைவனிடம் உள்ளது. அதை நாம் எடுத்து உபயோகப்படுத்த வேண்டும்.

வேளச்சேரியிலிருந்து, காமாட்சி மருத்துவமனைக்கு போகின்றோம். ஏழு ரூபாய் வாங்குகிறான் ஷேர் ஆட்டோவில். திடீரென ஒரு நாள் பத்து ரூபாய் வாங்குகிறான் என்று வைத்துக் கொள்வோம். நாம் சும்மா விடுவோமா?

அவனிடம் சண்டை பொடுவோம். "யோவ் நா நேத்து வந்தேன்யா ஏழு ரூபாய் கொடுத்து நீ என்னானா பத்து ரூபாய் என்கிறாய்" என்று அவனிடம் சண்டை போட்டு அந்த மூன்று ரூபாயை வாங்கி விடுவோம்.

நமக்குள் ஒரு கர்வம் வரும். "என் கிட்டருந்து மூன்றுபாவ புடுங்க முடியுமா அவனால" அப்படினு ஒரு கெத்தா காமாட்சி மருத்துவ மனையிலிருந்து பஸ்ஸில் ஏறுவோம்.

பஸ்ஸில் ஏறுனா ஏழாயிரூபாவ உருவிடுவான் ஒருத்தன். இப்ப நாம யாருகிட்ட போய் சண்ட போடுறது. யாருகிட்ட போய் சொல்லுறது. பஸ்ஸ போலிஸ் ஷ்டேஷனுக்கு விட முடியுமா? இல்ல கண்டெக்டர் கிட்ட சண்ட போட முடியுமா? ஒன்னும் முடியாது. அமைதியாக போய் இன்னொரு ஏழாயிரூபாவ கொடுத்து இன்னொரு போன வாங்கி வைச்சுப்போம்.

அப்ப நான் சம்பாரித்த பணத்தை நான் தவறுதலாக ஏழாயிரம் ரூபாயை கூட விடுவேன். ஆனால் ஒரு மூன்று ரூபாயைக் கூட யாரோ ஒருவனுக்காக என் சம்பாத்தியத்தில் விட்டுத் தர மாட்டேன். எனும் ஓர் எண்ணம் மக்களுக்கு இருக்கிறது.

அவன் ஒரு மூன்றாவது மனிதன் அவனுக்கு எதற்காக நான் தரவேண்டும் என்ற ஓர் எண்ணம் இருக்கிறது மக்களுக்கு. என்னுடைய நண்பனுக்கு நான் மூணாயிருபா கொடுத்துக் கூட ட்ரீட் வைப்பென். ஆனால் ஒரு மூன்றாவது மனிதனுக்கு மூன்று ரூபாய் கூட கொடுக்க மாட்டேன் எனும் ஒரு எண்ணம் மக்களிடையே இருக்கிறது.

இஸ்லாம் இது இரண்டையும் உடைத்து எரிகிறது.

நீ சம்பாரிப்பதெல்லாம் நீ சம்பாதிப்பதல்ல. அல்லாஹ் உனக்கு கொடுத்தவை. நீ சம்பாதித்ததில் நாலனா கூட உனக்கு வந்து சேராது என்று இஸ்லாம் கூறுகிறது.

அதே போல மக்களிடையே உள்ள அந்த “மூன்றாவது மனிதன்” எனும் எண்ணத்தையும் இஸ்லாம் உடைக்கிறது.

அவன் மூன்றாவது மனிதன் கிடையாது. அவன் உன் சகோதரன். அவன் கஷ்டப்பட்டால் அந்த கஷ்டத்திலிருந்து அவனை பாதுகாத்து எப்படியாவது அவனை மேலே கொண்டு வர வேண்டும் என்று இஸ்லாம் மக்களை ஒன்றிணைக்கிறது.

இன்றைக்கு நம் சமூகத்தில் உள்ள பிரச்சினைகளை தீர்க்க இஸ்லாம் கூறும் சின்ன சின்ன போதனைகளை பின்பற்றினாலே போதும் பிரச்சினைகள் தீர்ந்துவிடும்.

## பொருளாதார அழுத்தம் நமக்குள் எப்படி வருகிறது

ஒருவர் இருக்கிறார். அவர் வியாபாரம் செய்ய வேண்டும் என்று துடிப்பாக இருக்கிறார். அதற்காக ஒருவரிடம் ஒரு லட்சம் ரூபாய் வட்டிக்கு கடன் வாங்குகிறார். சிறிது நாள் கழித்து அவர் வாங்கிய கடனை ஒன்றரை லட்சமாக திருப்பி தர வேண்டும்.

அவர் எதற்காக கடன் வாங்கி வியாபாரம் தொடங்கினார்? தன்னுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக. ஆனால் அவர் தொடங்கிய வியாபாரம் சரியாக நடக்கவில்லை. இப்போது வாங்கிய கடனுக்கும் அதிகமாக ஐம்பதாயிரம் இவர் கொடுக்க வேண்டும். இப்போது என்ன ஆகிறது? அவரது வாழ்வாதாரம் கீழே போய் விடுகிறது.

ஆனால் இஸ்லாம் என்ன சொல்கிறது தெரியுமா?

இஸ்லாம் வட்டி என்ற கொள்கையை உடைக்கிறது. நீ ஒருவனுக்கு பண உதவி செய்கிறாய் என்றால், நான் உனக்கு மேலே அதற்கான பலனைத் தருகின்றேன். நீ பணம் கொடு. என்று அல்லாஹ் சொல்கிறான்.

சரி நீ பணம் கொடுத்துவிட்டாய். அவரால் சொன்ன தேதியில் பணத்தை திருப்பி தர முடியவில்லை என்றால் அவருடைய வியாபாரத்தின் லாபத்தில் நீ ஒரு பகுதியை அழகிய முறையில் வாங்கிக் கொள் என்று இஸ்லாம் சொல்கிறது.

இப்படி நடைமுறைத் தத்துவத்தை பின்பற்றினால் கடன் கொடுத்தவர் கூட வாங்கியவரின் வியாபாரத்தில் அக்கறைக் கொள்வார். கடன் வாங்கியவரிடம் மன அழுத்தம் இருக்காது. இரண்டு பேரும் இணைந்து வியாபாரத்தை முன்னேற்ற வேண்டிய சூழல் ஏற்படும்.

அப்படியும் அந்த வியாபாரம் தோல்வியடைந்து விட்டது என்றால். கடன் கொடுத்தவனிடம் இஸ்லாம் கூறுகிறது. நீ அவருக்கு கொடுத்த பணத்தை அவருக்கு ஹலால் ஆக்கிவிடு. அல்லாஹ்வாகிய நான் உனக்கு அதற்கான கூலியை நாளை நியாயத் தீர்ப்பு நாளில் தருகிறேன் என்று.

இப்படி ஒரு சூழல் இருக்கும் போது யாருடைய வாழ்வாதாரமும் கீழிறங்காது. பொருளாதார மன அழுத்தமும் இருக்காது. மக்களிடையே ஓர் இணக்கம் ஏற்படும்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட கடந்த நான்கு வருடங்களாக இஸ்லாத்தில் நான் பார்த்த ஒரு சில விடயங்கள் தான். இவற்றைத் தவிர இன்னும் நிறைய இருக்கின்றன. அவற்றையெல்லாம் தெரிந்து கொள்ள சகோதர சமூகத்தை சார்ந்தவர்கள் முன்வர வேண்டும்.

**https://www.youtube.com/user/waytoparadiseclass**

**- அஷ்ரஃப் இஸ்லாம்**



# 21 பிப்ரவரி ஒடுக்கப்பட்ட மக்களின் அவலங்களுக்கு எதிராக குரல் கொடுக்கும் நாள்

மால்கம் - X (எ) மாலிக் அல் ஷாபாஸ் அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட நாள் பிப்ரவரி திங்கள் 21. ஆதலால் உலக நாடெங்கிலும் இந்த பிப்ரவரி மாதத்தை அமுக்கப்பட்ட மக்களின், ஒடுக்கப்பட்ட மக்களின் அவலங்களுக்கெதிராக குரல் கொடுக்கும் நாளாக, அறிவித்தார்கள்.

அதனடிப்படையில் நாமும் மால்கம் - X ஷஹீதான நாளான பிப்ரவரி திங்கள் 21ஆம் நாளை அமுக்கப்பட்ட மக்களின், ஒடுக்கப்பட்ட மக்களின் அவலங்களுக்கெதிராக குரல் கொடுக்கும் நாளாக அங்கீகரித்து, இந்தியாவில் தீண்டாமை எனும் வரணாசிரமக் கொள்கையில் சிக்கித் தவிக்கும் மக்களிடத்தில் தொடர்ந்து மால்கம் - X ஷஹீத் குறித்த விழிப்புணர்களை ஏற்படுத்தி வருகின்றோம். அல்ஹம்துலில்லாஹ்.

**சென்னையில் மால்கம் - X**

அதன் தொடர்ச்சியாக சென்னை புளியந்தோப்பு பகுதியில் வேர்கள் வெளியீட்டகத்தின், "மால்கம்- X - அமெரிக்க நிறவெறிக் கொள்கைக்கு எதிராக போராடிய மாவீரனின் வரலாறு - மு.குலாம் முஹம்மது" நூலின் விரிவாக்கப்பட்ட ஐந்தாம் பதிப்பு வெளியிடப்பட்டது.

இதில் பீமாராவ் குடியரசு கட்சியின் தலைவர் இரா.லிங்கேசன், சமூக ஆர்வலர் மற்றும் வழக்குரைஞர். விஷ்ணுகுமார், தமிழ்நாடு மக்கள் கட்சி தலைவர் இளையராஜா, எழுத்தாளர்



ஜி.அத்தேஷ் போன்றவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இறுதியாக தமிழகத்தின் மூத்தப் பத்திரிகையாளரும், வைகறை வெளிச்சம் மாத இதழின் ஆசிரியருமான மு.குலாம் முஹம்மது அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

அமெரிக்க வெள்ளைக் கிருஸ்தவர்களின் நிறவெறிக் கொள்கையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு இஸ்லாத்தை தன் வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொண்ட மால்கம்-X இன் வாழ்க்கை பயணத்தை மிக எளிமையாக எடுத்துரைத்தார்.

மேலும் மால்கம்-X போன்ற தீண்டாமைக்கெதிராக போராடியவர்களை கொலை செய்த வெள்ளை கிருஸ்தவ நிறவெறி











அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

பிப்ரவரி 21

வரலாற்றில் இந்த நாள்
மால்கம் X நாள்
மாலிக் அல் ஷாபாஸ் ஷஹீத் நாள்

ரூபாய் 80 விலையுள்ள மால்கம் X நூல் இந்த மாதம் முழுவதும் ரூ 50–க்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதை பரவலாக்குவதன் முலம் அவரது வாழ்வையும் – இஸ்லாத்தையும் பரவலாக்கிடலாம்.

குறிப்பு : இந்நாளில் நாம் செய்யும் மிகச் சிறந்த தொண்டு இஸ்லாத்தை நம்மோடு வாழ்பவர்களுக்கு எடுத்துச் செல்லுவதுதான்

இவண்
தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்
வைகறை வாசகர் வட்டம், மேட்டுப்பாளையம், பேசி : 8148129887 - 82206 77704

செய்திகளின் உண்மையான மறுபக்கங்களை அறிந்திட, படியுங்கள், பரப்புங்கள்
வைகறை வெளிச்சம் மாத இதழ் ஆண்டு சந்தா 240. தனி இதழ் ரூ.20/


அமைப்பான கூ குளு கிளக்ஸ் என்ற அமைப்பையும், அதே பாணியில் இந்தியாவில் சாதிய வரணாசிரமக் கொள்கைக்கு எதிராக இஸ்லாத்தை முன் வைத்து போராடிய கூரியூர் முஹம்மது அலி ஜின்னா போன்றவர்களை கொலை செய்த பாசிச பரிவாரங்களின் அமைப்புகளையும் ஒப்பிட்டு உரையாற்றிய விதம் பார்வையாளர்களின் சிந்தனைகளை தட்டி எழுப்பியது.

நிகழ்ச்சியில் மால்கம் - X விரிவாக்கப்பட்ட ஐந்தாம் பதிப்பு நூல் ஐம்பது ரூபாய்க்கு விநியோகிக்கப்பட்டது. மக்கள் ஆர்வமுடன் நூலைப் பெற்றுச் சென்றனர்.

### மேட்டுப்பாளையம்

தமிழகத்தின் மேட்டுப்பாளையத்தில் மால்கம்–X குறித்த விழிப்புணர்வை மக்களிடத்தில் ஏற்படுத்த சுவரொட்டிகள் வெளியிடப்பட்டன. பலர் அதைப் பார்த்து நம்மைத் தொடர்பு கொண்டு பயன்பெற்று வருகின்றனர்.

### சமூக வலைதளங்களில் - மால்கம் - X

சமூக வலைதளங்களான பேஸ்புக், வாட்ஸ்ஆப் போன்ற தளங்களிலும் மால்கம் -X குறித்த விழிப்புணர்வு காணொளிகளை வெளியிட்டிருக்கிறோம்.

அந்தக் காணொளிகளை கண்ட பலர் நம்மை தொடர்பு கொண்டு வேர்கள் வெளியீட்டகத்தின் மால்கம்–X வரலாற்று நூலை பெற்றுக் கொண்டனர். அல்ஹம்துலில்லாஹ்.

காணொளிகளுக்கான லிங்க்:

https://www.facebook.com/mnt360.net/videos/304213943625631/

https://www.facebook.com/Themuslimmedia123/videos/322300568392448/

இவண்
***தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்***
***நீதி அமைத்திக்கான மக்கள் இயக்கம்***
***வைகறை வாசகர் வட்டம்***

*அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்*

# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் –<br>ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் – மு. குலாம் முஹம்மத் – பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு – மு. குலாம் முஹ்ம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது – டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு – பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் –134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் – மு. குலாம் முஹ்ம்மது, பக்கம் –48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் – மு. குலாம் முஹம்மது, பக்கம் – 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் – விரிவாக்கப்பட்ட பதிப்பு<br>– மு. குலாம் முஹம்மத் | ரூ. 60.00 |
| 8. | மால்கம் X – மு. குலாம் முஹம்மது, பக்கம் –231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் –31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்– டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்–84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது– ஹிந்தி – டி.எம். மணி, பக்கம் – 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்–292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மத், பக்கம் – 202 | ரூ. 110.00 |
| 17. | தீண்டாமைக்குத் தீர்வு | ரூ. 30.00 |
| 18. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹ்ம்மத் பக்கம்–163 | ரூ. 110.00 |
| 19. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம் மஹம்மத், பக்கம் –143 | ரூ. 90.00 |
| 20. | இஸ்லாமிய நாகரிகம் –<br>முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் – 206 | ரூ. 130.00 |
| 21. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மத், பக்கம் – 140 | ரூ. 70.00 |
| 22. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 23. | சாதி ஒழிந்தது – கன்னடம், | ரூ. 50.00 |
| 24. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 25. | கசாப்–ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மத் பக்கம்:48 | ரூ. 30.00 |
| 26. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் –<br>செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 27. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் – 120 | ரூ. 50.00 |
| 28. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 29. | இஸ்லாமும் விஞ்ஞானமும்– பக்கம் :48 | ரூ. 30.00 |
| 30. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 50.00 |
| 31. | இஸ்லாமும் பெண்களும் – பக்கம் : 112 | ரூ. 60.00 |
| 32. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? பக்கம் : 84 | ரூ. 70.00 |
| 33. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? – விரிவாக்கப்பட்ட பதிப்பு – மு. குலாம் முஹம்மத் | ரூ. 30.00 |
| 34. | திருக்குர் ஆன் கூறும் பொறுமை –<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 80.00 |
| 35. | 26/11 – விசாரணை – நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 36. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் – அ. மார்க்ஸ் | ரூ. 20.00 |

| | | |
|---|---|---|
| 37. | முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்–<br>வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் – பக்கம் : 16 | ரூ. 10.00 |
| 38. | நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? –<br>திரு. லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் – பக்கம் :8 | ரூ. 10.00 |
| 39. | குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? –<br>சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் – அபூ. அஃப்ரஹ் – பக்கம் : 36 | ரூ. 25.00 |
| 40. | இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்–இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? பக்கம்: 27 | ரூ. 20.00 |
| 41. | கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான். கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் | ரூ.25.00 |
| 42. | கூரியூர் ஜின்னா ஷஹீத் – மு. குலாம் முஹம்மத், பக்கம் : 84 | ரூ. 60.00 |
| 43. | முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும், பக்கம் 16 | ரூ. 20.00 |
| 44. | இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு, எஸ்.எம். முஷ்ரிப், IPS, பக்கம் : 64 | ரூ. 30.00 |
| 45. | சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி? பக்கம் : 40 | ரூ. 30.00 |

## எமது விற்பனையில். . .

| | | |
|---|---|---|
| 01. | கோவை கலவரத்தில் எனது சாட்சியம்–<br>A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் | ரூ. 100.00 |
| 02. | மரிஜாப்பி – சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்–<br>ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு | ரூ. 100.00 |
| 03. | குஜராத் கோப்புகள் – மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் –<br>ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, பாரதி புத்தகாலயம் | ரூ. 170.00 |

## BOOKS IN ENGLISH

| | | |
|---|---|---|
| 01. | END OF CASTEISM - T.M. Umar Farooq,<br>English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam | Rs. 50.00 |
| 02. | THE GREAT BETRAYAL - Elyass Davidson, By Pharos Media | Rs. 695.00 |
| 03. | MUHAMMED THE PROPHET FOR OUR TIME - Karen Armstrong | Rs. 325.00 |
| 04. | KAFKA LAND - PREJUDICE, LAW AND COUNTER TERRORISM - Manisha Sethi | Rs. 350.00 |
| 05. | WHO KILLED KARKARE -<br>The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, 5th Edition | Rs. 300.00 |
| 06. | 26/11 - PROBE WAY JUDICIARY ALSO FAILED - S.M. Mushrif | Rs. 275.00 |
| 07. | ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION - Kamaluddin Ahamed | Rs. 60.00 |
| 08. | MUSLIMS AGAINST PARTITION OF INDIA - Shamsul Islam , Pharos Media | Rs. 280.00 |
| 09. | PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN (EPITOMS OF HINDU MUSLIM UNITY)<br>- Syed Naseer Ahamed | Rs. 25.00 |
| 10. | IMAGE AND SUBSTANCE - MODI'S FIRST YEAR OF OFFICE - Nilofar Suhrawardy | Rs. 150.00 |

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

| | | |
|---|---|---|
| 01. | ஜாதி ஒழிந்தது – டி.எம். உமர் பாரூக் | ரூ. 50.00 |
| 02. | நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி – கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் | ரூ. 30.00 |

## வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை – 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

வங்கி மூலம் பணம் செலுத்த விரும்புவோர்:
**DARUL ISLAM FOUNDATION TRUST,**
**CANARA BANK** Account 1287101017301
St. Mary's Road, R.A. Puram, Chennai - 600 028

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002